Sangathamil
# சங்கத்தமிழ்
குரல் - 23 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 ஏப்பிரல் 2022



## குடும்ப ஆட்சியின் விளைவு...
## இராணுவம், பொலிசர் மற்றும் ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் விரைவில் நிறுத்தம்!

## மெய்ப் பாதுகாவலர்களாலேயே அழிபடப்போகும் இராஜபக்சா பரம்பரை!

இராஜபக்ச குடும்பத்தினர், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கும், அமெரிக்க டொலரின் கையிருப்பை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டவரின் உல்லாசத்திற்காக ஏராளமான பாலியல் தொழில் புரியும் வெளிநாட்டு பெண்கள் இராசபக்ச குடும்பத்தினரால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள் என மிகவும் நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இலங்கை மக்களின் எதிர்காலம் என்ன...?**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும் Sri Lanka, India, Germany போன்ற நாடுகளில் தையல் கலையில் பிரபலமான புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
+ Graphic Extra...
Banners
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / h.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

ULAGA VANIKAM உலக வணிகம்
2023 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சுதந்திரத்தை வென்றெடுக்காமல் போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பாயந்து, பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்துபோகவேண்டும் ஆகவே சுதந்திரத்துக்காக போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை!**





தமிழீழத்தில் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் ஆனால் விடுதலைப் புலிகள் படைத்துவிட்ட புரட்சிகர சகாப்தத்தை அவர்களது வீர வரலாற்றை அவர்கள் எதற்காக மடிந்தார்களோ அந்தப் புனித லட்சியத்தை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது

தமிழீழத் தேசிய தலைவர் வே. பிரபாகரன்


## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**முகநூல்** (Facebook)
Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அன்னை பூபதி

"அன்னை பூபதி" தமிழ் ஈழப் பாரம்பரியம் என்றும் நினைவில் வைத்திருக்கும் நாமம். தமிழ் ஈழப் பரம்பரைக்கு வீரத் தாயக் குலத்தை என்றென்றும் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டிய சொல் அது.

ஆம்!

தமிழ் ஈழம் என்னும் குழந்தையைக் கருவிலேயே வேர் அறுக்க வந்த இந்திய வல்லாதிக்கத்தின் இராணுவப் பட்டாளம் ஒருபுறம். தமிழ் ஈழத்தின் ஜனனத்தைக் கனவிலும் காண அருவருத்த சிறீலங்கா அரசின் மிலேச்சத்தனமான இராணுவம் மறுபுறம் இடையிலே காக்கை வன்னியர்களான கைக்கூலிப் பட்டாளங்கள் வேறு.

அந்த மூன்று அசுர சக்திகளும் சேர்ந்து வெறிபிடித்து ஆடின.

தமிழ் ஈழ மண்ணிலே குருதி கொப்பளித்தது. தமிழ் ஈழத்தின் மூலைமுடுக்கெல்லாம் மரண ஓலம். ஊருக்குள் வட்டாரத்துக்கு வட்டாரம், குறிச்சிக்கு குறிச்சி சாவீடுகள்.

இந்தியன் வந்துவிட்டான். பயம் ஏன் இனி நமக்கு? அஹிம்சைப் போர் நடாத்தி வாகை சூடிய மண்ணில் இருந்து அமைதிப்படை வந்துவிட்டது என்று நிம்மதியாக மூச்செறிந்த தமிழ் மக்கள் அந்தோ பரிதாபம்! விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களிலேயே எல்லாம் ஏமாற்று வித்தையாகிவிட்டதைத் தரிசித்தார்கள்.

"அது அமைதிப்படை அல்ல. அமைதியைக் குலைக் வந்த பட்டாளம். அது சமாதானம் செய்ய வந்தவை அல்லவே. சமாதானத்துக்குச் சாவுமணி அடிக்க வந்தவர்கள். ஈழத் தமிழனைக் காப்பாற்ற வந்தவர்கள் அல்லா. அவனுக்குப் பாசக்கயிறு வீச வந்த எமகாதகர்கள்".

தமிழ்பேசும் இனம் கண் கலங்கியது. திகில் அடைந்தது. செய்வதறியாது திகைத்தது.

மனித உரிமைக்குரல் எழுப்பும் புண்ணியவான்கள் வாய் பொத்தி மௌனியாகினர். உள்ளூர்ப் பத்திரிகையாளர்களின் பேனாக்கள் இந்த அவல நிலையை எழுதிக்காட்டத் தயங்கின.

எங்கும் மரணம் அமைதி பயங்கரச் சூழ்நிலை. நாட்டில் நடக்கும் அனர்த்தங்களைத் தமிழனே தமிழனுடன் பேசப் பயப்பட்டான்.

பாவம்! நட்டாற்றில் தமிழ்பேசும் இனம் தத்தளித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது மெல்லிய குரல்கள் கிசுகிசுக்கத் துவங்கின.

ஆம்! நம் மெல்லியலார் முணுமுணுக்க ஆரம்பித்தார். ஊர் வாயை மூட உலை மூடி இல்லை அல்லவா?

தாய்க்குலம் பொறுமை இழந்தது. பெற்றவளுக்கு அல்லவா பிள்ளையின் அருமை தெரியும். கண்ணகி பாண்டியன் அவை சென்று நீதி கோரி நிலைக்கு நம் அன்னையர் தள்ளப்பட்டனர் காட்டுத்தீ போல அன்னையர் ஆவேசம் தமிழ் ஈழமெங்கும் பரவத் தொடங்கியது.

தமிழ் ஈழமெங்கும் அன்னையர் முன்னணிகள் தாபன ரீதியாக அமைக்கப்பட்டன. பொங்கி வந்த காட்டாற்று வெள்ளம் அன்னையர் முன்னணியாக ஆங்காங்கே அமைப்புக்களைத் தோற்றுவித்தன.

மதுரையை எரித்துச் சாம்பலாக்கிய கண்ணகியின் மனோதிடம் அவள் பரம்பரையில் வேரூன்றி விடாதா...!

இந்த மனத்திடம் கொண்ட மங்கையர் மென்குரல் தாய்ப் புலிகளாக உறுமின.

அந்த ஆவேச உறுமல் மட்டுமா நகரிலே பலமாக எதிரொலித்தது.

நான்கு சுவர்களுக்குள் எது நடந்தாலும் நமக்குள் இருக்கட்டும் என்று இருந்த பொன்னம்மாவும், கனகம்மாவும் முக்காட்டினுள் அடக்கமாக இருந்த பரீதாவும், பாத்தும்மாவும் வேலிக்கடப்பைத் தாண்டி வீதிக்கு வந்தனர்.

அன்னையர் முன்னணியாக அணி வகுத்தனர்.

அரசாங்க அதிபர் முதல் இராணுவ உயர் அதிகாரிகள் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலங்களாகச் சென்று மகஜர்கள் சமர்ப்பித்து நியாயம் கோரினர். அந்த அலுவலகப் படிகளில் இருந்து அஹிம்சைப் போரில் ஈடுபட்டனர்.

பலன் என்னவோ பூஜ்யம் தான்!

அன்னையர் மத்தியில் இது விரக்தியைத் தோற்று வித்தது.




ஆணவம் அடங்காவிட்டாலும் பரவாயில்லை. அது தலைவிரித்தாடிக் கொண்டே இருந்தது.

பத்து மாதம் சுமந்த தாம் படாத பாடுபட்டு வளர்த்து விட்ட பிள்ளைகள் நாளுக்கு நாள் வேட்டை ஆடப்படுகின்றனர். இந்தியப் படை முகாம்கள் எல்லாம் கசாப்புக் கடைகளாக மாறி வருகின்றன.

மடியில் வைத்து அம்புலி மாமா காட்டிச் சோறூட்டி வளர்த்தெடுத்த பிள்ளைகள் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் அமர்ந்து ஆறுதலாக ஒரு வாய் சோறு உண்ணமுடியவில்லையே!

சோறு போட அன்னை சமையலறை செல்கின்றாள். மைந்தன் கை அலம்புகின்றான். அதற்குள்... "இரைகின்றது இந்தியன் ஜீப். இந்தா ஒழுங்கையில் கசமுசா சத்தம். அடுத்த வீட்டுப் பொடினை சோற்றுக் கையுடன் கொண்டு செல்கிறார்கள். இது என்ன பாவம் செய்தோம். இறைவனே! எங்கள் பிள்ளைகளைக் கட்டாக்காலி மாடுகளைப் பிணைத்துச் செல்வது போல கயிறுகட்டிச் சாய்த்துச் செல்கின்றார்களே பாவிகள்" என்று புலம்பல்.

அன்னையர் விரக்தி வீறு கொண்டெழச் செய்கிறது இந்த அவலக் காட்சிகள்.

தாய்மாரின் பொங்கி வரும் உணர்ச்சிப் பிரவாகத்தை அன்னையர் முன்னணி நிர்வாகிகள் அணைகட்டி ஆக்கபூர்வமான செயல் வடிவம் கொடுக்க முன்வந்தனர்.

காலம் காலமாகக் கண்ணகித் தெய்வத்துக்கு வைகாசிப் பூரணை தோறும் விழாவெடுத்து. அவளின் பத்தினத் தன்மையைப் போற்றிய மட்டக்களப்புத் தமிழக மாதர் இதில் முந்திக் கொண்டனர்.

"இனி யோசிப்பதில் யாதொரு பயனுமில்லை. அஹிம்சைப் போர் நடாத்தி உருவாக்கிய சுதந்திர இந்தியாவில் இருந்துதான் அமைதிப்படைவந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகின்றது. அந்த அஹிம்சை வழியில் போராட்டம் நடாத்துவோம். மன மாற்றம் அவர்களுக்கு ஏற்படும்" என்று அன்னையர் ஒரு முடிவுக்கு வந்தனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணி நிர்வாகிகள் கூடினர். பல மணித்தியாலங்கள் கலந்தாலோசனை நடந்தது.

அன்னையர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானிக்கப்பட்டது.




யார் அந்த ஒருவர்! களப்பலியாகப் போகும் அந்த அன்னை யார்?

போர்க்களத்திலே மகன் புறமுதுகு காட்டி ஓடவில்லை. மார்பிலே வேல் பாய்ந்து வீரமரணத்தை வரவேற்றுள்ளான் என்று புளகாங்கிதம் அடைந்த சங்கத் தமிழ் வீரத் தாயாக இங்கு அந்த மாதரசி எங்கே!

“இதே நான் வருகின்றேன்” என்கிறது அன்னை பூபதியின் கணீர்க்குரல்.

♦ ♦ ♦

அன்னை பூபதி நாற்பத்தெட்டு வயது நடுத்தர குடும்பத் தலைவி. மட்டக்களப்பு மாநிலத்தின் ஒரு கிராமத்துப் பெண்.

இம்மாநிலத்தின் வடபகுதியில் உள்ள கிரான் அவர் சொந்த ஊர். கிரான் ஒரு பழம்பெரும் தமிழ்க் கிராமம். மருதமும், நெய்தலும் மயங்கிய பேரூர் அது. வீரமறவர் வாழும் பூமி.

அங்கே 1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் சூரியன் கண்ணமுத்து என்ற ஏழை விவசாயிக்கும் பெரிய பிள்ளை என்ற வீரத்தாய்க்கும் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் அன்னை பூபதி. உடன்பிறந்தவர்கள் இரு சகோதரர்கள்; இரு சகோதரிகள்.

அக்காலக் கிராமிய வழக்கப்படி சித்திரா பௌர்ணமியில் வரும் சித்திரைக் கதை நன்நாளன்று ஏடு தொடக்கப்பட்டு, பெற்றோர் தமது மூத்த மகள் பூபதியை ஊரில் உள்ள பாடசாலையில் சேர்த்தனர். அந்தக்கால நிலவரப்படி எழுத, வாசிக்கத் தெரிந்தவுடன் சிறுமி பூபதி தமது ஆரம்பக் கல்வியுடன் படிப்பை நிறுத்திக் கொண்டார்.

மரபு பிறழாத அக்காலக் கிராமிய சமூக சம்பிரதாயப்படி பன்னீராண்டுப் பூபதிக்கும், அவ்வூரில் உறவினரான முத்துலிங்கம் என்னும் விவசாயிக்கும் திருமணம் நடந்தேறியது.

வேங்கையின் மைந்தர்களாக அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். அவ்விரு புதல்வர்களையும் அன்னை பூபதி தமது இரு கண்களாகப் பாதுகாத்து வளர்த்து வந்தார்.

இரண்டு புலிக்குட்டிகளோடு ஆனந்தமாக இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்த அன்னை பூபதியின் குடும்ப வாழ்வில் எதிர்பாராத விதமாகக் கணவர் முத்துலிங்கம் திடீர் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார்.

வாழ வேண்டிய வயதில், வாழ்ந்து ஆகவேண்டிய பருவத்தில் அன்னை பூபதி இளம் விதவையானார்.

அன்னை பூபதிய மனம் கலங்கவில்லை. துணிச்சலுடன் செயற்பட்டார். அல்லும் பகலும் பாடுபட்டார். கண்மணி இருவரும் காளைகளாக வளர்ந்து கொண்டிருந்தனர்.

வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய வயதில் இளம் விதவையான பலர் வாடி வதங்கித்தான் போகிறார்கள்.அதற்கு விடிவு காட்ட நமது சமூகம் வழிவகை செய்யாவிட்டாலும் வழியாவது விட்டு வைக்கிறதா என்ன?

இந்த சமூக விவகாரத்தைப் பார்த்த நம் புரட்சிக்கவி பாரதிதாசன். “ கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே - இங்கு வேரிற் பழுத்த பலா” என்று மனம் புழுங்கினான்.

இரண்டு ஆண் பிள்ளைகளையும் தலையில் கட்டிக் கொண்டு தனிக்கட்டையாக எப்படிக் காலத்தை ஓட்டப்போகிறாய்? என்று உறவினர்கள் வேறு பூபதியை நச்சரித்தனர்.

பூபதி கடவுள் மேல் பாரத்தைப் போட்டுக் காலத்தை நகர்த்தினார்.

♦ ♦ ♦

காலம் உருண்டோடியது.

பூபதி வாழ்வில் பூங்காற்று வீசியது.

ஆம்!

அவ்வூரில் தாரம் இழந்து, குழந்தை குட்டிகளைப் பராமரிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் கணபதிப்பிள்ளை.

கணபதிப்பிள்ளை புகையிரதப் பகுதியில் பல வருடகாலங்களாகக் கங்காணியாகத் தொழில் பார்த்து வருபவர். தினமும் வீட்டைவிட்டு தூர இடங்களுக்கு வேலைக்குச் சென்று தங்கி வர வேண்டியவர்.

அவர் மனைவி இரு ஆண்களையும் இரு பெண்களையும் பெற்றுவிட்டு ஐந்தாம் பிள்ளையைப் பிரசவிக்கக் கார்ப்பிணியாக இருந்தபோது காலன் வசப்பட்டு விட்டார்.

ஊர்ப் பெரியவர்கள் பார்த்து கணபதிப்பிள்ளை - பூபதி குடும்பச் சுமைகளையும், பாரங்களையும் கணித்து அவ்விருவரையும் மறுமணத்தில் இணைத்து வைத்து மறுவாழ்வு கொடுத்தனர்.

இது 1962 இல் நடந்தேறியது.

பழைமையிலும் காலத்துக்கொவ்வாத சில பாரம்பரியங்களிலும் ஊறிப்போய் விட்ட நம் சமூகத்தில் அதுவும் பழம்பெருமையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கும் கிராமிய சமூகத்தில் ஆறுதல் தரும் சம்பவமாகும்.

அந்த இரண்டாந்தார இல்லறம் கண்ணூறு, நாவூறு படாமல் கலகலப்பாகவே அமைந்தது.

இப் புதுத் திருமணத்தில் கணபதிப்பிள்ளை - பூபதி தம்பதிக்கு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்தனர்.

இப்பொழுது அன்னை பூபதி பத்து விழுதுகள் கொண்ட பலமான ஆலமரமானார்.

♦ ♦ ♦

குடும்ப வாழ்வில் நிமிர்ந்து நின்ற அன்னை பூபதிக்குத் தமிழ் ஈழத்தில் பல தாய்மாருக்கு நிகழ்ந்தது போல சோதனைகளும், வேதனைகளும் முட்டி மோதின.

அன்னை பூபதிக்கு முதல் தாரத்தில் பிறந்த இரண்டாம் மகன் திருமணமாகி ஒரு பிள்ளைக்குத் தந்தை ஆகியிருந்தார். 28 வயதான அவர் சிறீலங்கா இராணுவத்தால் துடிதுடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அது மட்டுமா?

அவரது மூத்த மகன் திருமணமாகி நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானபோது அதே சிறீலங்கா இராணுவத்தால் கைதாகி காலியில் உள்ள பூஸா முகாமில் நான்கு வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப்பட்டார்.

அது போதாதா?

தமது இரண்டாம் திருமணத்தின்பின் பிறந்த 23 வயதான மகனையும் அந்த இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்தனர்.

அன்னை பூபதியின் குடும்பத்தில் பேரினவாத அரக்கன் புகுந்து விளையாடினான். அவன் மனம் போனபடி அந்தக் குடும்பத்தை மிதி மதியென மதித்துச் சக்கையாக்கினான்.

அன்னை பூபதிக்குச் சோதனைமேல் சோதனை. ஆயினும், அவர் மனம் தளரவில்லை.

மாறாக, தன் வாழ்வில் குறுக்கிட்ட துன்ப துயரச் சம்பவங்களால் அவர் நெஞ்சுரம் இறுக்கமடைந்தவராகவே செயற்பட்டார்.

அன்னை பூபதி தமது சிறுபராயம் முதல் அண்டை அயலார் வருவோர் போவோர்க்கெல்லாம் பார்த்தும் பாராமலும் உதவி செய்யும் இயல்புடையவர்.

ஊர் வேலை என்றால் முந்திரிக்கொட்டையாய் முந்திக் கொள்ளுவார் அவர். ஊர்ப் பணிகளில் அவரது பங்களிப்பு இல்லாத சிரமதானங்களோ கிடையாது. எல்லா வற்றுக்கும் தலைகாட்டுவார். தலைகொடுத்துச் செயற்படுவார்.

கணவர் கணபதிப்பிள்ளையின் பென்சன் பணத்தையும் பொதுப் பணிக்காகச் செலவு செய்துவிட்டு வெறுங்கையுடன் திரும்பும் சம்பவங்களும் நடந்துள்ளன.

பொதுவாழ்வில் அவருக்கு அப்படியொரு வேகமும், தாகமும். பிள்ளைகள் அனைவரும் தங்கள் தங்கள் கால்களில் நிற்கத் தொடங்கினர். கணவர் கணபதிப்பிள்ளைக் கங்காணியார் சேவையினின்று இளைப்பாறி ஓய்வூதியம் பெறுபவராயிருந்தார். இதனால் அன்னை பூபதிக்குப் பொதுப் பணிகளில் இறங்க மேலும் வாய்ப்பு கிடைத்தது.

கணவரும் அவருக்கு இசைந்து கொடுத்தார்.

♦ ♦ ♦

பிற்காலத்தில் மட்டக்களப்பு நகரை அடுத்துள்ள நாவற்கேணியில் அன்னை பூபதி குடும்பம் வசித்துவந்தபோது அன்னையர் முன்னணியுடன் தொடர்பு ஏற்பட்டது.

“நான் தமிழருக்காகச் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போகின்றேன்” என்று அன்னை பூபதி அன்புக் கணவரிடம் குழைந்தார்.

“ உன் விருப்பப்படி செய்” என்று கணபதிப்பிள்ளை வாதப் பிரதிவாதங்களுக்கெல்லாம் இடம் வைக்காமல் பதிலளித்தார்.

கால் நூற்றாண்டு கடந்த தமது இல்லற வாழ்வில் மனைவியோடு அனுசரித்துப் போனவர் கணபதிப்பிள்ளைக் கங்காணியார்.

அன்னை பூபதி சாகும்வரை உண்ணவிரதம் இருப்பது என மட்டக்களப்பு அன்னையர் முன்னணி ஏற்றுக் கொண்டது. அதற்கான சம்மதக் கடிதத்தையும் அவர் அன்னையர் முன்னணி நிர்வாகிகளுக்குக் கையளித்து விட்டார்.

அந்த மகத்தான நோன்பு ஆரம்பிக்கும் நாளும் குறித்தாயிற்று.

அன்னையர் முன்னணி சார்பில் அன்னை பூபதி ஏன் இந்த அக்கினிப் பரீட்சையில் இறங்கப் போகின்றார்?

தியாகத் தீயில் ஏன் தம்மை ஆகுதி ஆக்கப்பார்க்கிறார். அதனால் அன்னையர் எதிர்பார்ப்புத்தான் என்ன?

மட்டக்களப்பு அன்னையர் முன்னணி அது சம்பந்தமாக பின் வரும் அறிவிப்பை விடுத்தது.

* அமைதி காக்கவந்த இந்தியப்படை அதற்கு மாறாகத் தமிழ் ஈழத்தில் செய்து வரும் மனித வேட்டைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

* நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட்டு சுமுகநிலை தோன்றத் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து தீர்வு காணவேண்டும்.

இக் கோரிக்கைகள் முன்நிறுத்தப்பட்டு “சாகும்வரை உண்ணா விரதம்” என்னும் அஹிம்சைப் போர் பிரகடனம் செய்யப்பட்டது.

♦ ♦ ♦

அன்று 19.03.1988 சனிக்கிழமை.
மட்டக்களப்பு எழுவானில் காலைக் கதிரவன் தியாகச் செம்மையுடன் உதயமாகின்றான்.

இதிகாசப் புகழ்பூத்த அமிர்தகழி சிற மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலைப் பூசைக்கு கோயில் மணியோசை அழைக்கிறது.

அன்று வழக்கத்துக்கு மாறாக ஆலயத்தில் ஆயிரக்கணக்கில் அன்னையர் கூட்டம் தரிசனத்துக்குத் திரண்டிருக்கின்றனர்.

அங்கே கதாநாயகியாக நம் அன்னை பூபதி சிரமேல் கூப்பிய கரங்களுடன் மாமாங்கரை வலம் வந்து தரிசிக்கின்றார்.

கற்பூரம் கொழுத்தித் தேங்காய் அடித்துப் பிள்ளையார் தரிசனத்தோடு அந்த ஆலய முன்றலுக்கு அன்னை பூபதி சிரித்த முகத்துடன் வருகின்றார்.

அவரை ஏராளமான அன்னையர் சூழ்ந்து கொண்டு வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றனர்.

ஆலய முன்றலில் அமைந்திருக்கும் குருந்தை மரம்.

மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவனே குருவாக வந்து ஞானேபதேச தீட்சை கொடுத்ததும் திருப்பெருந்துறையில் ஒரு குருந்தை மரத்தடியில் அல்லவா!

அந்தக் குருந்தை மரத்தினகீழ் அமைக்கப்பட்டிருந்த மேடையை நோக்கி அன்னை பூபதி நடக்கின்றார்.

அப்பொழுது நேரம் சரியாக காலை 10:34 மணி.

அன்னை பூபதி மேடையில் ஏறி நின்று அந்த ஆலய வீதியில் திரண்டு நிற்கும் ஆயிரமாயிரம் மக்களை நோக்கி கரம் குவிக்கின்றார்.

மக்கள் கரகோசம் வான் அதிர்கிறது. அன்னையார் மத்தியில் ஒரு பெருமிதம், இறுமாப்பு.

இந்தியப் படைகளின் ஆடம்பர ரோந்துகளோ, மிரட்டல்களோ அந்த வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தின் எழுச்சிக்கிடையே செல்லாக்காசாகிவிட்டன.

அன்னை பூபதி மேடையில் அமைதியாக அமர்கின்றார்.

அதோ! “அஹிம்சை யுத்தம் ஆரம்பித்து விட்டது”.

“எமது பிள்ளைகள் எம்மைப் பாதுகாக்கத்தான் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அவர்களால் நாம் பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே உள்ளது. ஆனால் எம்மைப் பாதுகாக்கவே வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட்டனர். இதனைத் தடுக்கலாம் என்று உறுதியுடன் நாம் இப்போரில் இறங்கியுள்ளோம். வீரமரணத்தைக் கண்டு நாம் பழகிப் போனவர்களே! என் இறப்பை அடுத்தும் நோக்கை அடைவோம். ஒரு போதும் அன்னையர் முன்னணி தளராது” என்று கூடியிருந்தோர் முன்னிலையில் அன்னை பூபதி சொல்கிறார்.

புல்லரித்தது.

மூத்தவராகவும், முக்கண் முதல்வனாகவும் இறைவன் ஒரு சேரக் காட்சி நல்கி அருள் பாலிக்கும் அந்த திரு மாமாங்கேஸ்வரர் ஆலய வீதியில் தேவார - திருவாசகத்திருப்பதிகங்களின் பண்ணிசை எழுகிறது.

கூட்டுப் பிரார்த்தனைகளால் ஆலய வீதியிலே பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

“ஓதுவோம் வாருங்கள்” என இஸ்லாமிய சகோதரர்களின் பிரார்த்தனைப் பாடல்கள் முழங்குகின்றன.

கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கப்படுகின்றன.

என்ன அற்புதம்!

ஆலய முன்றலில் என்றும் கண்டிராத சர்வமதப் பிரார்த்தனை ஆரவாரங்கள்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, புரட்சிக் கீதங்களாலும் உணர்ச்சி மேலிட, பக்குவமான சூழ்நிலையில் அன்னை பூபதி



அன்னையின் உண்ணாவிரதத்தை தடுத்து நிறுத்துவதற்காக மேடையை முற்றுகையிட்ட நிலையில் இந்தி- இராணுவத்தினர்

சாகும் வரை உண்ணாவிரதத்தை மிக்க அடக்கத்தோடும், திடசித்தத்தோடும் மேற்கொள்ளுகின்றார்.

அன்று அவருக்கு ஆதரவு காட்டிப் பெண்மணிகள் பலர் ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பு அனுட்டிக்கின்றனர்.

அன்றிரவு முழுவதும் அன்னையராலும், பொதுமக்களாலும் நிறைந்து அந்த ஆலய முன்றல் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றது. வருடா வருடம் அங்கு நடந்தேறும் “தீர்த்தக்கரைக்” காட்சியாகக் கலகலப்படைகிறது.

அடுத்த நாள் பொழுது புலருகிறது.

என்ன ஆச்சரியம்!

புத்தகப் பைகளும், கையுமாகப் பாடசாலை புறப்பட்டுப் போன மாணவரும் மாணவிகளும் எங்கே பேரணி வகுத்துச் செல்லுகின்றார்கள்!

பாடசாலைகள் பலவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

மட்டு மாநகரில் பல்வேறு திசைகளிலும் அமைந்துள்ள கல்லூரிகளில் இருந்து ஆயிரமாயிரம் மாணவிகள், மாணவர்கள் நகர வீதிகளில் அமைதி ஊர்வலங்களை நடாத்தியபடி அன்னை பூபதியின் அகிம்சைப் போராட்டத்துக்கு ஆதரவு காட்டி மாமாங்கத்தை நோக்கிப் பேரணியாகச் செல்கின்றனர்.

“இந்தியப் படையே திரும்பிப் போ!”

“அன்னை பூபதியைச் சாகடிக்காதே!!”

“புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வைக்காண்!!!”

“தமிழீழ மண்ணைச் கூடுகாடாக்காதே!!!!” இப்படி எழுதிய சுலோகங்கள் பேரணிகளில் காணப்படுகின்றன.

அன்னை பூபதிக்கு முன்பாக மாணவரும், மாணவிகளும் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அன்னைக்குத் துணையாக அடையாள உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இந்த எழுச்சிக் கோலங்கள் தினமும் அயர்வின்றித், தளர்வின்றி நடந்த வண்ணம் இருக்கின்றன.

பாடசாலைப் பிள்ளைகள் மாத்திரமா!

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் ஒவ்வொரு நாளும் அன்னையர் முன்னணிக்கிளைகள், மாதர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள், இளைஞர் அமைப்புக்கள் என்றெல்லாம் அன்னை பூபதி ஆதரவுப் பேரணிகள் அன்னையை நோக்கி அலை அலையாக வந்து கொண்டிருக்கின்றன.

கூட்டத்தினைக் கட்டுப்படுத்த யுவதிகளும், வாலிபர்களும் தொண்டர் படையாக மாறினர். பொதுமக்களை ஒழுங்குபடுத்தினர்.

♦ ♦ ♦

அன்னை பூபதி மக்களின் கரை கடந்த உற்சாகத்துக்கு மத்தியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் தமது ஆயுட் கால உண்ணாவிரதத்தை உறுதியோடு கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

நாளாக ஆக அன்னை பூபதியைச் சோர்வு தட்டுகிறது. தலைச் சுற்றலும் ஆரம்பிக்கின்றது. போகப் போக திடீர் மயக்கத்தில் சரிகின்றார்.

எனினும் மறுகணமே தன்னைச் சுதாகரித்துக் கொள்ளுகிறார்.

வைத்தியர்கள் அவரைத் தினமும் வந்து பரிசோதித்துச் செல்லுகின்றனர். முறைப்படி வைத்திய அறிக்கைகள் நாளாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அன்னை இவ்வாறு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார். இடையில் அமைதிப்படை அதிகாரிகள், இந்திய வீரர்கள் வந்து போகின்றனர்.

அன்னைக்கு அனுதாபம் தெரிவிக்க வரவில்லை. மாறாக இப்போராட்டத்தில் உறுதியையும், அதற்கு மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியையும் கண்ட இந்திய வீரர்களுக்கு வயிற்றைக் கலக்கியது. நெஞ்சை அழுத்தியது.

அன்னையிடம் சமாதானம் சொல்லப் பார்த்தனர். அன்னையோ இந்திய வீரர்களைக் கண்டால் காளியாக மாறினார்.

மிரட்டினர் பாய்ச்சா, பலிக்கவில்லை.

கணவர் கணபதிப்பிள்ளை, மக்கள், மருமக்கள் என்று தூண்டில் போட்டு விரதத்தைக் குழப்பியடிக்க எத்தனித்தனர். ஆம் முடியவில்லை.

கணபதிப்பிள்ளை கங்காணியார் குடும்பம் இலேசுப்பட்டதல்ல. வீரத் தாயின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா?

இந்தியப் படையினர் போட்ட இரையை அவர்கள் விழுங்குவதாவது, இந்தியாவின் சாணக்கியத் தந்திரங்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதங்கள், மறியல் இயக்கங்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் வெள்ளையனை வெளியேற்றிச் சுதந்திரம் ஈட்டிய நவ பாரதத்திலிருந்து வந்த ஜவான்களா அண்ணல் வழியில் அன்னை பூபதி நடாத்தும் அகிம்சைப் போராட்டத்தை அலட்சியம் செய்கிறார்கள்? குழப்பியடிக்க முனைகின்றார்கள்?

உண்மையிலேலே இவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்களா? அந்த இராம இராஜ்யத்திலிருந்துதான் வந்தவர்களா? தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்றெடுத்த அத்தாயகத்திலிருந்து புறப்பட்டவர்களா?

இப்படித் தமிழ் ஈழ நாட்டவர் மட்டுமல்ல, மனித உரிமை பாராட்டுபவர்களும் ஏன் மகாத்மா காந்தியின் அஹிம்சைத் தத்துவத்தில் மதிப்பும் - மரியாதையும் வைத்த உலக மக்களும் மூக்கின் மேல் விரல் வைத்து வியப்புற்றனர்: ஐயுற்றனர்.

அமைதி காக்க வந்து மிஞ்சியிருந்த அமைதியையும் குலைத்துக் கொண்டிருந்த அமைதிப் படையினர் மிது சர்வதேசங்களிலும் வாழும் மனிதாபிமானிகள் அருவருப்புக் கொண்டனர்.

♦ ♦ ♦

நாட்கள் நகர்கின்றன. அன்னையின் நாடித்துடிப்புகள் அச்சத்தைத் தருகின்றன. வைத்தியர்கள் பார்வையில் சந்தேகம் நிழலாடுகின்றது.

இனிமேல் ஊசி மருந்து பாய்ச்சுவதைத் தவிர வேறு வழியில்லை என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

அன்னை பூபதியோ “எந்தவொரு மருந்தும் எனக்குத் தேவையில்லை. நீங்கள் போய்விடுங்கள்” என்று நா தளதளக்கக்கூறி மறுக்கின்றார்.

அந்த மயக்க வேளையிலும் தன்னை வைத்தியர்கள் நெருக்கி ஊசி போடாதவாறு எச்சரிக்கையாகவே இருந்தார்.

அன்னையின் பிடிவாதமே வெல்கிறது.

ஒரு பக்கம் மக்களின் கரை கடந்த உத்வேசம். மறு பக்கம் மனித ஜீவனைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற வைத்தியர்களின் முஸ்தீபுகள். இடையிடையே உண்ணா நோன்பை குழப்பியடிக்கும் இந்திய வீரர்களின் தந்திரோபாயங்கள்.

தமது இலட்சியத்தை நிறைவேற்றிக் கோரிக்கைகளை வென்றெடுக்கத் தமது இன்னு யிரைத் துச்சமென மதித்துச் சத்திய யுத்தத்தைத் தொடர்கின்றார்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு பதின்மூன்று இருவாரங் களல்ல. முழுமையாக முப்பதியொரு நாட்கள். அந்த சத்தியப்போர் நடந்து 32 ஆம் நாளில் திடுதிப்பென்று ஓய்கிறது.

அங்கு குழுமி நின்ற மக்கள் பேசவில்லை; அசையவில்லை; அத்தனை மக்களின் கண்களும் நீரைச் சொரிகின்றனவே!

அன்னை பூபதியே பிரிந்து விட்டாயா? இத்தனை நாளுமாக இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் உறுதியுடன் இருந்த உன் எழில் உடல் என்ன சாய்ந்து விட்டதாதாயே? எந்த உயிரைப் பணயம் வைத்து தமிழ் ஈழ மண்ணுக்கு சமாதானத்தைக் கொண்டு வர களத்தில் இறங்கினீரோ இந்த உன்னத "பணயம்" பறி போய் விட்டதா அம்மா? உன் சத்தியப் பயணம் பாதியில் முடிந்து விட்டதா தாயே!

♦ ♦ ♦

சும்மா விட்டார் களா? உயிரற்ற அந்த உடலுக்கும் உபத்திரவம் தர முயலு கின்றனரே!

நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் எனச் சாக்குப் போக்குச் சொல்லி அன்னையின் உடலைத் தாங்கள் பொறுப்பேற்றுப் புதைக்க எத்தனிக்கின்றனர்.

கணவர் கணபதிப்பிள்ளையைத் தனி மைக்குக் கூட்டிச்சென்று ஒரு வீரர் மிரட் டுகின்றார்.

"நியாயம் தேடித்தான் என் மனைவி உயிர்விட்டாள்"

கணபதிப்பிள்ளை கங்காணியாரின் அச்சொட்டான பதில் இது அமைதிப்படையினருக்கு.

அன்னையர் முன்னணி உறுப்பினர்களும். உறவினர்களும், பொதுமக்களும் அன்னையின் உடலைச் சூழ்ந்து பாதுகாத்துக் கொண்டதால் பிரேதத்தை அப்புறப்படுத்தி சூட்டோடு சூடாக அழித்துவிடும் இந்தியப் படையினரின் முயற்சிகள் முறியடிக் கப்பட்டன.

படையினர் தலையைத் தொங்கப் போட்டபடி முகாம் திரும்பினர்.
அன்னையர் முன்னணியின் கையே ஓங்கியது.



முகத்துவாரம் வீதியில் உள்ள மட்டக்களப்பு அன்னையர் முன் னணியின் அலுவலகத் துக்கு அன்னையின் பூதவுடல் கொண்டு சென்று வைக்கப்பட்டு, அடுத்துள்ள விளை யாட்டுத் திடலில் நிறுவப்பட்ட விசேட பந்தலில் அவ்வுடல் பொதுமக்களின் இறுதி அஞ் சலிக்காக வைக்கப்பட்டது.

♦ ♦ ♦

நாலாபுறங்களிலுமிருந்து மக்கள் வெள்ளம் சாரி, சாரியாக வந்து அன்னைக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றனர். தூய வெள்ளை ஆடையணிந்த மாணவர்களும், மாணவி களும் ஊர்வலமாக வந்து அன்னை யின் பூதவுடலைச் சுற்றி அணி வகுத்து நிற்கின்றனர்.

தியாகச் செம்மலின் புனித உடலைத் தரிசிக் கும் மக்கள் " விம்மி விம்மி" அழும் சத்தம் அந்த நிசப்தத்தில் கேட்கிறது.

மலர் மாலைகளாலும், மலர் வளையங் களாலும் பூதவுடலும், அம்மேடையும் அலங் கரிக்கப்பட்டுள்ளன. சந்தனக்குச் சிகளிலிருந்து வெளிவரம் புகை வான்நோக்கிச்செல்லுவது "அமைதி பெறுங்கள்! உங்கள் அன்னை அங்கு தான் இருக் கின்றாள்" என்று கூறுவது போல் இருக்கிறது.

இந்தியப் படையினரின் கழுகுப் பார்வைக்கும் அகப்படாது புலிகள் எப்படியோ மலர் வளையமொன்றைக் கொண்டு வந்து அன்னையின் புனித பாதத்தில் அர்ப்பணித்திருந்தனர்.

அதில் இந்த வாசகம் உள்ளது:
"விடுதலைக்குத் தன்னுயிர் நீத்த எங்கள் அன்னைக்கு வீரவணக்கம்"

பாம்பின் கால் பாம்பறியும். வீரியத்தை வீரனே மெச்சுவான் அல்லவா?

மட்டுமா நகரம் கதறி அழுகிறது. தமிழீழம் எங்கும் சோக மாகியது. ஒவ்வொரு வீட்டிலும் மரண ஓலமே கேட்கிறது.

அன்னை பூபதி உண்ணாவிரதம் பற்றியும் மக்கள் எழுச்சி தொடர்பாகவும் நாளாந்தம் முதற் பக்கச் செய்திகளாக வெளி யிட்டு வந்த ஈழத்து அனைத்துப் பத்திரிகைகளும், கடல் கடந்த நாடுகளில் வெளியாகும் தினசரிகளும் தங்கள் நடுநடுங்கிய கரங்களால் அன்னை யின் ஆருயிர் 19-04-1988 செவ்வாய்க் கிழமை காலை 8:45 மணிக்குப் பிரிந்தது நெஞ்சத் துணுக்குறச் செய்த அந்தச் செய்தியை சோக வரிகளில் எழுதி வெளியிட்டன.

## "பூபதி உயிர்த்தியாகம் தமிழீழத்தில் சோக வெள்ளம்"

இப்படி ஒரு தமிழ்த் தினசரி குறிப்பிடுகிறது. எங்கும் கறுப்புக் கொடிகளும், வெள்ளைக் கொடிகளும் தெருக்கள் ஒழுங்கைகள் எல்லாம் வாழை மரங்கள் நட்டு, துக்கம் வெளிப்படுத்தப்படு கின்றது. முக்கிய சந்திகள் தோறும் அன்னை பூபதியின் மறைவு இரங்கல் பதாகைள் தொங்கவிடப்படுகின்றன.

தத்தம் அலுவல்களை அப்படி அப்படியே விட்டவாறு ஊழியர் களும், கடைக்காரர்களும் அன்னைக்கு அஞ்சலி செய்ய திரள் கின்றார்கள். வகுப்பறைகளில் புத்தகங்களை விட்டுவிட்டு அன் னையைக் காண ஓடிவந்த மாணவர்களும் மாணவிகளும் - அங்கு சிலையாகினர். சமையல் கட்டில் மரக் கறியும், கையு மாக இருந்த அன்னையர் களும் அப்படித்தான்.

அன்னை பிரிந்ததை எப்படித்தான் தாங்குமோ இந்த ஈழம். பூபதியம்மா...

♦ ♦ ♦




பல பாகங்களில் இருந்தும் ஏராளமான இரங்கற் பிரசுரங்கள். பல்வேறு சமய, பொது, கல்வி ஸ்தாபனங்களால் வெளியிடப்பட்ட வண்ணம் இருந்தன. மும்மத குருமார்கள் அன்னையருகில் வந்து பிரார்த்னை செய்கின் றனர். கவிதாஞ்சலியும் சமர்ப்பிக் கப்பட்டது.

ஒரு சாமானியப் பெண்ணின் மறைவுக்கு இத்தனை மரியா தையா? இந்தியப்படை யினரும், கைக்கூலிகளும் நெஞ்சம் பொருமினர். மீண்டும் அன்னையின் பூதவு டலைக் கொண்டு செல்லும் ஒரு உபாயத்தில் ஈடுபட்டு அன்னையர் முன்னணி யின் எதிர்ப்பால் தோல்வி கண்டனர்.

மூன்று நாள் அஞ்சலிக்காக அன்னையின் பூதவுடன் வைக்கப் பட்டிருந்தது. அன்று 22-04-1988 வெள்ளிக்கிழமை.

தமிழ் ஈழ மண்ணில் அராஜகம் அகன்று அமைதி நிலை வேண்டும் என்பதற்காக தன்னுயிர் நீத்த பூபதி இறுதி யாத் திரைத் தினம் அது மட்டக்களப்பு நெஞ்சங்கள் எல்லாம் விம்மிப் புடைத்து வெப்புசாரம் கொண்டு வாய்விட்டு அலறித் துடிக் கின்றன.

பிற்பகல் 2:15 மணி

ஈமக் கிரியைகளைத் தொடர்ந்து அன்னை யின் பூதவுடல் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஏற்றப்பட்டு புறப்படுகிறது.

சர்வமதப் பெரியார்கள், பொது அமைப்புக் களின் பிரமுகர்கள் அன்னையர் முன்னணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அந்த இறுதிப் பவனியை ஓர் பேரணியாய் வழிநடத்திச் செல் கின்றனர்.

வெள்ளை ஆடை உடுத்தியிருந்தனர் மக்கள் அனைவரும். சோகம் தாழவில்லை என்பதை அந்த நிறம் உணர்த்தியது.

அந்த இறுதி யாத்திரையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண் களும், பெண்களும் பெருவாரியான மாணவர்களும், மாண விகளும் பங்கு கொண்டதாகவும். சுமார் மூன்று மைல்கள் தூரம் நீண்டிருந்ததாகவும் யாத்திரை முடிவடைய ஏறக்குறைய ஐந்து மணித்தியாலங்கள் சென்றதாகவும் பின்னர் செய்திப் பத்திரிகைகளில் வெளியான தலைப்புச் செய்திகளில் குறிப் பிடப்பட்டது.

இறுதி யாத்திரை சென்ற வழிநெடுகிலும் பாகத்துக்கு ஒன்றாக வீதிகளின் இரு மருங் குகளிலும் வாழைகள் நடப்பட்டு, தென் னை ஓலைகளால் அலங்கரிக்கப்பட்டும் காணப் பட்டன.

ஊர்வலத்துக்கு முன்னாலும், பின்னாலும் நடுவிலும் ஒலி பெருக் கிகள் பொருத்திய வாகனங்களில் வீரமரணம் எய்திய அன்னை யின் புகழ் பாடப்படுகின்றன.

அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் மீளாத் துயில் கொண்டிருந்த அன்னையின் பூதவுடலை வழிநெடுகிலும் மக்கள் நேரடியாகத் தரிசிக்கக் கூடியதாய் இருந்தது.

பூதவுடலின் அருகில் அன்னாரில் அன்புக் கணவர் கணபதிப் பிள்ளை அடிக்கடி துக்கம் தாளாமல் வாய்விட்டு அலறிக் காணப் படுகின்றார்.

வழியின இரு மருங்கிலும் மக்கள் குழுமி நின்று கண்ணீர் மல்க மறைந்த அன்னை யின் பரிவாற்றாமையை வெளிப்படுத் தியமை பெரும் சோகக் காட்சியாகவே காணப்படுகிறது.

அன்னையை அடக்கம் செய்யவிருக்கும் ஈழத்தில் புகழப்படும் நாவலடி கடலோராம் எங்கு திரும்பினாலும் மக்கள் சமுத்திரம்.

ஒரு நாள் ஒரு வாரம் அல்ல மொத்தம் முப்பத்தொரு நாட்களைக் கொண்ட ஒரு முழுமையான மாதம் தண்ணீர் கூட அருந் தாது முழு உண்ணா நோன்பு நோற்றவர் அன்னை பூபதி! தமிழ் ஈழப் பூமியில் சாந்தியும், சமாதானமும், அமைதியும் காணத் துடித்தது அவர் உள்ளம். அந்த அபிலாஷைகள் நிறை வேறாமலே அவரது ஆவி பிரிந்தது அல்லவா?

பொது இலட்சியத்துக்காகக் குடும்பப் பெண் ஒருவர் ஒரு மாத காலம் உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்தமை உலக வரலாற்றில் இதுவே முதல் சம்பவம்?

நாவலடியில் திரண்ட ஆயிரக்கணக்கா னோரில் சர்வமதப் பெரி யார்கள், பொதுசனப் பிரமுகர்கள், அன்னையர் முன்னணி நிர்வாகிகள் எனக் குறிப்பிடத்தக்க சிலர் இரங்கல் உரைகள் நிகழ்த்தியபோது,

"ஒரு கிராமத்தக் குடும்பப் பெண் தமிழ் ஈழ விடுதலைப் போராட் டாக் களத்தில் தனது மைந்தர்கள் இருவரை பறிகொடுத்தவர். சிறீலங்கா, இந்திய இராணுவத்தினராலும், அவர்களது கைக் கூலிகளாலும் தாமும் - குடும்பமும் தொல்லைக்குள்ளாக் கப்பட்டவர். இப்போது பெண் என்றும் பாராமல் தம் உயிரையே தமிழ் ஈழ இலட்சியத்துக்காகத் தாரைவார்த்துக் கொடுத்து விட்டார்" என்றார்கள்.

நாவலடி கடலோர மைதானத்தில் அன்னை பூபதியின் புதவுடல் அடக்கம் செய்யப்படுகிறது.



**அன்னையின்**
**புனிதவுடல் மாத்திரமா**
**அங்கு அடக்கம் செய்யப் பட்டது?**
**கூடவே**
**"அகிம்சையும்"**
**புதைக்கப்பட்டதோ?...**

# தமிழீழ செய்திகள்




## நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி இந்த அரசு மீண்டும் தவறிழைத்துள்ளது!

**- வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்-**

ஏப்ரல் 03. 2022

நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி இந்த அரசு மீண்டும் தவறிழைத்து உள்ளது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



அவர் இன்று (2) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் அவசரகால சட்டம் ஜனாதிபதியினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. முப்படையினருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஜனநாயக ரீதியில் போராடுகின்ற மக்களை அடக்க ஒடுக்க இச்சட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மேலும் மேலும் தவறிழைத்துக் கொண்டு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையில் மக்களின் அன்றாட பிரச்சினை, மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற துன்பங்களை பிரதிபலிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் அரசு மீண்டும் தவறிழைக்கின்றது. அவசர கால சட்டத்தை அமுல் படுத்தி மீண்டும் மக்களை அடக்க, ஒடுக்க நினைக்கின்ற முறையை கையாள நினைக்கின்ற செயல்பாட்டை ஜனாதிபதி செய்ய துணிகின்றார்.

அதை வன்மையாக கண்டிக்கின்றோம்.அதனை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நாட்டிலே மக்களை காப்பாற்ற முடியாத அரசு, இந்த மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத அரசு நாளாந்தம் மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை கருத்தில் கொள்ளாத அரசு இந்த அவசர கால சட்டத்தை அமுல் படுத்தி நிம்மதியாக இருந்து விடலாம் என்று நினைத்து விட முடியாது.

மக்கள் கிளர்ந்தெழுந்து உள்ளார்கள்.இதனூடாக போராட்டங்களை தடுத்து நிறுத்தி விடலாம் என்று நினைத்தால் அது பகல் கனவு. மக்கள் அரசுக்கு எதிராக தற்போது வீதிக்கு இறங்கி உள்ளார்கள்.

மக்களின் போராட்டம் தொடரும். எனவே ஜனாதிபதியினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டம் மீளப்பெற பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. நாட்டில் அவசரகால சட்டத்தை அமுல் படுத்தியமையை வன்மையாக கண்டிக்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

## வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் பேரணி பிற்போடப்பட்டுள்ளது!

**வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க செயலாளர் ஆ. லீலாதேவி**

ஏப்ரல் 03, 2022

நாட்டின் நிலையை கருத்தில் கொண்டும், அன்னையரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும்,எமது பேரணிக்கான திகதி மாற்றப்பட்டுள்ளது என்றும் புதிய திகதி அனைவரும் கலந்து முடிவு செய்து அறிவிக்கப்படும் என வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார்.

இன்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்தபோது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மைநிலையை அறியும் முகமாக கவனயீர்ப்பு போராட்டத்தை நடாத்த முற்பட்ட தாய்மார்கள், வயோதிபப் பெண்கள் மீது காவற்துறையினர் மிலேச்சத்தனமான தாக்குதலைக்கண்டித்து நீதி கிடைக்க வேண்டியும் ஞாயிறுக்கிழமை (04.03.2022) காலை 10 மணிக்கு யாழ் மத்திய பேரூந்து நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் முற்றவெளியை நோக்கி செல்ல கண்டனப் பேரணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனாலும் நாட்டின் நிலையை கருத்தில் கொண்டும், எமது அன்னையரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், எமது பேரணிக்கான திகதி மாற்றப்பட்டுள்ளது.புதிய திகதி



அனைவரும் கலந்து முடிவு செய்து அறிவிக்கப்படும். சிரமத்திற்கு மன்னிக்கவும். தங்கள் ஒத்துழைப்பு தொடர வேண்டும் என்றார்.

## மகனைத்தேடி அலைந்த மற்றொரு தாயாரும் சாவு!

ஏப்பிரல் 06, 2022



மகனைத் தேடி மரணமான தாய்க்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வானது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் 1873வது நாளாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறை போராட்டம் இடம்பெறும் கொட்டகையில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா செட்டிக்குளம் பகுதியை சேர்ந்த காளிமுத்து சுப்பம்மா (கமலா) என்பவரே தனது 69வது வயதில் 04.04.2022 திங்கட்கிழமை சுகயீனம் காரணமாக மரணமடைந்திருந்தார்.

இந்நிலையில் இன்றையதினம் அன்னாரின் உருவப் படத்துக்கு மெழுகுவர்த்தி ஏத்தி அஞ்சலி செய்ததுடன், மலர் அஞ்சலியும் செலுத்தியிருந்தனர்.

இவரது மகன் சுப்பையா சிவலிங்கம் 13.01.2000




வவுனியாவில் வைத்து இராணுவத்தால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எழுவைதீவின் காணி அளவீடு, தடுக்க ஒன்றிணையுமாறு கோரிக்கை!

## வலி வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் த. சஜீவன்

ஏப்பிரல் 05, 2022

காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற நிலையிலும் நாளையதினம்(6) புதன்கிழமை காலை 9மணிக்கு எழுவை தீவு பகுதியில் 4 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்காக அளவீடு செய்யப்பட இருக்கிறது.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வலி வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் த.சஜீவன் தெரிவித்தார்.

இலங்கை மக்கள் பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் குறிப்பாக வடகிழக்கு மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சூழலில் வாழும்போதும் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு காணி உரிமையாளர் எதிர்ப்பை தெரிவித்து இருப்பதால் அவருடன் சேர்ந்து பொது அமைப்புகள் அரசியல் பிரமுகர்கள் நாளை காலை 9 மணிக்கு நில அளவை தடுப்பதற்காக ஒன்றுகூட வேண்டும் என்றார்.




# யாழ். பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்!

ஏப்பிரல் 04, 2022

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், விடுதிகளில் தங்கியுள்ளவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இன்று காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, மாணவர் நலன்கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப் படுவதுடன், விடுதிகளில் தங்கி நிற்கும் மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.



எனினும் பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வுகளுக்கான மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் உள்ள மாணவர்களின் வீடுகளுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கமைய சாவகாசமாக விடுதிகளை விட்டு வெளியேறுவதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை உணர்வு பூர்வமாக முன்னெடுக்க ஒன்றிணையுங்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

ஏப்பிரல் 09, 2022

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

இன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் .

தமிழ் மக்கள் மீது இடம்பெற்றது ஒரு திட்டமிட்ட இன அழிப்பு அந்த இனவழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்ற நோக்கத்திற்காகவும் மே-18 நினைவேந்தல் நிகழ்வானது உணர்வுபூர்வமாக யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது.

அரச பயங்கரவாதத்தால் முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்புப் போராட்டத்தில் லட்சக்கணக்காண மக்கள் இனப் படுகொலை செய்யப் பட்டதோடு யுத்தம் மௌனவித்த 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் வரை 5 லட்சம் மக்கள் வரை சென்றிருந்தார்கள்.

இவ்வாறான நிலையில் தான் மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஒவ்வொரு வருடமும் தமிழ் மக்களால் நினைவு கூரப்படுகின்றது என்ன நோக்கதுக்காக மக்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தார்களோ அந்த நோக்கங்களை அடைவதற்காக ஒன்றிணைந்து நினைவுகூரக்கூடிய ஒரு நாளாக காணப் படுகின்றது.



எனவே உயிரிழந்த எமது மக்களை உறவுகளை கூட்டாக நினைவுகூர வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது அந்த உறவுகள் கடைசி வரை எந்த இலட்சியத்துக்காக உறுதியாக இருந்தார்களோ அந்த இலட்சியத்திற்காக செயற்பட வேண்டிய கடப்பாடும் எங்களுக்கு காணப்படுகின்றது.

எனவே இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும் அந்த நீதியானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக பெறப்பட வேண்டும் அத்தோடு இறுதி யுத்தத்தில் உயிர் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாக இருந்தால் ஒற்றையாட்சியை 13வது திருத்தச்சட்டத்தை நிராகரித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனவே எமது எதிர் வரும் மாதம் இடம் பெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ் வினை அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுத்த முன் வாருங்கள் எனவும் தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியினரால் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற உறுப்பினர் களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வரும் நிலையில் நம்பிக்கையில்லா பிரே ரணைக்கு தமது முழுமையான ஆதரவினை வழங்க தயார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித் துள்ளது.

கோட்டா அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர். செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

# இத்தனை காலமும் எமது மக்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், சூழ்நிலைகளையும் இன்று போராடும் சிங்கள மக்கள் உணர்ந்திருப்பார்கள் என நம்புகின்றோம் - ஜனநாயகப் போராளிகள் கட்சி

ஏப்ரில் 13, 2022

சிங்கள மக்களைப் பொறுத்த மட்டிலே இவ்வருட புத்தாண்டில் ஒரு சிறிய பாதிப்பினையே எதிர்கொண்டு நிற்கின்றார்கள். ஆனால் இந்த நாடு சுதந்திரமடைந்தது முதல் தமிழ் மக்கள் ஒவ்வொரு புதுவருடத்திற்கும் இதைவிடப் பன்மடங்கு மிகப் பெரிய சவால்களையும், சோதனைகளையும் சந்தித்திருக்கின்றார்கள். எனவே எமது மக்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், சூழ்நிலைகளையும் இன்று போராடும் சிங்கள மக்கள் புரிந்து கொண்டு செயற்படுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

புதுவருட வாழ்த்துச் செய்தியுடன், சமகால அரசியல் நிலைமை தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
2022ல் பிறக்கும் இந்த தமிழ் சிங்கள சித்திரைப் புதுவருட தினத்தில் உலகத் தமிழ் மக்களுக்கும் நம் நாட்டின் சிங்கள மக்கள் அனைவருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அண்மையில் பிரதமரின் உரையானது இந்த நாட்டின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எவ்வாறு முனையலாம் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று தெரிவிப்பதற்கு அப்பால் தங்களுடைய ஆட்சி அதிகாரங்களை இந்த நாட்டில் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காக தங்களின் வழமையான இனவாதக் கருத்துகளையே கூடுதலாக முன்வைத்திருக்கின்றார்.

உண்மையிலேயே யுத்த காலத்திலும் சரி யுத்தம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரும் சரி ஆட்சி அதிகாரத்திலிருந்த இந்த ராஜபக்ச குடும்பமே இவ்வாறு நாடு பின்நோக்கிப் போவதற்குக் காரணம். இதனை உணர்ந்த சிங்கள மக்கள் இன்று கொதித்தெழுந்து இவர்களது குடும்ப ஆட்சிக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வருகின்ற சூழலில் மீண்டும் தமிழர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய வாறு பயங்கரவாத, இனவாத சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்த நாட்டிலே தொடர்ந்து ஆட்சி செய்த கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களை தங்கள் எதிரிகளாகக் காட்டியதும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாகச் சித்தரித்துக் காட்டியதுமாக தங்கள் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர். நாங்கள் ஆயுதமேந்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்த சிங்கள ஆட்சியாளர்களே என்பதை சிங்கள மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.



ஒரு காலத்தில் எமது ஆயுதப் போராட்டம் எமது மண்ணில் நிழல் அரசொன்றை உருவாக்கி எமது மக்களுக்கான சிறந்த சோசலிச ஆட்சி முறையை வழங்கியது. எமது போராட்டம் தொடர்பாக இன்று சிங்கள மக்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டிருப்பது போல் தெரிகின்றது. தமிழர்களின் போராட்டம் ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் ஜனநாயக ரீதியான போராட்டம் என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சூழல் உருவாகியிருப்பதாகவும் தெரிகின்றது. இந்த நிலை தொடருமானால் சிங்களப் பேரினவாதத்தைக் கக்கி ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தாங்கள் தொடர்ந்தும் இவ்வாறு இருக்க முடியாது என்பதால் இதனைக் குழப்பும் முயற்சிகளை ராஜபக்ச குடும்பம் செய்து வருகின்றது.

# தமிழர்கள் பேரம்பேச வேண்டிய தருணம் இதுவோ!
## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்

ஏப்ரில் 14, 2022

பொது வாக்கெடுப்பு அல்லது தமிழர்களின் சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்கவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாக வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.






வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று 1881 ஆவது நாளாகவும் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபடும் நிலையில் வருடப்பிறப்பினை ஒட்டி ஏற்பாடு செய்திருந்த கவனயீர்ப்பு போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்.....
கொழும்பில் உள்ள தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களின் புரட்சியின் மீது கொண்ட காதல், தமிழர்களுக்கு எந்த விடிவையும் கொண்டு வராது. அது தமிழர்களின் துன்பங்களை ஒழிக்காது, ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தும்.
"கொழும்பில் ஒற்றுமை" என்ற பெயரில், இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கு சிங்கள சிந்தனைக் குழுவின் உத்தியாக கூட இது இருக்கலாம். வடக்கு கிழக்கில் எந்தவொரு தமிழர்களும் அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதார ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இன்று பலவீனமாக உள்ளது, உணவு இல்லை, பணம் இல்லை, பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. இது மற்ற நாடுகளுக்கு சந்தைப்பங்கை இழக்கிறது. இலங்கையால் வெளிநாட்டு கடனை செலுத்த முடியவில்லை. இலங்கையின் எதிர்காலம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற பணக்கார நாடுகளில் தங்கியுள்ளது.

எனவே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுடன் பொது வாக்கெடுப்பு அல்லது சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இந்த நாடுகளிடம் கேட்க வேண்டும். தமிழர்களுக்கான நிரந்தரத்தீர்வை எட்டுவதற்கு, இந்த நாடுகள் இலங்கையுடன் பேரம்பேச இதுவே சிறந்த தருணம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அல்லது அவர்களின் எம்.பி. பதவிகளை ராஜினாமா செய்வதற்கான கிளர்ச்சியை முன்னெடுத்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுடன் தமிழர்கள் சார்பில் வாதாடக்கூடிய சில புதிய துணிச்சலான இளைஞர்களை கொண்டுவர வேண்டும்.






# கனடிய அரசின் வரவு செலவுத் திட்டம் 2022 52.8 பில்லியன் பற்றக்குறை

ஏப்பிரல் 08, 2022

கனடிய அரசின் 2022 பட்ஜெட்டில், அரசாங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் $60 பில்லியன் புதிய செலவினங்களை வெளியிடுகிறது, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப "இலக்கு" முன் முயற்சிகளை இலக்காகக் கொண்டது, அதேநேரத்தில் பற்றாக்குறையைத் தொடர்ந்து நீக்குகிறது.



2022-23 பற்றாக்குறை 52.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் ஒவ்வொரு ஆண்டும் 2026-27 இல் $8.4 பில்லியனாக குறைகிறது.

கனேடியர்கள் வாழ்க்கைச் செலவு நெருக்கடியை எதிர்கொள்வதால், வீட்டு வசதியை சமாளிப்பது பட்ஜெட்டின் முக்கிய அம்சமாகும்.

வீட்டு நெருக்கடியைத்தீர்ப்பதற்கு, "கனடா இது வரை கண்டிராதமிகவும் லட்சியத்திட்டமாக" இதைவடிவமைத்து, மொத்த வீட்டுப்பொதிக்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் கிட்டத்தட்ட $10 பில்லியன் செலவழிக்க உள்ளது மத்திய அரசு.

கனடாவில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு வெளிநாட்டினர் எந்தவொரு குடியிருப்பு சொத்துக்களையும் வாங்குவதை சட்டவி ரோதமாக்குவதற்கு ஒரு முக்கிய புதிய கொள்கை நகர்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு சந்தையில் இருந்து வெளி நாட்டுவாங்குபவர்களை மூடுவதில், அபராதம் விதிக்கும் திறனுடன், வீடுகள் முதலீட்டு பொருட்களாக பயன்படுத்தப்படுவதை விட வீடுகளாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய விரும்புவதாக அரசாங்கம் கூறுகிறது.

வெளிநாட்டு வாங்குவோர் தடையானது குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் ஒற்றை குடியிருப்புகளுக்கு பொருந்தும். நிரந்தர குடியிருப்பாளர்கள், வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் இந்த புதிய நடவடிக்கையில் இருந்து விலக்கப்படுவார்கள். இங்கு கனடாவில் தங்களுடைய முதன்மை குடியிருப்பை வாங்கும் வெளிநாட்டவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.

**2022 பட்ஜெட்டில் உள்ள மற்ற வீட்டு முயற்சிகள்:**

டிஜிட்டல் அமைப்புகளை உருவாக்குவதன் மூலம் குடியிருப்பு சொத்துக்களை விரைவாகக்கட்ட அனுமதிக்கும் வகையில் நகராட்சிகள் தங்கள் மண்டல மற்றும் அனுமதி அமைப்புகளைப்புதுப்பிக்க உதவுகின்றன. இதன் மூலம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100,000 நிகர புதிய வீடுகளை உருவாக்கு வதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது



$1.5 பில்லியன் விரைவான வீட்டு வசதி முயற்சியை நீட்டிக்க, குறைந்தது 6,000 புதிய மலிவு விலை வீடுகளை உருவாக்கப்படும்

$1.5 பில்லியன் கடன்கள் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதிக்கான நிதி மற்ற முயற்சிகளில் இருந்து மறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது

முதல் முறையாக வாங்குபவர்களுக்கு வரியில்லா சேமிப்புக்கணக்கை உருவாக்க $750 மில்லியன், இது முதல் முறையாக வீடு வாங்குபவர்கள் தங்கள் முதல் வீட்டிற்கு $40,000 வரை சேமிக்க அனுமதிக்கும். முன்பணம் செலுத்துவதற்கு எடுக்கும் நேரத்தைக்குறைக்கும் நோக் கத்துடன், முதல் முறையாக வீடுவாங்குபவர்கள், தங்கள் முதல் வீட்டை வாங்குவதற்கு வரியின்றி இந்தப்பணத்தை எடுக்க முடியும்.

இலாபத்துக்காக வீடு வாங்கிவிற்பவர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர் ஜனவரி 2023 தொடக்கம் 12 மாதங்களுக்கும் குறை வாகவைத்திருக்கும் ஒரு சொத்தையாராவது விற்றால், அதை புரட்டுவதாகவும், வணிகமாக அவர்களின் லாபத்திற்கு முழு வரி விதிக்கப்படுவதையும் உறுதி செய்ய புதிய விதிகளை அறிமுகப்படுத்துகின்றனர். வருமானம். மரணம், குழந்தையின் பிறப்பு அல்லது விவாகரத்து போன்ற "சில வாழ்க்கை சூழ் நிலைகளுக்கு" விதி விலக்குகள் பொருந்தும்.

வீடு வாங்குபவரின் உரிமைகள் மசோதாவை முன்னோக்கிகொண்டுவர அரசாங்கம் உறுதியளித்தது, மற்ற முன் முயற்சிகளுடன், கண் மூடித்தனமான ஏலத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கும் பல கனேடிய அதிகார வரம்புகளில் உள்ள நடைமுறை, மற்றவர்கள் என்ன விலைக்கு ஏலம் எடுக்கிறார்கள் என்பதை அறியாமல் தங்கள் சலுகைகளை வழங்குவதற்கு கட்டாயப்படுத்துகிறது.

மேலும் "பல தலைமுறை வீட்டுசீரமைப்புவரிக்கடன்" "MultigenerationalHomeRenovationTaxCredit" ஒன்றை அமைக்கும் இது வீடு திருத்துவதற்கான செலவை ஈடு செய்ய $7,500 வரை வழங்கும். ஒரு முதியவர் அல்லது ஊனமுற்றவருக்கு வழங்கப்படும்.

**தேசிய பாதுகாப்பு:**

தேசிய பாதுகாப்புத்துறையின் பட்ஜெட் ஏறத்தாழ $8 பில்லியன் டாலர்களால் அதிகரிக்கப்படும் என்று உறுதிப்படுத்தியுள்ளது.

**பல் மற்றும் சுகாதார பராமரிப்பு:**

தேசிய பல் பராமரிப்பு திட்டத்திற்காக உறுதியளிக்கிறது ஐந்தாண்டுகளில் $5.3பில்லியனையும், பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஹெல்த் கனடாவிற்கு $1.7 பில்லியனையும் ஒதுக்குகிறது. இந்தத் திட்டம், இது 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடன் இந்த ஆண்டு தொடங்கும் மற்றும் 18 வயதுக்குட்பட்ட கனடியர்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை 2023 இல் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

2025 ஆம் ஆண்டுக்குள் முழுமையாகச்செயல் படுத்தப்படும் ஆண்டு தோறும் $ 90,000க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு பல் பராமரிப்பு வழங்கும். $70,000க்கும் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு, இணை பணம் செலுத்தத் தேவையில்லை.




# தமிழக செய்திகள்



# சென்னையில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழிநுட்ப ஆராய்ச்சிக் கருத்தரங்கம்

## உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார்

ஏப்பிரல் 01. 2021

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு ஏற்பாட்டில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கருத்தரங்கம் சென்னையில் ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் இணைய தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்கவும், மாணவர்களின் கண்டுபிடிப்புகளை அங்கீகாரம் வழங்கி தொழிலதிபர்களாக உருவாக்கவும், துறை சார்ந்த வேலைவாய்ப்பு பற்றி விழிப்புணர்வு மற்றும் தேர்தல் முறையை எளிதாக்கவும், தமிழ் மொழி சார்ந்த மென்பொருளை உருவாக்க இந்த பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் வாய்ப்பாக அமையும்.

ITITRC
International Tamil Information Technology Research Conference
பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம்

இந்நிகழ்வில் பன்னாட்டு நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கணினி தயாரிப்பு நிறுவனங்கள், மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்கள், அரசு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகங்கள், இணைய கல்வி கழகங்கள், மாநில மத்திய அரசு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்வேறு மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், கணினி உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், மென்பொருள் பாதுகாப்பு மற்றும் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், இவை அனைத்து நிறுவனங்களும், தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் என்ற காட்சியகத்தில் அரங்கம் அமைக்க உள்ளன.

இந்நிகழ்வில் இணையவழியில் தமிழை மேம்படுத்தும் விதமாக பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் இணையவழியில் தமிழை கற்கவும், தமிழ் மொழியின் சிறப்பை ஆவணப்படுத்துவோம். தமிழர்கள், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த வல்லுனர்களாக ஆகவும் இந்த பன்னாட்டு தமிழ் தகவல் தொழிநுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் பேருதவியாக இருக்கும்.

தற்போது அனைத்து துறைகளிலும் இணைய தொழில்நுட்பம் இல்லாமல் செயல்பட முடியாது என்ற சூழ்நிலையில் மருத்துவம், விண்வெளி மட்டுமல்லாமல் அனைத்து துறைகளிலும் இணையவழி தகவல் தொழில்நுட்பம் இல்லாமல் செயல்பட முடியாது என்ற சூழ்நிலையில் உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் பெரும் சவாலாக உள்ள சைபர் கிரைம் அதிகமாக உள்ளதால் மக்கள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். சைபர் கிரைம் மூலம் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாக்க பல்வேறு மென்பொருள்களை உருவாக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அன்றாட வாழ்வில் இணைய தொழில்நுட்பம் இல்லாமல் வாழ முடியாது என்ற சூழ்நிலை உள்ளதால் மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடவும் அதனடிப்படையில் வேலைவாய்ப்பு உறுதி செய்யவும் இந்த கருத்தரங்கம் மற்றும் காட்சியகம் பேருதவியாக இருக்கும்.

உலகில் தகவல் தொழில்நுட்ப துறையில் தமிழர்கள் குறிப்பிட்ட சதவீதத்தில் இருப்பதும் அதன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும் மேலும் இந்த நிகழ்வில் உலகெங்கும் உள்ள



மாணவர்கள் தங்கள் அரியவகை கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சிக் கட்டுரையாக சமர்ப்பிக்கவும் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளவும் பார்வையாளர்களாக கலந்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இரண்டு நாள் நடக்கும் இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த வல்லுநர்கள் பத்து அமர்வுகளில் கருத்தரங்கம் நடத்தவுள்ளனர். அதில் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பள்ளி இறுதிப் படிப்பு மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக் குழு தலைவர் செல்வகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசுக்கு 20,000 ரூபா நிதி உதவி புரிந்த யாசகர்!

ஏப்பிரல் 08, 2022



தூத்துக்குடியைச் சேர்ந்த யாசகர் ஒருவர் தான் யாசகம் பெற்ற பணத்தில் இந்திய மதிப்பில் 20,000 ரூபாவை பொருளாதார நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசுக்கு வழங்குவதற்காக மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கையளித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் ஆலங்கிணறு பகுதியைச் சேர்ந்த பூல்பாண்டியன் என்ற யாசகரே இலங்கைக்கு வழங்க 20,000 ரூபாவை வழங்கியுள்ளார்.

தான் யாசகமாகப் பெறும் பணத்தை சேமித்து தனக்கென்று செலவழிக்காமல் அப்பணத்தை பொது நிவாரணங்களுக்கு உதவியாக இவர் வழங்கி வருகிறார்.

கொரோனா தொற்றுக் காலத்தில், தனது சேமிப்பிலிருந்து பல முறை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் நிவாரண நிதியாக வழங்கியுள்ளார்.

இதுவரை ரூபா 4 இலட்சத்துக்கும் அதிகமான தொகையை கொரோனா நிவாரண நிதியாக பூல்பாண்டி வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதை ஊடகங்கள் ஊடாக அறித்த அவர், இலங்கை மக்களுக்கு உதவுமாறு இலங்கை அரசிடம் கையளிப்ப தற்காக தான் யாசகம் பெற்று சேமித்து வைத்த 20,000 ரூபா பணத்தை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கியுள்ளார்.



# ஊழல் செய்து நாட்டை சீரழித்துவிட்டனர் இனி இலங்கை மீள்வதற்கு வழியேயில்லை!

## அகதிகள் கண்ணீர் – விகடன்

ஏப்பிரல் 11, 2022




இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. அத்தியாவசியப் பொருள்களின விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வால் அரிசி , கோதுமை போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கூட வாங்க முடியாமல் தவித்துவரும் பொதுமக்கள் வெளிநாடு களுக்கு புலம்பெயரத் தொடங்கியுள்ளனர். அவ்வாறு புலம் பெயர்பவர்களில் அதிகமானோர் தமிழகத்திற்குதான் வருகின்றனர்.

அதன்படி இலங்கையிலிருந்து ஏற்கெனவே தமிழகத்தின் தனுஷ்கோடிக்கு வந்த 20 பேர் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கபட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை தமிழர்கள் தமிழகத்திற்குள் அகதிகளாக நுழைவதை தடுத்து நிறுத்த இலங்கை கடற்படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் தமிழகத்துக்குள் கள்ளப்படகு மூலம் கடல் வழியாக நுழைய முயன்றவர்களை அங்கேயே தடுத்து நிறுத்தி இலங்கை கடற்படையினர் கைது செய்து வருகின்றனர்.

தீவில் இருந்து படகுகளில் மீட்கப்பட்டு வந்த அகதிகள்தீவில் இருந்து படகுகளில் மீட்கப்பட்டு வந்த அகதிகள.

இந்நிலையில் நேற்று இரவு ஒரு ஃபைபர் படகில் திருகோண மலையைச் சேர்ந்த 10 பேர் இரண்டு கை குழந்தைகளுடன் மன்னாரில் இருந்து புறப்பட்டு இன்று அதிகாலை சுமார் 2 மணி அளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் வந்து இறங்கியுள்ளனர். தகவலறிந்து ராமேஸ்வரம் மரைன் போலீஸார், கடலோரக் காவல்படை போலீஸாரின் ஹோவர் கிராப்ட் படகின் உதவியுடன் சம்பவ இடத்திற்கு சென்று அகதிகளை மீட்டு தனுஷ்கோடிக்கு கொண்டு வந்தனர்.

அப்போது கைக்குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாக வந்த இலங்கை அகதிகளைப் பார்த்த அங்கிருந்த வியாபாரிகள், தங்கள் கடைகளில் இருந்த உணவுப் பண்டங்களை கொண்டு வந்து கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் கூறினர். இதனைப் பார்த்த பொதுமக்கள் மற்றும் போலீஸார் நெகிழ்ச்சி அடைந் தனர்.

இதனையடுத்து அவர்களை மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அப்போது போலீஸாரிடம் “இலங்கையில் உணவுக்கே வழியின்றி பட்டினியாக கிடக்கிறோம். அங்குள்ள விலைவாசி உயர்வு மக்களை நிலைகுலையச் செய்து வருகிறது. எப்படியாவது எங்கள் பிள்ளைகள் உயிரையாவது காப்பாற்றியாக வேண்டும் என நகை பொருள்களை விற்று 2 லட்சம் செலவு செய்து உயிரை பணையம் வைத்து இங்கு வந்துள்ளோம்.

எங்கள் நாட்டில் அரசியல்வாதிகள் ஊழல் செய்து நாட்டை சீரழித்து விட்டனர். அதிலிருந்து எங்கள் நாடு மீள்வதற்கு வழியே இல்லை. அரசியல்வாதிகள் அமெரிக்கா போன்ற நாடு களுக்கு தப்பிஓட முடிவு செய்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் கடற்கரையில் வேறு நாடுகளுக்கு அகதிகளாக செல்ல காத்துக் கிடக்கின்றனர். எங்களை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின்தான் காப்பாற்ற வேண்டும். எங்கள் உயிரை காப்பாற் றுங்கள் அண்ணா…” எனக் கண்ணீர்த் ததும்ப கதறியபடி கூறினர்.

# இலங்கை சீனாவை நம்பியிருக்கும் நிலையை முற்றாக குறைப்பதற்கு இந்தியா முயற்சி, மேலதிகமாக 2 பில்லியன் டொலர் கடனுதவியை வழங்க இந்தியா தயார்! – ரொய்ட்டர்

ஏப்பிரல் 13 2022



தனது தென்னிந்திய அயல்நாடு சீனா மீது தங்கியிருக்கும் நிலையை முற்றாக குறைப்பது குறித்து புதுடில்லி ஆர்வமாக உள்ளது என தரப்பொன்று தெரிவித்தது.

இந்தியா கொழும்பிற்கு மேலதிகமாக 2 பில்லியன் டொலரை வழங்க தயாராகவுள்ளது என புதுடில்லிவட்டாரங்களை மேற் கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ரொய்ட்டர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இலங்கைக்கு உணவு எரிபொருள் போன்றவற்றை வழங்கும் அதேவேளை இந்தியா 2 பில்லியன் டொலரை வழங்க தயாராகவுள்ளது என ஐந்து தரப்பினர் தெரிவித்தனர்.

1948 சுதந்திரத்தின் பின்னர் தனது வரலாற்றில் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை கடன்களை வழங்கமுடியாத நிலையில் உள்ள அதேவேளை இந்தியா சீனா போன்ற நாடுகளிடம் கடனையும் எரிபொருள் உணவு போன்றவற்றையும் கோரிவருகின்றது.

ஆசியாவின் பலம்வாய்ந்த நாடுகள் ஏற்கனவே பில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளன.

நாங்கள் அவர்களிற்கு உதவதயாராகவுள்ளோம், மேலதிக கடன்களை வழங்க தயாராகவுள்ளோம் என இருநாடுகளிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த இந்திய தரப்பொன்று தெரிவித்தது.

இலங்கை வெளிநாட்டு கடன்களை திருப்பிச்செலுத்துவதை இடைநிறுத் தியுள்ளதாக செவ்வாய்கிழமை எச் சரித்துள்ளமை நிச்சயமாக கவலை யளிக்கின்ற விடயம் ஆனால் எங் களால் 2 பில்லியன் டொலர்களை கடனாகவும் நாணயபரிவர்தனை யாகவும் வழங்க முடியும் புதுடில்லி தரப்பொன்று தெரிவித்தது.

தென்னாசியாவை மையமாக கொண்ட ஆசியகிளியரிங் யூனி யனிற்கு செலுத்தவேண்டிய 2 பில் லியன் டொலர் போன்ற வற்றை பெறு வதற்கு இலங்கை இந்தியாவின் உதவியை நாடியுள்ளது இந்தியா சாதகமான பதிலை வழங்கியுள்ளது எனவும் விடயமறிந்த தரப்பொன்று தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து தரப் பினரும் விடயங்கள் குறித்து நன்கறிந்தவர்கள் அல்லது இது குறித்து விளக்கமளிக்கப் பெற் றவர்கள் ஆனால் அவர்கள் தங்கள் பெயர்களை வெளியிட மறுத்து விட்டனர்.

இந்தியாவும் அதன் ரிசேர்வ் வங்கியும் இலங்கையின் வெளி விவகார நிதியமைச்சும் இது குறித்த கேள்விகளிற்கு பதிலளிக்க வில்லை.

சீனா இலங்கைக்கு 1.3 டொலர் சின்டிகேட் கடனை நீடித் துள்ளது- மேலும் கடன்களிற்கான பேச்சு வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

இலங்கை சீனாவிற்கு 3.5 பில் லியன் டொலர் கடனை செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது - சீனா இலங்கைக்காக துறை முகங்கள் வீதிகளையும் உருவாக்கியுள்ளது.



நாங்கள் அவர்கள் சீனாவிடமிருந்து கடன்பெறுவதை குறைக்க விரும்புகின்றோம், நாங்கள் அவர்களின் நெருங்கிய சகாக் களாக மாறவிரும்புகின்றோம் என அந்த தரப்பு தெரிவித்தது.

சீனா போல இல்லாமல் – புத்தாண்டின்போது இந்திய தன்னிடம் மேலதிகமாக உள்ள சீனி அரிசி கோதுமைமா போன்ற வற்றுடன் இலங்கைக்கு கப்பல்களை அனுப்பியுள்ளது.

சீனாவை விட உதவி வழங்குவதில் இந்தியா சிறந்த நிலையில் உள்ளது என்பதை புதுடில்லி இலங்கைக்கு உணர்த்தி யுள்ளதால் சீனாவை நம்பியிருப்பதை இலங்கை தவிர்க்க வேண்டும் என்ற நிபந்தனையை உதவி வழங்குவதற்காக இந்தியா உத்தியோகபூர்வமாக தெரிவிக்கவில்லை என விடய மறிந்த தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# உலக செய்திகள்

## இலங்கையில் பொருளாதார ஸ்திரமின்மை குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை!

ஏப்ரல் 03, 2022

இலங்கையில் பொருளாதார ஸ்திரமின்மை குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமை காரணமாக இலங்கை தற்போது எரிபொருள் சமையல் எரிவாயு மற்றும் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களிற்கான பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் சமீபத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வணிக நிலையங்கள் மருந்தகங்களில் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கின்றனர்.

சில ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் வெடித்துள்ளதுடன் இதற்கு பதில் நடவடிக்கையாக ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்புகை பிரயோகம் நீர்த்தாரை பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளதுடன் ஊரடங்கினை பிறப்பித்துள்ளனர்.

மேலும் இலங்கையில் நாளாந்தம் திட்டமிடப்பட்ட மின் வெட்டு காணப்படுகின்றது,பொதுப்போக்குவரத்து சில வேளைகளில் மட்டுப்படுத்தப்பட்டதாக அல்லது முடக்கப்பட்டதாக காணப்படுகின்றது,

இலங்கைக்கு பயணம் செய்பவர்கள் சமீபத்தைய நிலவரத்தை அறிந்துகொள்வதற்காக உள்நாட்டு செய்திகளை அவதானிக்கவேண்டும்.

பேரணிகள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் பகுதிகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும், திடீரென பெருமளவு மக்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றால் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## இலங்கையில் வன்முறைகள் வெடித்திருப்பது குறித்து ஐ.நா. கவலை

ஏப்ரல் 03, 2022

கொழும்பு மிரிஹானவில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஐநா கவலை வெளியிட்டுள்ளது.



இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து உன்னிப்பாக கவனித்துவருகின்றோம் என ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் வெடித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் அனைத்து குழுக்களும் பொறுமையை கடைப்பிடிக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை மிரிஹானவில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவேளை கைதுசெய்யப்பட்டவர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தனது டுவிட்டர் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சட்டத்தரணிகளால் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்களின்படி மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் 50 இற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுடன் அவர்கள்மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. மோசமடைந்துவரும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதை ஆட்சியாளர்கள் தவிர்க்கவேண்டும்.என சர்வதேச மன்னிப்புச்சபைதனது டுவிட்டர் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

“பயங்கரவாத“ செயல்களுடன் தொடர்புடையவர்களைச் சந்தேகிக்கப்படுவோரைத் தடுத்துவைப்பதற்கும் அவர்களுக்கான அடிப்படைப் பாதுகாப்பை மறுப்பதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் இடமளிக்கின்றது. அத்தோடு அச்சட்டத்தின்படி வாக்குமூலமும் ஓர் ஆதாரமாக ஏற்கப்படுகின்றது. எனவே அச்சட்டத்தின் பிரயோகம் உடனடியாக இடைநிறுத்தப்படவேண்டும். என சர்வதேச மன்னிப்புச் சபை தனது டுவிட்டர் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளது.



அடிப்படைவாதிகளாலேயே மிரிஹான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ள நிலையில் அதனை மேற்கோள் காட்டி சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆய்வாளரும் மனித உரிமைகள் செயற்பட்டாளருமான த்யாகி ருவன்பத்திரண அவரது டுவிட்டர் பக்கத்தல் பதிவொன்றைச் செய்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட எவரேனும் அத்தகைய அடிப்படைவாதக்குழுவைக் கண்டீர்களா? என்று கேள்வி எழுப்பியுள்ள அவர், “தமது அத்தியாவசியத்தேவைகளுக்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் “அடிப்படைவாதிகள்” என்று அழைக்கப்படுகின்றனர். சிலவேளைகளில் இந்த நிலைப்பாடு உங்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருக்காவிட்டால் பல தசாப்தங்களாக சிறுபான்மையின மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுவந்த இந்த கருத்தியலை நீங்கள் நம்பியிருப்பீர்கள்” என்று என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்

## நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ந்தது!



ஏப்ரல் 09, 2022

பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றதால், இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ந்தது.

பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுபடி, இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த, நள்ளிரவில் நாடாளுமன்றம் கூடியது.

அப்போது யாரும் எதிர்பாராத வகையில், நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஆசாத் குவைசர், துணை சபாநாயகர் காசிம் சூரி ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். இதனிடையே எதிர்கட்சிகள் இடைக்கால சபாநாயகரை நியமித்து நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தினர். இதில் இம்ரான் கான் தோல்வி அடைந்தார். அதாவது, 342 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற அவையில், இம்ரான் கானின் ஆட்சி தொடர 172 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆனால் இம்ரான் கானுக்கு எதிராக 174 உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதையடுத்து, இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ந்து, பிரதமர் அரியணையில் இருந்து அவர் அகற்றப்பட்டார்.

இதன் மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முதல் பிரதமர் என்ற பெயருக்கு இம்ரான்கான் ஆளாகியுள்ளார். வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன், விமான நிலையங்களில் ராணுவ கட்டுப்பாடு, நாடாளுமன்றம் முன்பு இம்ரான் கானின் தொண்டர்கள் குவிந்தது என பாகிஸ்தானின் நள்ளிரவு பதற்றம் நிறைந்தே காணப்பட்டன. வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததையடுத்து, இம்ரான் கான் மற்றும் அவரது கட்சியினர் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறினர். இந்நிலையில் பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப்பை எதிர்கட்சிகள் தேர்வு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

# சிறீலங்கா தலைநகரில் சிங்களவர்களின் குரல்

ஏப்பிரல் 10, 2022







# அமெரிக்கா நியுயோர்க் புகையிரத நிலையத்தில் இனந்தெரியாத நபர் துப்பாக்கிப்பிரயோகம் பலர் காயம்

ஏப்பிரல் 12, 2022

நியுயோர்க் புகையிரதநிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.







சன்செட் பார்க்கின் 36வது புகையிரதநிலையத்தில் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புகையிரதநிலையத்தின் தரையில் இரத்தக்காயங்களுடன் பயணிகள் வீழ்ந்து கிடப்பதை காண்பிக்கும் படங்கள் வெளியாகின்றன.

வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் - துப்பாக்கிதாரி தப்பியோடியுள்ளார்.

குறிப்பிட்டநபர் கட்டுமானப்பணியாளர்களின் ஒரேஞ்நிற ஆடையும் முகக்கவசமும் அணிந்திருந்தார் என தகவல்கள் வெளியாகின்றன.

# ரஷ்ய அதிபர் புடின் ஐரோப்பிய நாடுகளுக்கு எச்சரிக்கை!

ஏப்பிரல் 14, 2022



எங்களிடம் இருந்து எரிவாயு வாங்குவதை நிறுத்தினால், பொருளாதாரத்தில் கடும் எதிர்மறை தாக்கம் ஏற்படும் என்று ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்ய அதிபர் புடின் எச் சரிக்கை விடுத்துள்ளார்.

செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த புடின் கூறுகையில், " ரஷ்ய எரிவாயுவுக்கு பதிலாக மாற்று வழிகளை முயற்சிக்கும் ஐரோப்பிய நாட்டிற்கு கடும் வேதனை ஏற்படும். ஐரோப்பாவுக்கு தற்போதைய நிலையில் நியாயமான மாற்று எதுவும் இல்லை.

ஐரோப்பாவுக்கு பிற நாடுகளில் இருந்து கொள்முதல் செய்து குறிப்பாக அமெரிக்காவில் இருந்து எரிவாயு அனுப்பப்பட்டால், அது நுகர்வோர்களுக்கு கடுமையான விலையேற்றத்தை கொடுக்கும். இதனால், மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும்.

ஐரோப்பிய பொருளாதாரத்தில் போட்டித்தன்மை பாதிக்கும்" என்றார்.

ஐரோப்பிய யூனியன் தங்களின் இயற்கை எரிவாயு தேவைக்கு 40 சதவீதம் ரஷ்யாவையே சார்ந்துள்ளது. அதேபோல், எண்ணெய் தேவையை 25 சதவீதம் ரஷ்யாவே பூர்த்தி செய்கிறது.

[redacted]

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ **Private Mortgage** (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

## ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

---

Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

---




**Alan Maniam**
Director

**647 299 2450**

**235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3**

boroscanadianpaper@gmail.com

# போராட்டம் கல்விக்கு கவசம் கல்வி போராட்டத்திற்கு காப்பரண்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக வரிவாக்கம் பெற்றிருக்கிறது. அன்றொரு காலம் நாம் அமைதிவழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராடவேண்டியிருக்கிறது. உயிர்ப்பறி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கிறது.

இன அழிவைத்தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆகவேண்டும். போராடி வாழ்வதைத்தவிர எமக்கு வேறு வழயில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப்படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்தமுடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம்புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுய விருப்பிலேயே இளம் போராளிகள் எமுது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத்துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத்துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்றவேண்டும்; கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு வழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களனி தேசிய கடமைப்பாடாகும்.

("எனது மக்களின் விடுதலைக்காக" கருத்துத் தொகுப்பிலிருந்து) - வெளிச்சம் 06.1995




TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive. Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W. Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to $5000 REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# அன்னை பூபதி மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம்



உலகிலேயே உண்ணா நோன்பு போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

**அன்னை பூபதி கணபதிப்பிள்ளை**

(Annai Poopathy Kanapathipillai)

கிரான், மட்டக்களப்பு- தமிழீழம்

வீரப்பிறப்பு: 11-03-1932 வீரச்சாவு: 04-19-1988

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்னை பூபதி அவர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன்னை தற்கொடை செய்து நான்கு அண்டுகள் ஆகிவிட்டன. அன்னையின் கோரிக்கையை செவி சாய்க்க மறுத்த எள்ளி நகையாடிய அன்னியர்கள் இந்த மண்ணில் இருந்து வெளியேறி இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

சிங்கள இனவாதிகளின் பிடியிலிருந்து இந்த மண்ணை மீட்டெடுக்க விடுதலைப் புலிகள் மூன்றாம் கட்டப் போரில் ஈடுபட்டு ஒரு வருடமும் ஒன்பது மாதங்களும் கடந்து விட்டன.

ஆக்கிரமிப்பின் அகோரம் தென் தமிழீத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. அன்று அன்னை பூபதியின் வடிவில் மக்களின் எழுச்சி ஆக்கிரமிப்புக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, மக்கள் சக்தி புலிகளுக்குண்டு என்பதை தெளிவுபடுத்தியது.

ராஜீவ் அரசின் உண்மையான நிலைப் பாட்டை தமிழர்களும், உலகமும் புரிந்து கொள்வதற்கு பூபதி அம்மாவின் புனிதப் போர் காரணமாக அமைந்தது.

ராஜீவின் வல்லாதிக்கப் படையினர், தமிழீழத்தை ஆக்கிரமித்த போது தென் தமிழீழ மக்களின் எழுச்சியைக் கண்டு நிலை குலைந்த சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் இன்று தென் தமிழீழத்தில் மக்கள் எழுச்சியைத் தடுக்க பயங்கரவாத வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் 51 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.

கிராமங்களில் தமிழர்கள் பண்பாட்டு மையமாக விளங்கிய இந்துக் கோவில்கள் உடைத்துத் தகர்க்கப்பட்டன. தொழில் நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை பயன்படுத்த முடியாத அளவிற்கு தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதுவரை கிடைத்த தகவலின்படி 1990 ஜூன் மாதத்திற்கு பிறகு இம்மாவட்டங்களில் 6, 468க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். 2, 927க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர். எரிக்கப்பட்ட குடியிருப்புக்கள் எண்ணிலடங்காதவை. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

1983 ஆம் ஆண்டிற்கு பின்பு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் கூட்டாகத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் உண்டு. சென்ற ஆண்டும் மகிழடித்தீவில் 123 தமிழர்கள் கூட்டாகக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகத் தமிழ் மக்களின் பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றையும் தமிழ் மகளையும் திட்டமிட்டு அழித்து தமிழரின் தாயகப் பிரதேசங்களின் மீது சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

தமிழீழத் தாயகத்தில் தென் தமிழீழப் பிரதேசம் பெரும்பாலும் சிங்கள ஆக்கிரமிப்பின் அகோரத்தில் அழிந்து கொண்டிருக்கின்றது.

அடக்கப்படும் மக்கள் மத்தியில்தான் எழுச்சியும், புரட்சியும் தோன்றும். இந்த அடிப்படையில் தான், அச்சுறுத்தலுக்கும் கொலைப் பயமுறுத்தலுக்கும் மத்தியில் துணிந்து துவளாது போர் தொடுத்த அன்னை பூபதியின் தற்கொடையை தமிழ் மக்களாகிய நாம் என்றும் மறக்க முடியாது. அன்றும் விடுதலைப் புலிகளை மக்கள் நேசித்தார்கள் - இன்றும் நேசிக்கின்றார்கள்.

இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்கின்ற மக்கள் தங்களின் விடுதலைக்காக போராடுகின்ற விடுதலைப் புலிகளை எந்தளவிற்கு நேசிக்கின்றார்களென்பதை தென் தமிழீழ மக்கள் மத்தயில் இன்றும் காண முடிகிறது. புலிகளை அரவணைத்து தங்களின் உணவுகளை பரிமாறி அன்புடன் - அவர்களை வழியனுப்பி வைத்து பூரிப்படைகின்ற மக்களைப் பார்த்து மனமகிழ்ந்து நிற்கின்றோம்.

அன்னை பூபதியின் எழுச்சியினால் உந்தப்பட்ட மக்கள் அகிம்சைப் போராட்டம் எமது உரிமையை சிங்கள அரசிடமிருந்து பெற்றுத் தராது. ஆயுதப் போராட்ட மூலமே இது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

அன்று அகிம்சைப் போர் தொடுத்த அன்னையை இழந்து நிற்கின்றோம். அன்னை பூபதி அவர்களின் நினைவாக மக்கள் தங்கள் உழுச்சியைக் காட்டினார்கள். ஆனால் ஆக்கிரமிப்புவாதிகள் உணரத் தவறினார்கள். இதனால் அன்னையின் மகனைக்கூட கண்ணதாசன் என்னும் பெயரில் புலிகளின் அயுதத்துடன் காண்கின்றோம்.

1990 ஆம் ஆண்டு அன்னை பூபதி அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மக்களின் எழுச்சியை மட்டக்களப்பில் சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் கண்ணூடாகக் கண்டார்கள். எழுச்சிப் பேரணியில் ஒரு லட்சம் தமிழ் மக்கள் கலந்து கொண்டு அன்னை பூபதியின் தற்கொடையை கௌரவித்தும் விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவை வெளிக்காட்டியும் நின்றனர்.

சிங்கள இனவாதிகள் ஏக்கமடைந்தனர். மக்களின் உண்மை நிலையை புரிந்தனர். மட்டக்களப்பின் வரலாற்றில் இவ்வாறான பேரணியை இதுவரை கண்டதில்லை யென்பதை உணர்ந்தனர். இதனாலேதான் 1990 ஜூன் 11 இல் சிங்கள ஆக்கிரமிப்புக் கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் தொடங்கியபோது எண்ணிக்கையற்ற மக்களை கொன்று குவித்தனர்.

ஈழத் தமிழரின் "பாரம்பரிய பிரதேசம்" எனப்படும் தமிழீழத் தயாகம் ஈழத் தமிழ் மக்கள் மரபு வழிச்சொத்தாகும். சிறீலங்கா அரசு எமது தாயகத்தை வடக்கு - கிழக்கு எனப் பிரித்துக் காட்டிய போதும் எமது தாயகம் புவியமைப்பாலும், மக்கள் தொடர்பாலும் மொழிப்பண்பாட்டுத்தொடர்பாலும் வரலாற்றுச் சான்றுகளாலும், இப்பகுதியானது "ஒரே நாடு" என்றுணரத்தக்க பொதுப் பண்புகளைக் கொண்டு விளங்குவதோடன்றி "தனிநாடு" என்ற அரசியல் பண்பும் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் பேணப்படவும், எங்கள் "தாயகம்" சிறீலங்கா அரசின் மேலாண்மையிலிருந்து தளை நீக்கம் பெறவும் தாயகத்தின் இறைமையைப் பேணவும் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற ஒரே குறிக்கோளுடன் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மை தற்கொடை செய்துள்ள மாவீரர்களையும், இக்குறிக்கோளை நோக்கிய வழியில் செல்லும் புலி வீரர்களையும் நாம் போற்றுகின்றோம். நமது தயாகத்தை மிட்டெடுக்கும் போராட்டத்தில் இதுவரை நம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு என்னவென்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்நிலையில் சிறீலங்கா அரசம் பேரினவாதக் கல்விமான்களும், பௌத்த பீடங்களும் எமது தாயகம் "ஈழம்" என்பதை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய பேரினவாதக் கும்பல்கள் எமது தாயக எல்லைக்குள் சிறீலங்கா அரசு ஆதரவுடன் திட்ட ரீதியில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளப்பக்க பலமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வளவிற்கும் மேலாக கோடாரிக்காம்புகள் போன்று தன்னின அழிவிற்கே துணை போகின்ற சில தமிழ்க் குழுக்ளின் அட்டுழீயங்களோ சோம்நிறைந்த கோரச்செயல்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் காட்டிக் கொடுக்கிறார்கள்: தமிழினத்தின் இறைமையின் கல்லறையில் உல்லாச வாழ்க்கை அனுபவிக்கிறார்கள். சிறீலங்கா அரசின் கூலிப் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அழிவுக்கு பக்கத் துணையாக செயற்பட்டு தாயக எல்லைப் புறக்கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை அகதிகளாக விரட்டியடிக்கிறார்கள்.

அரச சலிப்படையினதும், அடிப்படைகளுக்குச் சோரம் போகும் தமிழ் குழுக்களினதும், முஸ்லீம் காடையர்களினதும் இன அழிப்பு, பொருள்வள அழிப்பு எல்லைப் புறக்கிராமங்களிலிருந்து மக்களை துரத்தியடித்தல் முதலான பயங்கரச் செயல்களுக்கு தினமும் பலியாகி வருபவர்கள் பெரும்பாலும் தென் தமிழீழ மக்களே எனலாம்.

எங்கள் வளங்களில் வாழ்ந்து பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து எங்களது போராட்டச் சூழலில் பயிற்சிபெற்று ஈற்றில் பேரினவாத சக்திகளுக்கு அடிமைப்பட்டுத் தமிழர்களுக்கெதிராக பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டு ஆயிரக்கணக்கான மக்களின் உயிரையும் பொருளாதார வளங்களையும் சூறையாடி வருகின்ற சில முஸ்லீம் காடையர்களினதும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் பெரிதும் தென் தமிழீழ மக்களே பலியாகி வருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலாக தன் தமிழீழத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் சிறீலங்கா அரசு செயற்படுத்தி வந்துள்ளது. டி.எஸ். சேனநாயக்கா தொடக்கி வைத்த கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களினால் தமிழ்ப்பாரம்பரியப் பகுதிகள் சிங்களவரின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டன. மதுறு ஓயாத் திட்டத்தின் மூலம் சிங்களக் குடியேற்றம் தமிழர் பிரதேசங்களில் முடக்கி விடப்பட்டது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வட மேற்கே சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆங்காங்கே அமைக் கப்பட்ட பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும், தமிழர்களைப் பழிவாங்கும் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களுக்குத் துணையாக அமைந்தன.

தென் தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் இராணுவ அட்டுழியங்களாலும், முஸ்லீம் மத ரீதியான ஜிகாத் இயக்கத்தின் அழிப்பு நடவடிக்கையாலும் அவலத்தின் விளிம்புக்கே தள்ளப்பட்டுள்ள தென் தமிழீழ இளைஞர்கள் தமது தாயகத்தை தாயகத்தின் வளத்தை இப் பிரதேசங்களில் தன்மானத்துடன் வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறும் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மைப் பெரிதும் இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அன்னை பூபதியின் போராட்ட சூழ் நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழீழ மக்களின் அவலக் குரல் கேட்டு "தமிழ் இனத்





தின் துயர் துடைப்போம்" என்ற போர்வையில் இந் திய அமைதி காக்கும் படை தமிழீழத்தில் கால் வைத்தது. விடுதலைப் புலிகளின் எழுச் சியையும், செயல் திறன்களையும் கண் டஞ்சிய இந்திய அரசு அவ் வியக்கத்தை அழித் துவிட திட்ட மிட்டது. ஆயுதக் கையளிப்பு என்ற வகையில் புலிகளைப் பலமிழக்கச்செய்து எமது இயக்கத்தை நலிவடையச் செய்யலாம் என இந்திய அரசு பகற்கனவு கண்டது. இப்பினனணியில் சிறீலங்கா அரசுடன் ஒப் பந்தம் செய்து தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடும் நயவஞ்சகத் தன்மையை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். இந்திய இராணு வத்தை வெளியேற்றும்படி தமிழ் மக்கள் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள். இந்திய அமைதிப்படை புலிகளை வேட்டையாடித் தீர்த்துக் கட்டலாம் எனப் போர்க்கொடி உயர்த் திப்புலிகளைத் தேடித்தேடி வதம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில் காந்திய வழிவந்த இந்திய அரசுடன் யுத்த நிறுத்த கோரிக்கையை முன்வைத்து இந்திய அரசு புலிகளுடன் அமை திப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்டு தமிழீழத்தனை நீக்கத்திற்காக அகிம்சை வழியில் தன்னையே தற்கொடை செய்த தமிழீழத்தாய் அன்னை பூபதியாவர்.

அனைத்துலக அரசியலரங்கில் எமது நியாய மான உரிமைப் போராட்டத்தின் தேவையை அன்னை பூபதியின் வீரச்சாவு எடுத்துக் காட்டியது; காந்தி தேசத்தின் கபடத்தைப் பாரறியப் பறைசாற்றியது, எமது போராட்டம் வெறுமனே விடுதலைப் புலிகளின் போரல்ல. அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை எம்மை அடக்கியாள நினைக்கும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எடுத்தியம்பியது.

அன்னை பூபதியின் போராட்ட வரலாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் வீரத்தையும், மானத்தையும் உரிமையுடன் வாழும் உணர்வையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

அரசியல் பிரிவு – தமிழீழ விடுதலைப் புலிகள், மட்டக்களப்பு – அம்பாறை (19.03.1992)




வன்னிச் சங்கம்-கனடா.
**VUnited Care for Kids Inc.**
Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Av, Toronto(ONT), M1V 4C7.
vunitedcare@gmail.com info@vcarekids.org TP:416-644-1113.

## வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுப்போம்

கனடா வன்னிச்சங்கமானது கடந்த 25 ஆண்டுகளாக தாயகத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த, மாற்றுத்திறனாளியான அல்லது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை , பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் பின்தங்கிய கிராம பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் போன்றவற்றினை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ் வருடம் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு 5 பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வினாவிடைப் புத்தகங்களைப் புதிதாகப் பதிப்புச் செய்து இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க போதியளவு நிதி வசதியின்மை எங்களிடம் உள்ளது. எனவே எங்கள் தமிழ் மாணவர்களின் அக்கறை கொண்ட கொடையாளர்களாகிய உங்கள் உதவியினை நாடி நிற்கின்றோம். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழ்கின்ற வருவாய் குன்றிய மாணவர்களது கல்வி முன்னேற்றங்கருதி உங்களிடமிருந்து சிறு சிறு தொகையாகவேனும் நிதியுதவி தாருங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களால் மனமுவந்து தரப்படுகின்ற கல்வி உதவித் தொகைகள் அனைத்திற்கும் வருமானவரிக் கழிவு பற்றுச்சீட்டு (Charitable Donation Receipts) வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிதி நன்கொடை செய்வதற்கு வங்கி இலக்கம் பெறுவதற்கு அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

வன்னிச் சங்கம்: 416-644-1113, நிதியாளர்:647-202-8286

e transfer: vunitedcare4kids@gmail.com

நிதி நன்கொடை செய்பவர்களுக்கு வரிக்கழிவுப் பற்றுச்சீட்டு வழங்குவதற்கேற்ற விபரங்கள் பெறுவதற்கு தயவு கூர்ந்து நிதியாளரைத் தொடர்பு கொள்ளவும்.

**“நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்”**

**பொ. சிவசுதன் - செயலாளர்.**
**கனடா வன்னிச் சங்கம். 416-558-1917.**

# தமிழ் ஈழத்தின் தாய் அன்னை பூபதி





ஈகைச் சாவடைந்த அன்னை பூபதி அவர்கள்



அன்னைக்கு மகளிர் வணக்கம்



அன்னைக்கு குடும்பத்தினர் வணக்கம்



அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் [1957 தொடக்கம் 2005 வரை]:

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| மானவீரன் திருமலைத்தியாகி நடராசன் | திருகோணமலை | 02.04.1957 |
| மாமனிதர் ஆ.இராசரத்தினம் | யாழ்ப்பாணம் | 01.01.1976 |
| இரத்தினம் விஸ்வஜோதி (இன்பம்) | யாழ்ப்பாணம் | 17.07.1979 |
| ரி.எஸ்.பாலேந்திரா | | 4.07.1979 |
| ஐயாத்துரை இந்திரராஜன் | யாழ்ப்பாணம் | 21.07.1979 |
| பரநிருபசிங்கம் இறைகுமாரன் | யாழ்ப்பாணம் | 27.05.1982 |
| சிவபாலசிங்கம் உமைகுமாரன் | யாழ்ப்பாணம் | 27.05.1982 |
| அந்திரேஸ்பிள்ளை விமலதாசன் | யாழ்ப்பாணம் | 24.07.1983 |
| (மனிதநாகமணியின் பத்திரிகை ஆசிரியர்) | | |
| இரெட்ணம் | மட்டக்களப்பு | 04.03.1985 |
| தனபாலசூரியர் ரஜந்தன் | யாழ்ப்பாணம் | 16.09.1985 |
| கந்தையா கந்தசாமி | திருகோணமலை | 16.09.1985 |
| சிவா (படகோட்டி) | வவுனியா | 13.02.1986 |
| பிக்கப் ரவி | யாழ்ப்பாணம் | 18.06.1986 |
| மாணிக்கம் தவசீலசேகரம் (வினோத்) | யாழ்ப்பாணம் | 17.07.1986 |
| கனகரத்தினம் சதானந்தன் (குஞ்சு) | கிளிநொச்சி | 17.08.1986 |
| மாப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 15.10.1986 |
| நாகமணி (நாட்டுப்பற்றளர்) | | |
| நாகமணி கைலைநாதன் | முல்லைத்தீவு | 14.06.1986 |
| கந்தையா ஏகாம்பரம் | திருகோணமலை | 28.06.1987 |
| ஆறுமுகநாதன் | திருகோணமலை | 08.06.1987 |
| காளிதாசன் செல்லக்குமார் (செல்வம்) | திருகோணமலை | 08.10.1987 |
| சவரிப்பிள்ளை சுழியாம்பிள்ளை யோகரத்தினம் (யோகம்) | மன்னார் | 23.09.1987 |
| வின்சன் (நவநிதி) | | |
| திருநாவுக்கரசு சுரேஸ்குமார் | யாழ்ப்பாணம் | 10.11.1987 |
| ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை | யாழ்ப்பாணம் | 10.11.1987 |
| (பெரியபுலம் மாகவித்தியாலய ஆசிரியர்) | | |
| சிவகுருநாதன் கணேசநாதன் (வவா) (நாடகநெறியாளர்) | யாழ்ப்பாணம் | 10.12.1987 |
| வீ.எம்.குகராஜா | | 13.10.1987 |
| செல்லச்சாமி | யாழ்ப்பாணம் | 24.10.1987 |
| சண்முகம் ரங்கநாதன் (மாஸ்ரர்) | யாழ்ப்பாணம் | 16.11.1987 |
| நாகரட்ணம் சிவசங்கர் | யாழ்ப்பாணம் | 21.12.1987 |
| விஸ்ணுமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | | |
| சிவலிங்கம் விஸ்ணுமூர்த்தி | யாழ்ப்பாணம் | 20.12.1988 |
| மொட்டைநாதன் கனகலிங்கம் புஸ்பநாதன் | யாழ்ப்பாணம் | 16.01.1988 |
| நடேசன் | அம்பாறை | 02.08.1988 |
| அன்னை பூபதி கணபதிப்பிள்ளை | மட்டக்களப்பு | 19.04.1988 |
| கணபதிப்பிள்ளை நவரத்தினராசா | கிளிநொச்சி | 24.04.1988 |
| ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை | கிளிநொச்சி | 04.08.1988 |
| த.முகுந்தன் (சிறீகரன்) (மாணவன்) | கிளிநொச்சி | 28.04.1988 |
| கந்தையா பாக்கியம் (பாக்கியம் அக்கா) | யாழ்ப்பாணம் | 06.01.1988 |
| கதிரிப்பிள்ளை நடராசா | யாழ்ப்பாணம் | 06.01.1988 |
| எம்.துரைராஜா | யாழ்ப்பாணம் | 24.08.1988 |
| பொன்னுத்துரை கணேசமூர்த்தி | யாழ்ப்பாணம் | 22.09.1988 |
| வைத்திலிங்கம் பரமநாதன் (சோதி) | யாழ்ப்பாணம் | 10.01.1988 |
| நந்தன் | | 10.02.1988 |
| வேலுப்பிள்ளை செல்லக்கண்டு | யாழ்ப்பாணம் | 10.04.1988 |
| செல்லக்கண்டு சோதிலிங்கம் | யாழ்ப்பாணம் | 04.10.1988 |
| திருமதி செல்லக்கண்டு இராசமுத்து | யாழ்ப்பாணம் | 04.10.1988 |
| கணபதிப்பிள்ளை வேல்முருகன் | | |
| சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் | | 10.05.1988 |
| பொன்னம்பலம் | | 10.06.1988 |
| அருளானந்தம் ரவி (டிஸ்கோரவி) | யாழ்ப்பாணம் | 13.10.1988 |
| கதிர்காமநாதன் | யாழ்ப்பாணம் | 14.10.1988 |
| பொன்னையா சிறீதரன் | யாழ்ப்பாணம் | 14.10.1988 |
| சின்னத்துரை சற்குணராசா | யாழ்ப்பாணம் | 18.10.1988 |
| (குளிர்பான நிலைய உரிமையாளர்) | | |
| மாமனிதர் சிவஞானசுந்தரம் (பிரஜைகள் குழுத்தலைவர்) | யாழ்ப்பாணம் | 21.10.1988 |
| செல்லையா கிளேற்றன் (கிற்றார் இசைக்கலைஞர்) | யாழ்ப்பாணம் | 21.10.1988 |
| சிவசிதம்பரப்பிள்ளை சிவராசபிள்ளை | யாழ்ப்பாணம் | 25.10.1988 |
| இராஜசங்கரி | யாழ்ப்பாணம் | 26.10.1988 |
| (தென்மராட்சி பிரஜைகள் குழு தலைவரும் சட்டத்தரணியுமான) | | |
| வெள்ளையன் | மட்டக்களப்பு | 11.02.1988 |
| சுந்தரம் | யாழ்ப்பாணம் | 11.03.1988 |
| காளிராஜா | திருகோணமலை | 11.04.1988 |
| கனகசபை தனபாலசிங்கம் | யாழ்ப்பாணம் | 11.04.1988 |
| சரவணமுத்து செல்வராசா (மாமா) | யாழ்ப்பாணம் | 11.05.1988 |
| (சாவகச்சேரி வர்த்தகர்சங்க செயலாளர்) | | |
| ரகு | திருகோணமலை | 11.07.1988 |
| கிருஸ்ணபிள்ளை வல்லிபுரம் (சுகந்தன்) | யாழ்ப்பாணம் | 11.08.1988 |
| பிறேம்குமார் | யாழ்ப்பாணம் | 11.08.1988 |
| பாலகிருஸ்ணன் (ஆசிரியர்) | | 11.11.1988 |

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| நாகேந்திரம் கிருஸ்ணதாஸ் (உயர்தர வகுப்பு மாணவன்) | யாழ்ப்பாணம் | 11.12.1988 |
| சுந்தரம் வைகுந்தநாதன் | யாழ்ப்பாணம் | 13.11.1988 |
| சங்கர் | | 14.11.1988 |
| கிளியன் | | 14.11.1988 |
| நாகச்செல்வன் குணாளன் (மாணவன்) | யாழ்ப்பாணம் | 19.11.1988 |
| தம்பிராசா சங்கரன் | கிளிநொச்சி | 21.11.1988 |
| பூலோகசிங்கம் | வவுனியா | 22.11.1988 |
| ந.பாலகுரு | வவுனியா | 22.11.1988 |
| மரியநாயகம் யூட்சக்காரியஸ் (சந்திரகுமார்) | யாழ்ப்பாணம் | 27.11.1988 |
| திருமதி மனோகதி பிரபாகரன் | யாழ்ப்பாணம் | 28.11.1988 |
| சின்னத்துரை குணரத்தினம் (குணம்) | கிளிநொச்சி | 11.01.1988 |
| தம்பிப்பிள்ளை சிவா | | 12.02.1988 |
| அண்ணா சிவதாசன் நிர்மலன் | யாழ்ப்பாணம் | 12.03.1988 |
| நாகமுத்து கருணானந்தசிவம் | யாழ்ப்பாணம் | 12.04.1988 |
| பொன்னுத்துரை வண்ணக்கிளி (முகுந்தன்) | யாழ்ப்பாணம் | 12.11.1988 |
| அரசலிங்கம் தேவதாசன் | யாழ்ப்பாணம் | 15.12.1988 |
| செல்வி மஞ்சுளாதேவி கனகரத்தினம் | யாழ்ப்பாணம் | 16.12.1988 |
| அருச்சுணன் ஜெயதாசன் (தயா) | யாழ்ப்பாணம் | 23.12.1988 |
| தம்பையா இருகுலசிங்கம் | யாழ்ப்பாணம் | 23.12.1988 |
| சந்திரகுமார் கதிரவேலு | யாழ்ப்பாணம் | 24.12.1988 |
| இராசதுரை முருகையா | யாழ்ப்பாணம் | 31.12.1988 |
| பரமேஸ்வரன் முரளிதரன் | யாழ்ப்பாணம் | 06.05.1989 |
| நடராசா கிருபாகரன் (கிருபா) | யாழ்ப்பாணம் | 06.06.1989 |
| இ.சதாசிவம் | | 06.09.1989 |
| சுப்பையா நிக்கலஸ் | வவுனியா | 06.11.1989 |
| தங்கவேலாயுதம் | யாழ்ப்பாணம் | 19.06.1989 |
| இராமநாதன் கணேஸ்குமார் | | 24.06.1989 |
| (விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | |
| செல்வம் அக்கா (செல்வம் செந்திவேல்) | யாழ்ப்பாணம் | 28.06.1989 |
| சுப்பிரமணியம் பரந்தாமன் | யாழ்ப்பாணம் | 07.03.1989 |
| சரோஜினிதேவி தாமோதரம்பிள்ளை (சறோ அக்கா) | திருகோணமலை | 13.07.1989 |
| செல்லத்துரை சச்சிதானந்தம் (யாழ். செயலக ஊழியர்) | யாழ்ப்பாணம் | 15.07.1989 |
| ஆ.மகாலிங்கம் (நில அளவையாளர்) | யாழ்ப்பாணம் | 17.07.1989 |
| நாகரத்தினம் விக்கினேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 19.07.1989 |
| திருநாவுக்கரசு பாலேந்திரா (பாலன்) | யாழ்ப்பாணம் | 20.07.1989 |
| கந்தையா வேலாயுதகுமாரர் (தம்பி) | யாழ்ப்பாணம் | 23.07.1989 |
| மகாலிங்கம் மகேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 23.07.1989 |
| (யாழ். மத்தியகல்லூரி வர்த்தகபிரிவு மாணவனும் வி.பு.மாணவர் இயக்க நீர்வேலி பொறுப்பாளரும்) | | |
| ரங்கராஜன் கிரிதரன் | யாழ்ப்பாணம் | 27.07.1989 |
| கனகரத்தினம் ரவீந்திரன் | யாழ்ப்பாணம் | 26.07.1989 |
| அந்தோனிமுத்து அன்ரனிபெனியஸ் (துரை) | யாழ்ப்பாணம் | 08.08.1989 |
| ரங்கநாதன் மாஸ்ரர் | | 15.08.1989 |
| செல்வி சோபா அடைக்கலமுத்து (மகள்) | யாழ்ப்பாணம் | 23.08.1989 |
| அடைக்கலமுத்து (தந்தை) | யாழ்ப்பாணம் | 23.08.1989 |
| க.இந்திரன் | யாழ்ப்பாணம் | 25.08.1989 |
| தர்மகுலேந்திரன் | கிளிநொச்சி | 23.09.1989 |
| இந்திரநாதகன் | யாழ்ப்பாணம் | 23.09.1989 |
| நாகநாதன் பாலேந்திரா | யாழ்ப்பாணம் | 23.09.1989 |
| செல்லையா யோசப்முல்லைத்தீவு | | 26.09.1989 |
| தர்மலிங்கம் ரவிச்சந்திரன் (ரவி) | கிளிநொச்சி | 10.06.1989 |
| கறுப்பையா குமாரராசா (குமார்) | கிளிநொச்சி | 10.06.1989 |
| செல்லத்தம்பி (செல்வம்) | யாழ்ப்பாணம் | 17.11.1989 |
| கனகசபை சுதாகரன் (சுதா) | கிளிநொச்சி | 27.11.1989 |
| திருஞானசேகரம் | யாழ்ப்பாணம் | 12.01.1989 |
| பாஸ்கரன் (ரஞ்சன்) | யாழ்ப்பாணம் | 25.12.1989 |
| தம்பு நடேசு (குளிர்பான நிலைய உரிமையாளர்) | கிளிநொச்சி | 22.12.1989 |
| பாலா | | 28.12.1989 |
| விஜயரட்ணம் தேவகுமார் (அறிவொளி) | யாழ்ப்பாணம் | 30.12.1989 |
| க.செல்வராசா (சின்னத்துரை) | யாழ்ப்பாணம் | 01.12.1990 |
| குணரத்தினம் விஜயகுமார் (விஜி) | யாழ்ப்பாணம் | 01.01.1989 |
| கணேசலிங்கம் ஜீவகுமார் (ஜீவன்) | யாழ்ப்பாணம் | 01.03.1989 |
| சின்னத்தம்பி சாந்தராசா (கண்ணன்) | யாழ்ப்பாணம் | 30.01.1989 |
| சுப்பிரமணியம் நித்தியானந்தராசா | யாழ்ப்பாணம் | 30.01.1989 |
| தனபாலசிங்கம் சந்தியேந்திரா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்) | | 11.07.1965 |
| சின்னத்தம்பி ஜெகநாதன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) | | 02.02.1989 |
| சிவஞானசுந்தரம் சிவரஞ்சன் (ரஞ்சன்) | யாழ்ப்பாணம் | 02.02.1989 |
| சின்னத்தம்பி ரவீந்திரன் (ராகவன்) | யாழ்ப்பாணம் | 02.04.1989 |
| கந்தசாமி சண்முகசுந்தரம் | யாழ்ப்பாணம் | 02.05.1989 |
| செல்லத்துரை தனபாலசிங்கம் | யாழ்ப்பாணம் | 02.06.1989 |
| தெய்வேந்திரபாலன் (மெண்டிஸ்) | யாழ்ப்பாணம் | 02.09.1989 |
| சுதர்சன் (சுதன்) | முல்லைத்தீவு | 15.02.1989 |
| நாகலிங்கம் தேவராசா (சின்னத்தம்பி) | யாழ்ப்பாணம் | 03.07.1989 |

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் (1957 தொடக்கம் 2005 வரை):

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| கதிர்காமு கந்தையா | யாழ்ப்பாணம் | 03.07.1989 |
| செல்லையா தவலோகநாதன் (சந்திரன்) | யாழ்ப்பாணம் | 31.03.1989 |
| தம்பிராசா கிருபாகரன் (ஜீவா) | யாழ்ப்பாணம் | 15.04.1989 |
| கந்தையா செல்லத்துரை | யாழ்ப்பாணம் | 04.12.1989 |
| சபாபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் | யாழ்ப்பாணம் | 04.12.1989 |
| பாரத் | கிளிநொச்சி | 24.04.1989 |
| சின்னத்துரை பிரபாகரன் | முல்லைத்தீவு | 30.04.1989 |
| (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன்) | | |
| செல்லப்பா பாலேந்திரன் (செல்வந்தன்) | வவுனியா | 05.01.1989 |
| கந்தையா கணேசலிங்கம் | வவுனியா | 05.01.1989 |
| சிறீவையாபுரி செல்வம் | முல்லைத்தீவு | 05.01.1989 |
| கந்தவேல் | யாழ்ப்பாணம் | 01.08.1989 |
| கனகசபை சண்முகசோதி (சோதி) | யாழ்ப்பாணம் | 05.09.1989 |
| திருச்செல்வம் அகிலன் | யாழ்ப்பாணம் | 05.10.1989 |
| (யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர மாணவன்) | | |
| தவேந்திரராசா | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| செ.சிவலிங்கம் | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| இ.பார்த்தீபன் | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| சபாபதி பாலசிங்கம் (பாலு) | | 25.05.1989 |
| குலசேகரம் பத்மநாதன் | திருவிளங்கம் | 28.05.1989 |
| செல்வநாதர் கிறிஸ்தோப்பர் | யாழ்ப்பாணம் | 28.05.1989 |
| கதிரிப்பிள்ளை நடராசா | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| நாகரட்ணம் ஆனந்தராசா (ஆனந்தி) | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| (யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மாணவன்) | | |
| செல்வராணி உருத்திரசிங்கம் | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| சிவஞானவதி சிவசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| இராசதுரை றொபின்சன்தோமஸ் | யாழ்ப்பாணம் | 06.03.1989 |
| விக்கினேஸ்வரன் (வவி) | | 21.05.1990 |
| மார்க்கண்டு அருமைநாயம் (டங்கா) | திருகோணமலை | 14.06.1990 |
| (பல்கலைக்கழக மாணவன்) | | |
| கனகரத்தினம் | அம்பாறை | 17.06.1990 |
| செந்தில்வேல் மணிமாறன் (ரவி) | யாழ்ப்பாணம் | 20.06.1990 |
| செல்வரத்தினம் செல்வக்குமார் (ராசன்) | யாழ்ப்பாணம் | 08.07.1990 |
| காசிலிங்கம் சிவபாலன் (மாம்பழம்) | யாழ்ப்பாணம் | 08.07.1990 |
| லிங்கம் | யாழ்ப்பாணம் | 23.09.1990 |
| பொன்ராசா | | 23.09.1990 |
| செல்வராசா | | 23.09.1990 |
| சுப்பிரமணியம் தியாகராஜா | யாழ்ப்பாணம் | 11.10.1990 |
| மாமனிதர் பொ.அருணாசலம் | வவுனியா | 12.01.1990 |
| பாலசுந்தரம் ரவீந்திரன் | மட்டக்களப்பு | 04.04.1991 |
| ஜெயதாஸ் | வவுனியா | 16.06.1991 |
| சிவபாதம் சுரேஸ்குமார் | யாழ்ப்பாணம் | 07.01.1991 |
| இரத்தினம் வர்ணகுலசிங்கம் (குயிலன்) | யாழ்ப்பாணம் | 16.07.1991 |
| சுரேஸ் | யாழ்ப்பாணம் | 28.07.1991 |
| சிவஞானம் சிறீயானந்தம் (தேவன்) | யாழ்ப்பாணம் | 30.07.1991 |
| அருமை | மட்டக்களப்பு | 16.09.1991 |
| விஸ்மா | மட்டக்களப்பு | 28.10.1991 |
| தேவராஜா | மட்டக்களப்பு | 28.10.1991 |
| இ.உதயகுமார் (ரவி) | மட்டக்களப்பு | 28.11.1991 |
| திருமதி சிவக்கொழுந்து ஞானமுத்து | முல்லைத்தீவு | 13.12.1991 |
| சி.நிதி | | 28.12.1991 |
| பீதாம்பரம் | மட்டக்களப்பு | 28.12.1991 |
| சந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சுந்தரலிங்கம் சந்திரலிங்கம் | யாழ்ப்பாணம் | 06.09.1991 |
| ராசா (நாட்டுப்பற்றாளர்) நாகராசா புலேந்திரராசா | யாழ்ப்பாணம் | 16.01.1991 |
| ஆனந்தம் | மட்டக்களப்பு | 01.09.1992 |
| ராஜன் | மட்டக்களப்பு | 01.10.1992 |
| இராசா | மட்டக்களப்பு | 21.01.1992 |
| பொன்னர் பாலசுப்பிரமணியம் (பெரியண்ணன்) | வவுனியா | 29.02.1992 |
| க.தீஸ்வரன் (சததியநாதன்) | யாழ்ப்பாணம் | 03.02.1992 |
| (விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | |
| கணபதிப்பிள்ளை திருத்தணி | மட்டக்களப்பு | 05.12.1992 |
| ஞானசேகர் ஜெயகணேஸ் | மட்டக்களப்பு | 14.05.1992 |
| கணபதிப்பிள்ளை | திருகோணமலை | 14.05.1992 |
| (திருகோணமலை முட்டுச்சேனை பாடசாலை அதிபர்) | | |
| மதிவாணன் (விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | 14.05.1992 |
| கதிர்காமப்போடி கனகரத்தினம் | மட்டக்களப்பு | 06.03.1992 |
| கணபதிப்பிள்ளை ஜெயசீலன் | மட்டக்களப்பு | 26.07.1992 |
| புண்ணியம் பாலசிங்கம் | திருகோணமலை | 08.07.1992 |
| யோகநாதன் ரூபகுமார் (ரூபன்) | மட்டக்களப்பு | 08.08.1992 |
| தயாளன் | மட்டக்களப்பு | 26.09.1992 |
| நாகராசா சூரியபாலன் (ஆதரவாளர்) | யாழ்ப்பாணம் | 27.10.1992 |

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| நடேசு | கிளிநொச்சி | |
| சீனித்தம்பி யோகநாதன் | மட்டக்களப்பு | 13.12.1992 |
| (யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை 4ம் ஆண்டு மாணவன்) | | |
| பொன்னுத்துரை முருகமூர்த்தி (இராசா) | கிளிநொச்சி | 01.04.1993 |
| சின்னவன் பஞ்சலிங்கம் ஜெகநாதன் (ஆதரவாளர்) | யாழ்ப்பாணம் | 27.01.1993 |
| மாகாலிங்கசிவன் (நாட்டுப்பற்றாளர்) ஞானசம்பந்தர் | மட்டக்களப்பு | 18.10.1993 |
| வேலுப்பிள்ளை (நாட்டுப்பற்றாளர்) | | |
| வெள்ளைக்குட்டி வேலுப்பிள்ளை | அம்பாறை | 19.04.1994 |
| கந்தன் (ஆதரவாளர்) | மட்டக்களப்பு | 24.01.1994 |
| சின்னத்தம்பி (ஆதரவாளர்) | | |
| ரெட்ணசிங்கம் சின்னத்தம்பி | மட்டக்களப்பு | 30.01.1994 |
| வசந்தன் (ஆதரவாளர்) கந்தையா வசந்தன் | மட்டக்களப்பு | 28.02.1994 |
| ரவீந்தீரன் (ஆதரவாளர்) சீனித்தம்பி ரவீந்தீரன் | மட்டக்களப்பு | 03.07.1994 |
| பிரபா (ஆதரவாளர்) கோணமலை பிரபா | திருகோணமலை | 05.08.1994 |
| நற்குணம் (ஆதரவாளர்) நவரெட்ணம் நற்குணம் | மட்டக்களப்பு | 07.10.1994 |
| சிவலிங்கம் (ஆதரவாளர்) சித்திரவேல் சிவலிங்கம் | மட்டக்களப்பு | 18.07.1994 |
| சின்னவன் (ஆதரவாளர்) கிருஸ்ணபிள்ளை கிருபைராஜா | மட்டக்களப்பு | 09.04.1994 |
| யோகநாதன் (ஆதரவாளர்) ஏரம்பமூர்த்தி யோகநாதன் | மட்டக்களப்பு | 10.12.1994 |
| சதாகரன் (ஆதரவாளர்) சின்னத்துரை சதாகரன் | மட்டக்களப்பு | 25.11.1994 |
| சந்திரசேகரம் (நாட்டுப்பற்றாளர்) கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் | மட்டக்களப்பு | 19.04.1994 |
| நாவேந்திரன் (புலிமாமா) செல்லையா தர்மசேனன் | யாழ்ப்பாணம் | 08.05.1995 |
| ரவீந்திரராசா (நாட்டுப்பற்றாளர்) செல்லத்துரை ரவீந்திரராசா | யாழ்ப்பாணம் | 15.09.1995 |
| கணேசன் (ஆதரவாளர்) கணேசன் | மட்டக்களப்பு | 01.01.1996 |
| ஞானச்செல்வன் (ஆதரவாளர்) ஞானச்செல்வன் வேல்ராஜ் | மட்டக்களப்பு | 23.02.1995 |
| இன்பன் (ஆதரவாளர்)தியாகராசா இன்பராசா (இன்பன்) | மட்டக்களப்பு | 23.11.1995 |
| சின்னவன் (ஆதவாளர்) மாணிக்கம் சின்னவன் | மட்டக்களப்பு | 13.06.1995 |
| ரவீந்திரன் (ஆதரவாளரர்) அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன் | யாழ்ப்பாணம் | |
| சத்தியானந்தன் (நாட்டுப்பற்றாளர்) சிதம்பரப்பிள்ளை சத்தியானந்தன் | மன்னார் | 15.03.1996 |
| யோகேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சிவபாலசுப்பிரமணியம் யோகேந்திரன் | யாழ்ப்பாணம் | 21.11.1996 |
| தியாகதாஸ் (நாட்டுப்பற்றாளர்) வீரசிங்கம் தியாகதாஸ் | யாழ்ப்பாணம் | 21.11.1996 |
| நிமலேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) பிரான்சிஸ் ஜஸ்மின் நிமலேந்திரன் | திருகோணமலை | 02.05.1997 |
| கவிதன் (நாட்டுப்பற்றாளர்) கந்தசாமி சிறிகிருபாகரன் | கிளிநொச்சி | 02.05.1997 |
| தனிநாயகம் (நாட்டுப்பற்றாளர்) போனிஸ் தனிநாயகம் | கிளிநொச்சி | 02.05.1997 |
| ராமு (நாட்டுப்பற்றாளர்) சுப்பிரமணியம் சிறிராம் | யாழ்ப்பாணம் | 02.05.1997 |
| பேச்சிமுத்தன் (நாட்டுப்பற்றாளர்) கணபதி பேச்சிமுத்தன் | திருகோணமலை | 02.08.1997 |
| தங்கராஜ் (நாட்டுப்பற்றாளர்) சிவராசா தங்கராஜ் | மட்டக்களப்பு | 04.01.1997 |
| நெவில்நிலான் (நாட்டுப்பற்றாளர்) சூசைப்பிள்ளை லெனிஸ்லால் நெவில்நிலான் | மன்னார் | 05.10.1997 |
| ரவி (நாட்டுப்பற்றாளர்) தங்கராசா ரவீந்திரன் | மட்டக்களப்பு | 18.05.1997 |
| பிரபாகரன் (நாட்டுப்பற்றாளர்) பொன்னம்பலம் பிரபாகரன் | முல்லைத்தீவு | 10.06.1997 |
| விஜயகுமார் (நாட்டுப்பற்றாளர்) சின்னத்தம்பி விஜயகுமார் | திருகோணமலை | 23.12.1997 |
| தோமாஸ் (நாட்டுப்பற்றாளர்) யோகரத்தினம் தோமாஸ் | மலேசியா | 16.10.1997 |
| ஜெகதீஸ்குமார் (நாட்டுப்பற்றாளர்) சிங்கராசா ஜெகதீஸ்குமார் | யாழ்ப்பாணம் | 21.12.1998 |
| தர்மசீலன் (நாட்டுப்பற்றாளர்) வேலு தர்மசீலன் பம்சிவா | கிளிநொச்சி | 02.03.1998 |
| ராஜ்குமார் (நாட்டுப்பற்றாளர்) துரைசிங்கம் ராஜ்குமார் (குட்டி) | யாழ்ப்பாணம் | 02.03.1998 |
| தயாகரன் (நாட்டுப்பற்றாளர்) பத்மநாதன் தயாகரன் | யாழ்ப்பாணம் | 02.03.1998 |
| வையின்குமார் (நாட்டுப்பற்றாளர்) சின்னையா வையின்குமார் | கிளிநொச்சி | 02.03.1998 |
| சுந்தரவதனன் (நாட்டுப்பற்றாளர்) அழகேந்திரன் சுந்தரவதனன் | திருகோணமலை | 21.02.1998 |
| சூரி (நாட்டுப்பற்றாளர்) சீவரட்ணம் சூரி | மட்டக்களப்பு | 16.03.1998 |
| வெள்ளைக்குட்டி (நாட்டுப்பற்றாளர்) நாகமுத்து சேதுராசா | மட்டக்களப்பு | 12.03.1998 |
| ரவீந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சுப்பிரமணியம் ரவீந்திரன் | மட்டக்களப்பு | 24.04.1998 |
| பாஸ்கரன் (நாட்டுப்பற்றாளர்) மாணிக்கம் பாஸ்கரன் | மட்டக்களப்பு | 04.08.1998 |
| தியாகு (நாட்டுப்பற்றாளர்) சண்முகம் தியாகராஜா | யாழ்ப்பாணம் | 04.11.1998 |
| தவராசா (நாட்டுப்பற்றாளர்) சுந்தரசேகரம் தவராசா | திருகோணமலை | 22.06.1998 |
| தேவதாஸ் (நாட்டுப்பற்றாளர்) இராசமாணிக்கம் தேவதாஸ் | மட்டக்களப்பு | 18.06.1998 |
| சுரேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) கிருஸ்ணபிள்ளை சுரேந்திரன் | மட்டக்களப்பு | 16.06.1998 |
| சுப்பையா (நாட்டுப்பற்றாளர்) வெள்ளையன் வேலு சுப்பையா | முல்லைத்தீவு | 06.08.1998 |
| வினோ (நாட்டுப்பற்றாளர்) மாணிக்கவேல் வினோகரன் | மட்டக்களப்பு | 06.12.1998 |
| பாலன் (நாட்டுப்பற்றாளர்) சின்னத்தம்பி பாலன் | அம்பாறை | 02.09.1999 |
| ராம் (நாட்டுப்பற்றாளர்) ஏகாம்பரம் யோகேஸ்வரன் | முல்லைத்தீவு | 03.01.1999 |
| இராசன் (நாட்டுப்பற்றாளர்) குமரநாயகம் இராசன் | அம்பாறை | 20.12.1999 |
| ராசன் (நாட்டுப்பற்றாளர்) குமாரநாயகம் ராசன் | அம்பாறை | 20.12.1999 |
| சின்னவன் (நாட்டுப்பற்றாளர்) கலாமோகன் சுகந்தன் | யாழ்ப்பாணம் | 23.05.2000 |
| ரகு (நாட்டுப்பற்றாளர்) தம்பித்துரை ரகுநாதன் | கிளிநொச்சி | 15.06.2000 |
| ரமேஸ் (நாட்டுபற்றாளர்) வடிவேலு ரமேஸ்குமார் | மட்டக்களப்பு | 18.06.2000 |
| கஜேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) குணசேகரம் கஜேந்திரன் | முல்லைத்தீவு | 07.10.2000 |
| பிரபாகரன் (நாட்டுப்பற்றாளர்) செல்லத்துரை பிரபாகரன் | யாழ்ப்பாணம் | 22.07.2000 |
| குமார் (நாட்டுப்பற்றாளர்) மத்தியாஸ் குமார் | யாழ்ப்பாணம் | 22.02.2000 |

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் (1957 தொடக்கம் 2005 வரை):

| அழைக்கும் பெயர் | முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|---|
| மதி (நாட்டுபற்றாளர்) | வைரவன் வேலும்மயிலும் | கிளிநொச்சி | 24.09.2000 |
| சேரமான் (நாட்டுப்பற்றாளர்) | முருகையா நவநீதன் | யாழ்ப்பாணம் | 26.10.2000 |
| ரவீந்திரகுமார் (நாட்டுப்பற்றாளர்) | ரங்கநாதன் ரவீந்திரகுமார் | முல்லைத்தீவு | 28.12.2000 |
| சிவநாதன் (நாட்டுப்பற்றாளர்) | கந்தசாமி சிவநாதன் | யாழ்ப்பாணம் | 30.07.2001 |
| பத்மாவதி (நாட்டுப்பற்றாளர்) | தில்லைநாயகம் பத்மாவதி | யாழ்ப்பாணம் | 21.01.2001 |
| வாசுகி (நாட்டுப்பற்றாளர்) | வாசுகி தியாகராசா | யாழ்ப்பாணம் | 18.01.2001 |
| றெஜினா (நாட்டுப்பற்றாளர்) | பத்மாவதி ஜெகநாதன் | யாழ்ப்பாணம் | 17.02.2001 |
| கைலைராசா (நாட்டுப்பற்றாளர்) | பெரியகறுப்பன் புஸ்பராஜ் | மன்னார் | 02.08.2001 |
| தொப்பி (நாட்டுப்பற்றாளர்) | சின்னத்தம்பி நல்லையா | கிளிநொச்சி | 03.02.2001 |
| ராஜா (நாட்டுப்பற்றாளர்) | சின்னையா கந்தையா | முல்லைத்தீவு | 13.04.2001 |
| தவமணி (நாட்டுப்பற்றாளர்) | செல்வரத்தினம் தவமணி | முல்லைத்தீவு | 29.04.2001 |
| குமார் (நாட்டுப்பற்றாளர்) | பெருமாள் விஜயகுமார் | கிளிநொச்சி | 15.05.2001 |
| சக்திவேல் (நாட்டுப்பற்றாளர்) | ரங்கன் சக்திவேல் | முல்லைத்தீவு | 26.06.2001 |
| கனகலிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | கணபதிப்பிள்ளை கனகலிங்கம் | கிளிநொச்சி | 28.06.2001 |
| குயிலன் (நாட்டுப்பற்றாளர்) | சிவசுப்பிரமணியம் சதானந்தன் | திருகோணமலை | 07.08.2001 |
| மோகனாம்பிகை (நாட்டுப்பற்றாளர்) | கணேசன் மோகனாம்பிகை | யாழ்ப்பாணம் | 10.04.2001 |
| கந்தசாமி (நாட்டுப்பற்றாளர்) | கணபதிப்பிள்ளை கந்தசாமி | கிளிநொச்சி | 29.10.2001 |
| ராஜ்குமார் (நாட்டுப்பற்றாளர்) | பொன்னுத்துரை தர்மகுலசிங்கம் | திருகோணமலை | 27.11.2001 |
| மரியதாஸ் (நாட்டுப்பற்றாளர்) | ஞானப்பிரகாசம்ம் மரியதாஸ் செல்வக்கோன் | யாழ்ப்பாணம் | 03.04.2001 |
| இராசரத்தினம் (நாட்டுப்பற்றாளர்) | வேலுப்பிள்ளை இராசரத்தினம் | கிளிநொச்சி | 24.04.2001 |
| புஸ்பராசா (நாட்டுப்பற்றாளர்) | கந்தசாமி புஸ்பராசா | கிளிநொச்சி | 27.04.2001 |
| சந்திரசிறி (நாட்டுப்பற்றாளர்) | பாலசிங்கம் சந்திரசிறி | வவுனியா | 28.06.2001 |
| ஆச்சி (நாட்டுப்பற்றாளர்) | கந்தையா சின்னப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 16.02.2002 |
| கணபதிப்பிள்ளை (நாட்டுப்பற்றாளர்) | பரமானந்தர் கணபதிப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 27.02.2002 |
| கருணாநிதி (நாட்டுப்பற்றாளர்) | மார்க்கண்டு கருணாநிதி | யாழ்ப்பாணம் | 23.09.2002 |
| அமுதீஸ்வரன் (நாட்டுப்பற்றாளர்) | இரத்தினராசா அமுதீஸ்வரன் | யாழ்ப்பாணம் | 06.07.2002 |
| ரவீந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | முருகேசு ரவீந்திரன் | முல்லைத்தீவு | 08.06.2002 |
| செல்வம் (நாட்டுப்பற்றாளர்) | அரியக்குட்டி செல்வம் | யாழ்ப்பாணம் | 03.12.2002 |
| ஞானசம்மந்தன் (நாட்டுப்பற்றாளர்) | மகாலிங்கம ஞானசம்மந்தன் | மட்டக்களப்பு | 10.10.2003 |
| ரவி (நாட்டுப்பற்றாளர்) | கதிரமலை ரவி | அம்பாறை | 09.10.2003 |
| சதீஸ்குமார் (நாட்டுப்பற்றாளர்) | மகேந்திரம் சதீஸ்குமார் | அம்பாறை | 09.10.2003 |
| சந்திரநாதன் (நாட்டுப்பற்றாளர்) | மனோகரன் சந்திரநாதன் | அம்பாறை | 09.10.2003 |
| செல்வகுமார் (நாட்டுப்பற்றாளர்) | அரசரத்தினம் செல்வகுமார் | அம்பாறை | 09.10.2003 |
| சிவகுமார் (நாட்டுப்பற்றாளர்) | நாகராசா சிவகுமார் | அம்பாறை | 09.10.2003 |
| ஜெயபிரகாஸ் (நாட்டுப்பற்றாளர்) | விஜயராசா ஜெயபிரகாஸ் | அம்பாறை | 09.10.2003 |
| குமாரசிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | நல்லையா குமாரசிங்கம் | அம்பாறை | 09.10.2003 |
| அமலராஜ் (நாட்டுப்பற்றாளர்) | அமரசிங்கம் அமலராஜ் | மட்டக்களப்பு | 16.11.2003 |

| அழைக்கும் பெயர் | முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|---|
| குலேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | தவராசா குலேந்திரன் | மட்டக்களப்பு | 16.11.2003 |
| மிராஜ் (நாட்டுப்பற்றாளர்) | வடிவேல் நிமலநாதன் | மட்டக்களப்பு | 24.11.2003 |
| பிரதீபன் (நாட்டுப்பற்றாளர்) | நாகன் பிரதீபன் | யாழ்ப்பாணம் | 20.11.2003 |
| பாலசுந்தரம் (நாட்டுப்பற்றாளர்) | பலகிருஸ்ணன் பாலசுந்தரம் | கிளிநொச்சி | 22.12.2003 |
| கணேசமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | பொன்னம்பலம் கணேசமூாத்தி | கிளிநொச்சி | 22.01.2004 |
| மதி (நாட்டுப்பற்றாளர்) | கார்த்திகேசு மதியழகன் | யாழ்ப்பாணம் | 09.01.2004 |
| யோகநாதன் (நாட்டுப்பற்றாளர்) | செல்லத்துரை யோகநாதன் | முல்லைத்தீவு | 24.01.2004 |
| சுரேஸ் (நாதன்) (நாட்டுப்பற்றாளர்) | வீரசிங்கம் சுரேஸ்நாதன் | யாழ்ப்பாணம் | 25.01.2004 |
| விமல் (நாட்டுப்பற்றாளர்) | கணேசையா விமலேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 04.01.2004 |
| கணேசலிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | கறுவல்தம்பி கணேசலிங்கம் | மட்டக்களப்பு | 31.03.2004 |
| நடேசதுரை (நாட்டுப்பற்றாளர்) | ஆறுமுகம் நடேசதுரை | யாழ்ப்பாணம் | 04.02.2004 |
| ஜெயந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | சண்முகம் ஜெயந்திரன் | மட்டக்களப்பு | 04.11.2004 |
| நடேசன் ((நாட்டுப்பற்றாளர்) | ஐயாத்துரை நடேசன் | யாழ்ப்பாணம் | 31.05.2004 |
| பத்மநாதன் (நாட்டுப்பற்றாளர்) | சீனியப்பா பத்மநாதன் | யாழ்ப்பாணம் | 25.06.2004 |
| இரத்தினம் (நாட்டுப்பற்றாளர்) | செல்லையா இரத்தினம் | யாழ்ப்பாணம் | 15.08.2004 |
| தினேஸ் (நாட்டுப்பற்றாளர்) | குமாரசூரியம் மகேஸ்வரன் | மட்டக்களப்பு | 17.10.2004 |
| பாசியரட்ணம் (நாட்டுப்பற்றாளர்) | புவனசிங்கம் பாசியரட்ணம் | மட்டக்களப்பு | 17.10.2004 |
| கணேசமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | கதிர்காமத்தம்பி கணேசமூர்த்தி | மட்டக்களப்பு | 19.10.2004 |
| காந்தன் (நாட்டுப்பற்றாளர்) | சாமித்தம்பி உமாகாந்தன் | அம்பாறை | 26.11.2004 |
| சொக்கன் (நாட்டுப்பற்றாளர்) | கந்தப்புசெட்டியார் சொக்கலிங்கம் | யாழ்ப்பாணம் | 12.10.2004 |
| புலோமினம்மா (நாட்டுப்பற்றாளர்) | ஜோர்ஜ் புலோமினம்மா | | 26.12.2004 |
| நிக்சன் (நாட்டுப்பற்றாளர்) | சின்னராசா (அருளானந்தம்) நிக்சன் (பிரியராஜ்) | யாழ்ப்பாணம் | 26.12.2004 |
| லிங்கேஸ்வரன் (நாட்டுப்பற்றாளர்) | வைரவநாதன் லிங்கேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 31.05.2004 |
| மணியம்மை(நாட்டுப்பற்றளர்) | சூசைப்பிள்ளை மணியம்மா | முல்லைத்தீவு | 26.12.2004 |
| சந்திரநேரு(நாட்டுப்பற்றளர்) | அரியநாயகம் சந்திரநேரு | அம்பாறை | 02.08.2005 |
| ஏரம்புஜயா(நாட்டுப்பற்றளர்) | கந்தையா ஏரம்பு | யாழ்ப்பாணம் | 23.02.2005 |
| சிவராசா(நாட்டுப்பற்றளர்) | கணபதிப்பிள்ளை சிவராசா | யாழ்ப்பாணம் | 03.06.2005 |
| தில்லைக்கூத்தன் (நாட்டுப்பற்றளர்) | இளையதம்பி நடராசா | யாழ்ப்பாணம் | 05.08.2005 |
| மணியம்மா((நாட்டுப்பற்றளர்) | சூசைப்பிள்ளை மணியம்மா | முல்லைத்தீவு | 26.12.2005 |

தொடரும்...




# 19.04.2022 நாட்டுப்பற்றாளர் நாள் அன்னை பூபதி ஒரு குறியீடு!




# புதுக்குடியிருப்பு ஐயன்கேவிலடி படுகொலை 21 ஏப்பிரல் 1985

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் புதுக் குடியிருப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு தொழில் களைச் செய்யும் மக்கள் வாழ்கின்றனர். கூடுத லானவர்கள் விவசாயத்தையே தொழிலாக மேற்கொள்கிறார்கள்.

இக்கிராமம் அடிக்கடி இராணுவச் சுற்றி வளைப்புக்கு உட்படுவதுண்டு. 21-04-1985 அன்று இக்கிராமம் அதிகாலை சுற்றிவளைக் கப்பட்டுப் பல பொதுமக்கள் கைது செய்யப்பட் டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியி ருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களென அடை யாளம் காணப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர். விடுதலை செய்யப்படாத அனை வரும் அன்று மாலை மூன்று மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்து கொண்டு சென்றவர்களில் இரு பத்து நான்கு பேரை இராணுவம் காட்டுக்குள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டது. இவர் களில் இராமநாதன், துரைரட்ணம் ஆகிய இருவரும் காயப்பட்ட நிலையிலும், செபஸ்ரியாம்பிள்ளை, நடனசபாபதி ஆகியோர் காயம் எதுவுமின்றியும் தப்பினார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உட் பட்டவர்கள் அனைவரையும் இராணுவ ராக் வண்டியில் ஏற்றி ஒட்டுசுட்டான் நோக்கிச் செல்லும் வழியில் காயாமோட்டை என்னும் இடத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்களையம் கைது செய்துகொண்டு இடை யில் இறக்கிவிட்டு சென்றனர். காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று கத்தியபடி பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் கற்சிலைமடுவில் வைத்து மக்க ளைக் கொண்டு ரயர்கள் சேகரித்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச்சென்று ஒட்டுசுட்டான் காவல்துறை நிலையத்தின் பின்புறத்தில் வைத்து ரயர்கள் மீது இறந்தவர்களின் உடல் களை அடுக்கித் தீமூட்டி எரித்தார்கள்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் துரைரட்ணம் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,
“அதிகாலையில் நகரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்தனர். அதில் அரசாங்க ஊழியர்கள் விடுவிக்கப்பட் டனர். விசாரணை முடிந்த பின்னர் எல்லோரையும் 3.00 மணியளவில் ஏற்றி ஒட்டுசுட்டான் வீதி நோக்கிச் சென்றனர். பின் காட்டுப்பகுதியில் வைத்து எல்லோரையும் இறக்கி அவ்வீதியிலிருந்த சிறு வீதியில் வைத்து வரிசையாக நிறுத்திச் சுட்டனர். இதில் நானும் நடனசபாபதியும் படுகாயத்துடன் உயிர் தப்பினோம்.”

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. கனகசுந்தரம் கருணானந்தம், 39, -
2. சீனி ஜோசப், 32, -
3. சீனி தேவதாஸ், 24, -
4. அதிரியான் அமலதாஸ், 19, -
5. அப்பையா இந்திரன், 32, -
6. றைமேந்து இருதயநாதன், 45, -
7. தாமோதரம்பிள்ளை, 20, -
8. மாணிக்கம் பௌளின்ராசா, 21, -
9. கிட்டினன், 32, -
10. சங்கரப்பிள்ளை சத்தியசீலன், 21, மாணவன்
11. சிங்கரத்தினம் இளங்கோ, 18, மாணவன்
12. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, 32, விவசாயம்
13. அந்தோனிப்பிள்ளை டைட்சிங்ஸ்சி, 16, தொழிலாளி
14. அப்பையா புவனேந்திரன், 32, விவசாயம்
15. வினாயகமூர்த்தி ரகுநாதன், 28, தனியார்தொழில்
16. பெரியதம்பி பாலசுந்தரம், 30, தொழிலாளி
17. இலட்சுமணன், 30, -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பட்டித்திடல் படுகொலை – 26 ஏப்பிரல் 1987

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரி லிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவ சாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர் களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத் தினரின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்றவண்ணம் இருந்தன. பட்டித்திடற் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.

பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலை யின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிக சாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரைவிட்டு அகன்று விட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக் களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடும்ப மான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறீத்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறைவழிபாட்டில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர்.

வீடுவீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத் தினர் இறைவழிபாடடில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும், குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும், வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந் தைகளும் பாடசாலை மாணவ, மாணவி களும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டி லிருந்து கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. உலகநாதன் ஜெயப்பிரியா - 06
02. உலகநாதன் ஜெயரதி குழந்தை 01
03. உலகநாதன் யோகேஸ்வரி வீ.பணி 26
04. கோணன் பத்தினியன் தொழிலாளி 42
05. பத்தினியன் சீதையம்மா வீ.பணி 34
06. பத்தினியன் நேசன் மாணவன் 17
07. பத்தினியன் பிரகாஸ் மாணவன் 13
08. பத்தினியன் சோபனா மாணவி 12
09. பத்தினியன் கிருசாந்தி மாணவி 10
10. பத்தினியன் அற்புதராசா மாணவன் 08
11. கோணன் பொன்னம்மா வீ.பணி 60
12. கோணன் மேரி - 23
13. சின்னத்துரை யோகேஸ்வரி - 29
14. சிந்தாமணி பாலமுருகன் மாணவன் 11
15. சிந்தாமணி யோகராசா மாணவன் 14
16. சிந்தாமணி கோகுலேஸ்வரி மாணவி 15
17. சிந்தாமணி செந்தில்மணி கமம் 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கரப்பொழை, முத்துக்கல் படுகொலை ஏப்பிரல் 1987

கரப்பொழை, முத்துக்கல் கிராமங்கள் பொல நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களாகும். இக்கிராம மக்களின் பிரதான தொழில் கூலிவேலை செய்தல், மந்தை வளர்த்தல், காடுகளிற் தேனெடுத்தல் என்பனவாகும்.

29.04.1992 அன்று நள்ளிரவு இராணுவத் தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து பகல் முழுவதும் வேலை செய்த களைப்பில் இரவு நல்ல உறக்கத்திலிருந்த கரப்பொழை, முத்துக்கல் கிராமமக்களை, அவர்களின் வீடுகளினுட் புகுந்து வெட்டிப் படுகொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென தொண்ணூற்றேழிற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இரண்டு கிராம மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# புத்தூர் படுகொலை – 18 ஏப்பிரல் 2006

புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கிவிடுவார். வழமைபோல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கர வண்டியில் மேலும் மூன்று நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில் நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கர வாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள். இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி கௌரிபாலன், 32
02. செல்லன் கமலதாசன், 25
03. தங்கராசா கவீந்திரன், 23
04. மகாதேவன் கிசோக்குமார், 22
05. சுப்பிரமணியம் கண்ணதாசன், 27

# திருகோணமலை மூதூர் படுகொலை 25 ஏப்பிரல் 2006

திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்பிரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறீலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களென 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நசுக்கப்பட்ட 12 பொதுமக்களின் உடல்கள் இத்தாக்குதலின் பின் கண்டெடுக் கப்பட்டது. இதில் 4, 15, 16 வயதான மூன்று சிறுவர்கள் அடங்குவர் இத்தாக்குதலைத் தொடர்ந்து 3000 குடும்பங்கள் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 25 பொதுமக்கள் மேற்சொன்ன தாக்குதலில் காயப்பட்டவகளாவர்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. ஞானசேகரம் ரேணுகரன், 23
2. செல்வராணி, 32
3. மெய்யன், 34
4. மெய்யன் கிருசாந்தன், 04
5. நாகையா ருக்குமணி, 49
6. நவரட்னம் ரஞ்சிதமலர், 56
7. பத்தினியன் நாகம்மா, 67
8. தர்மலிங்கம் சுரேஸ்ரூபன், 23
9. துரையப்பா ரதீஸ், 15
10. வரதன் ராஜ்குமார், 16
11. வீரபத்திரன் பகவதிப்பிள்ளை, 67
12. ஏ.மயூரன், 21
13. விழிராசா மயூரன், 21






# இலங்கையின் அதீத பாதுகாப்பு செலவீனங்களும் அதன் பொருளாதார நெருக்கடியும்

ஏப்பிரல் 12, 2022

இலங்கையின் அதீத பாதுகாப்புச் செலவீனங்கள் அதன் பொருளாதார நெருக்கடியையும், தமிழ் மக்களின் கசப் புணர்வையும் மோசமாக்குகின்றது.

அதற்கமைய,போர் முடிந்த பின் அதிகரித்துள்ள பாது காப்புச் செலவு (US $14.92 -, US $17.28 பில்லியன் விரய மாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு செலவு US $34.7 -, US $200 பில்லியன், வெளிநாட்டுக் கடன் US $50.7 பில்லியன் ஆகும்.

யுத்தம் முடிந்த பின்னும் அதிகரிக்கும் இராணுவ ஆளணி (223.000 -, 317,000), பாதுகாப்புச் செலவிற்கான நடப்பு வருட ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தின் 15% (சுமார் US $2 பில்லியன்,19 இல் 16 படை பிரிவுகள் வட மாகாணத்தில் நிலைநிறுத்தம் ஆகும்.

மே 2009இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்த போதிலும், சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்துள்ளதை தேர்ச்சி பெற்ற பொருளாதார அமைப்புகளால் தயாரிக்கப் பட்ட ஆய்வுத் தகவல்கள் நிரூபிக்கின்றன.

மேக்ரோ ட்ரெண்ட்ஸ் அறிக்கையின்படி, (முதலீட்டாளர் களுக்கான ஆராய்ச்சி தளம்) 1960ஆம் ஆண்டு முதல் சிறீலங்காவின் பாதுகாப்புக்கான வரவு செலவுத் திட்டச் செலவுகள் பின்வருமாறு:

காலம்

மொத்தம்

US $ Billion

ஆண்டு சராசரி

US$ Billion

1960 to 1982

0.52 0.023

1983 to 2009

14.92 0.553

2010 to 2019 (போரின் பின்)

17.28 1.728 மொத்தம் 32.72

2020ஆம் ஆண்டு வரை சிறிலங்கா தனது பாதுகாப்புக் காக US $34.7 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ள தாக உலக வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன்படி 2020 ஆம் ஆண்டு பாதுகாப்புக்காக மட்டும் US $1.58 பில்லியன் டொலர்களை இலங்கை செலவிட் டுள்ளது.

போருக்குப் பிந்தைய கால வரவு செலவுத் திட்ட பாதுகாப்பு செலவு (US $ 17.28 பில்லியன்) போர் கால பாதுகாப்பு செலவை விட (US $ 14.92 பில்லியன்) அதிகமாக உள்ளது.

இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் வெளியுறவு செயலாளருமான சிவசங்கர் மேனனின் அறிக் கையில், மே 2009இல் முடிவடைந்த இலங்கையின் உள் நாட்டுப் போரால் நாட்டிற்கு சுமார் US $ 200 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்திருப்பதை கருத்தில் கொள்வது பயனுள்ளது ஆகும்.

இந்த US $200 பில்லியன் டாலர்கள் மிகப் பெரியது மட்டு மன்றி சிறீலங்காவின் பதிவுகளில் கணக்கில் காட்டப்பட வில்லை. மேலும், மேலே மேற்கோள் காட்டப்பட்ட பாது காப்பு செலவின் புள்ளிவிபரங்களில் சர்வதேச சமூகங்க ளால் இலவசமாக வழங்கப்பட்ட அனைத்து பாதுகாப்பு உபகரணங்கள், வெடிமருந்துகள், ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள் ஆகியவை உள்ளடக்கப்படவில்லை.

இலங்கை இராணுவத்தினர் தொகை பின்வருமாறு:

வருடம் - மொத்தம்

1985 - 21,600




2009 (போர் முடிவில்) - 223,000

2018 - 317,000

மேற்கூறிய விபரங்களிலிருந்து, 2009 இல் போர் முடி வடைந்த பின்னரும், சிறீலங்காவில் இராணுவத்தை அதி கரிப்பதில் தனது வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான தொகையைச் செலவழித்து வருகிறது என்பது சந்தேகத் திற்கு இடமின்றி தெளிவாகிறது.

நடப்பு ஆண்டு மொத்த வரவு செலவுத் திட்டத்தின் 15%ஐ அதா வது சுமார் US $2 பில்லியன் டாலர்களை பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கியுள்ளது. இராணுவத்தினர் தொகையை 2009ல் போர் முடிவடையும் கட்டத்தில் 223,000 பேரிலிருந்து இன்றுவரை 317,000 ஆக (94,000 பேரால்) அதிகரித்தது.

இது 2009 இல் நடந்த போருக்குப் பிறகு, தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர் தாயகங்களில் இரா ணுவத்தினர் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளதை குறிக் கிறது.

இதற்கிடையில், சிறீலங்காவின் சமாதானம் மற்றும் நீதிக் கான பிரச்சாரக் குழு, (Sri Lanka Campaign for Peace & Justice) அதன் 06 மார்ச் 2013 அறிக்கையில் பின்வரும் புள்ளிவிவரங்களை வழங்கியது.

மேற்குறிப்பிட்ட அறிக்கையானது, வடக்கில் மாத்திரம், யுத் தத்தின் முடிவில் 200,000 படையினர் இருந்ததாகவும், 2012 இல் 300,000 ஆகவும், 2015 ஆம் ஆண்டளவில் 400,000 படையினரை நிலை கொள்ள வைக்க கணிப் பிடப்பட்டது..

இக்கணிப்பீடானது, சிறீலங்கா அரசாங்கம், வடக்கு கிழக் கில் வாழும் தமிழ் மக்களை அவர்களின் பூர்வீக வாழ் விடங்களிலிருந்து தற்காலிக வாழ்விடங்களுக்கு விரட்டி ஏழ்மை நிலைக்கு தள்ளி விட்டு, அங்கு ஏறக்குறைய தனது அனைத்து இராணுவத்தினரையும் நிலைநிறுத்தி வரு வதைக் குறிக்கிறது.

ஏற்கனவே 2009 ஆம் ஆண்டு வரை 30 வருட உள் நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், இரா ணுவத்தின் ஆக்கிரமிப்பிற்காக நில அபகரிப்பினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இடர் பகுப்பாய்வுகளை மேற்கொள்வது, ஊழல்கள் மீதான தணிக்கை போன்ற நடைமுறைகளை மேற்கொண்டு சிறீலங்கா தனது பாதுகாப்பு செலவினங்களை வீணாக் காமல் இருந்திருந்தால், US$50.7 பில்லியன் டாலர் வெளி நாட்டுக் கடன்களினால் ஏற்பட்ட பொருளாதார நெருக் கடியை ஓரளவு தணித்திருக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

சிறீலங்காவின் அரசியல்வாதிகள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் எவ்வாறு சொத்து சேர்த்தார்கள் என்று கேள்வி எழுப்புவதன் மூலம், பாதுகாப்புக் கொள்வனவுகள் மட்டுமன்றி உரக் கொடுக்கல் வாங்கல்கள், 2004 சுனாமி நன்கொடைகள் மற்றும் எண்ணெய்க் கசிவுகளுக்காக வழங்கப்பட்ட நஷ்டஈடு போன்றவற்றிற்கான நிதி ஆய்வை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மேற்கூறிய காரணிகளை ஆராயும் அதே வேளை, பின் வரும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கான சிறீலங்கா அர சாங்கத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால கொள்கை களை மீளாய்வு செய்தல் முன்னேற்றத்துக்கான ஆக்க பூர்வமான வழியாகும்.

கொள்கை நெருக்கடி ,பொருளாதார நெருக்கடி, மற்றும் - அரசியல் நெருக்கடி

சிறீலங்காவின் தற்போதைய அவலநிலை குறித்து சர்வ தேச சமூகம் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப் பது அத்தியவசியமாகும்.

அதே வேளையில், நாங்கள் சர்வதேச நாணய நிதியத் திடம் வலியுறுத்துவது என்னவென்றால் சிறீலங்காவின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவத்தின் அளவை குறைப்பதற்கு சிறீலங்காவின் மேல் அழுத்தங்களை பூர்வாங்க நடவடிக்கைகளை மேற் கொண்டு தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்கடிகளை நீக்குவதுடன் இரா ணுவமயமாக்கலை முற்றாக நிறுத்துவதன் மூலம் அதி கரித்த தேசிய செலவினத்தை குறைப்பதே முதல் மற்றும் முதன்மையான நடவடிக்கையாகும்.

அதே வேளையில், நாங்கள் சர்வதேச நாணய நிதியத் திடம் வலியுறுத்துவது என்னவென்றால் சிறீலங்காவின் மேல் அழுத்தங்களை கொடுப்பதற்கான பூர்வாங்க நட வடிக்கைகளை மேற் கொண்டு சிறீலங்காவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்களை முழுமையாக நீக்குவதுடன் சிறீலங்காவின் தேவையற்ற யுத்தசன்ன தத்தை குறைப்பதன் மூலம் அநாவசியமான தேசிய செல வினத்தை ஒழிப்பது முதன்மையான நடவடிக்கையாகும்.



# வடக்கு கிழகில் தமிழர்களை ஒடுக்கும் வகையான இராணுவ கட்டமைப்புக்கள் கலைக்கப்பட வேண்டும்

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

ஏப்பிரல் 08, 2022

இன்றைய நெருக்கடியிலிருந்து மீள இராணுவச் செலவினங்கள் குறைக்கப்பட்டேயாக வேண்டும். இதனை ஓர் முன்நிபந்தனையாக வைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் வேண்டுகோள் விடுப்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.
வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களின் மீதான ஒடுக்குமுறையாளராகச் செயற்படும் இராணுவக் கட்டமைப்புகள் கலைக்கப்பட வேண்டும். தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் அச்சத்தை நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் முயல்வார்களேயானால் நிச்சயமாக பாதுகாப்புச் செலவீனங்களை குறைக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதம் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்படி கருத்தினை தெரிவித்தார்.

அவரது உரையில் மேலும் தெரிவித்ததாவது,
நான் ஒரு பொருளாதாரத்துறை நிபுணன் அல்ல. ஆதலால் இந்த நாடு எதிர்கொண்டுள்ள பொருண்மிய நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீள்வது? என்பதுபற்றி நான் இச்சபையில் உபதேசம் செய்யவிரும்பவில்லை.

இருந்தாலும், இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து வெளிவருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை அணுக வேண்டும் என்ற கருத்து புத்திஜீவிகள் மத்தியில் வலுவானதாக உள்ளது என்பது உண்மை. அவ்வாறு செய்வதற்கு முன்னர் இலங்கை மீளக்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். கடன்களை மீளகட்டமைப்பது மட்டுமல்ல, இலங்கையின் அரச கட்டமைப்பை மீள கட்டமைப்பது பற்றியும், எவ்வாறு ஆட்சி நடத்துவது என்பதுபற்றியும் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டை ஆட்சிசெய்யும் முறையிலும் நெருக்கடி காணப்படுகிறது. இந்த நடைமுறை யதார்த்ததிலிருந்து ஒருவரும் விலகி ஓடிவிடமுடியாது.

இந்நிலையில், பொருண்மிய விடயத்தில் ஒரு பொது மனிதனாக, வடக்கு - கிழக்கினை பிரதிநிதித்துப்படுத்துகிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக சிலவிடயங்களை இங்கு முன்வைக்க விரும்புகிறேன். மீளகட்டுமானத்தைச் செய்யும் போது இந்த விடயங்களை கவனத்திற்கொள்வது அவசியமானது. இன்றைய பாதகமான பொருண்மிய நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு இது அவசியமானது என நான் கருதுகிறேன்.

முதலில், நீங்கள் கடந்தவருடம் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்ட விடயத்தைப் பார்த்தால் 2022ம் ஆண்டிற்கான பாதீட்டில் 14 விழுக்காடு பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதனை காணலாம். அவற்றுள் இராணுவச் செலவீனங்களுக்கான ஒதுக்கீடு 12.3 விழுக்காடு 2021ம் ஆண்டில் இராணுவ செலவீனங்களுக்கான ஒதுக்கீடு 10.56 விழுக்காடு ஆகும்.

2021, 2022 ம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துகொண்டு சென்றிருக்கையில், நடைமுறையில் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றிருக்கையில் பெருந்தொகையான நிதி இராணுவச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாதுக்காப்புச் செலவீனங்களுக்கு 14 விழுக்காடும் இராணுவத்திற்கு 10 விழுக்காட்டிற்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

குறிப்பாக அமைதி நிலவுகிற காலத்தில் இவ்வாறு நடைபெறுகிறது. அமைதி நிலவுகிறது என்று சொல்லும்போது, ஆயுதமோதல்கள் எதுவும் நடைபெறவில்லை. கடந்த காலங்களில் தமிழ் மக்களாகிய நாங்கள் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்திருந்தோம். இப்போது நாங்கள் ஆயுதப்போராட்டம் பற்றிப் பேசுவதில்லை. எங்களுடைய மக்களை ஆயுதங்களைக் கையிலெடுக்குமாறு நாங்கள் கூறுவதில்லை. இவ்வாறிருக்கையில் இலங்கை பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியை இவ்வாறு அதிகரிப்பது நியாயப்படுத்தமுடியாதது.

அடுத்த ஐந்து வருடங்களுக்கு இராணுவத்திற்கான ஒதுக்கீடு வருடத்திற்கு 2 விழுக்காடு என்றளவில் அதிகரிக்கும் என இராணுவ விடயங்களை வெளியிடும் ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி என்ற சஞ்சிகை எதிர்வுகூறியுள்ளது. இவ்விடயத்தை அவையிலிருக்கும் உறுப்பினர்கள், இது போன்ற இக்கட்டான சூழ்நிலையில், சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

நாடுகளின் பாதுகாப்புச் செலவீனங்களை அவற்றின் மொத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது, இலங்கையை விட அதிகமாக செலவிடும் நாடுகளாக அவுஸ்திரேலியா, ஐக்கிய இராட்சியம், இந்தியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் உள்ளன. நாடுகளின் பாதுகாப்புச் செலவீனத்தை அவற்றின் அரசாங்கச் செலவீனத்துடன் ஒப்பிடும்போது இலங்கையை விட அதிகமாகச் செலவிடும் ஒரே ஒரு நாடு இஸ்ரேல். இஸ்ரேலிலுள்ள நிலவரம் இலங்கையிலுள்ள நிலவரத்துடன் வெகுவாக மாறுபட்டது என்பதனை நாம் அறிவோம்.

இலங்கை இவ்வாறு பாதுகாப்புத்துறைக்கு பெருமளவு நிதியைச் செலவிடுவதற்கு காரணம், நாட்டை ஆக்கிரமிப்பதற்கு அல்லது நாட்டில் பிரச்சனைகளை உருவாக்குவதற்காக வெளியிலிருந்து வரும் ஆபத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக அல்ல. மாறாக இலங்கை அரசு அதன் எதிரிகள் உள்நாட்டிலேயே இருப்பதாகக் கருதுகிறது. அது தமிழர்களை எதிரிகளாகக் கருதுகிறது, இப்போது முஸ்லீம்களையும் எதிரிகளாகக் கருதுகிறது. அரசாங்கம் பறைசாற்றுகிறபடி தங்களுக்கு வாக்களித்தவர்கள் என்று கூறுகிற சிங்கள மக்களையும் எதிரிகளாகவே காண்கிறது. இவ்வாறான பார்வையில் பாரிய தவறு இருக்கிறது.

இந்த அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இவ்வாறு எதிர்ப்பு நிலையிலிருந்து அணுகுவதனை விட, தங்களை உரிமையிழந்தவர்களாகக் கருதும் தமிழர்களினதும், முஸ்லீங்களினதும் அச்சத்தை நீக்குவதற்கு முயல்வார்களேயானால் நிச்சயமாக பாதுகாப்புச் செலவீனங்களுக்கு இவ்வாறு பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அவசியம் ஏற்படாது.

இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும்போது இவ்விடயங்களை சிரத்தையுடன் கணக்கில் எடுக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கிறேன். இந்த நாட்டில் வாழுகின்ற அனைவரினதும் நலனிற்காக, குறிப்பாக வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களின் நலனிற்காக ஒடுக்குமுறையாளராகச் செயற்படும் இராணுவக் கட்டமைப்புகள் கலைக்கப்பட வேண்டும்.

ஒடுக்குமுறை என்று சொல்லும்போது பாரிய எண்ணிக்கையில் இராணுவம் அங்கு நிலைகொண்டிருப்பதும் அடங்குகிறது. வடக்கு - கிழக்கில், பதினான்கு மக்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில், அதிலும் வன்னியில் ஐந்து மக்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இது எந்தவகையிலும் ஆரோக்கியமானதல்ல.



தமிழ் மக்கள் மீது பாரதூரமான குற்றச்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில், இக்குற்றச் செயல்கள் இனப்படுகொலை, மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என தமிழ் மக்கள் திரும்பத்திரும்பக் குற்றஞ்சாட்டுகையில், இன்றிருப்பதுபோன்று இராணும் நிலைகொண்டிருப்பது ஆபத்தானது. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்கு எதிராக குற்றங்களை இழைத்தவர்கள் அவர்கள் மத்தியில் வாழ்வது ஏற்புடையதல்ல. ஆகவே காலங்கடந்து விட்டாலும், அரசாங்கம் தனது பாதுகாப்புச் செலவினத்தையிட்டு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

பாதுகாப்பு தனித்து இராணுவத்திடம் மட்டுமல்ல. அவர்களிடம் குடிசார் பாதுகாப்புப் பிரிவு என்றும் ஒன்றும் உள்ளது. அவர்கள் முன்பள்ளி ஆசிரியரகளை பணிக்கு அமைர்த்தியுள்ளனர். ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனமாக 30 ஆயிரம் ரூபாவை வழங்குகின்றனர். வடக்கு கிழக்கில், பாலர்கள் தங்களது கல்வியை ஆரம்பிக்கு போதே இந்த இராணுவமயமாக்கலுக்குள் உள்வாங்கப்படுகின்றனர். முன்பள்ளி கல்விக்கும் இராணுவத்திற்கும் என்ன தொடர்பு? இராணுவம் ஏன் இவ்ற்றில் தலையிட வேண்டும்? வடக்கு - கிழக்கினைப் பொறுத்தவரை இதுதான் இராணுவத்தின் மனோபாவம்.

சாதாரண முன்பள்ளி ஆசிரியர்கள் 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. அவர்களது நியமனம் நிரந்தரமாக்கப்படவில்லை என அவர்கள் போராடுகிறார்கள். இன்று ஆறாயிரம் ரூபா மாத வருமானத்தில் ஒருவர் குடும்பம் நடத்த முடியுமா? ஆறாயிரம் ரூபா ஒரு வாரத்திற்குக்கூட போதாாது. அதே ஆசிரியர்கள் குடிசார் இராணுவப் பிரிவினால் நடத்தப்படும் பாடாசாலைகளுக்குச் சென்று கற்பித்தால் முப்பதாயிரம் ரூபாவிற்குமேல் வழங்கப்படுகிறது.

ஆகவே இங்கு இராணுவத்திற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டமிருப்பது தெளிவாகிறது. இந்த நிகழ்ச்சிதிட்டம் கலைக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கு முன்னர் இதனை மறுசீரமைக்குமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம். இது நடைபெறாவிட்டால், இதனை ஒரு முன்நிபந்தனையாக வைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் வேண்டுகோள் விடுப்போம் என்றார்.



# என் கண்களே சாட்சி
# முட்கம்பி வேலிக்குள்ளே

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)



என்ன சத்தம்! ஆரவாரம்! தெருவில்?

ஆனந்தசாமி பாயை விட்டெழுந்து, முற்றததில் நின்ற வேப்பமரத்தின் கிளையைத் தாழ்த்தி ஒரு குச்சியை முறித்துப் பல் துலக்கியபடி வெளியே சென்றார்.

அறுபதடி ஆகலமான அந்த இரு வழித் தார்ச் சாலையில் சாரி சாரியாக மக்கள், தலையில் கையில், சைக்கிளில் பொதிகளுடன், கால் நடைகளைச் சாய்த்துக் கொண்டு வயதான வர்கள். தடிக் கட்டுகள், கிடுகுக் கட்டுகள், கூரைத் தகடுகள், தகரங்கள், கோழிக் கூடுகள் இத்தியாதி லான்ட் மாஸ்ராரில், லொறிகளில், ரக்ரர்களில், மாட்டு வண்டிகளில்.

பாண்டியன்குளம், முழங்காவில், துணுக்காய் தொட்டு மல்லாவி, அக்கராயன், வவுனிக் குளம், மாங்குளம் வரை வாழ்ந்திருந்த மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு கிளி நொச்சிக்கு வந்து கொட்டில், குடிசை அமைத்து எதிர்பாராத சிரமங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்திருந்த நாட்கள்.

மூன்றாவது மாதம் முடியு முன்பே மற்றொரு இடப் பெயர்வு. எங்கே போகின்றார்கள்?

"எங்கே தம்பி பயணம்?"

கைக்கிள் கரியரிலும் ஹான்டிலிலும் பொதிகள் கட்டி உருட்டிக்கொண்டு சென்ற ஒரு இளை ஞனிடம் கேட்டார் ஆனந்தசாமி.

"விசுவமடுப் பக்கம்..."

அதைக் கேட்டதும் அவருக்கு கந்தசாமியின் ஞாபகம் வந்தது. போன மாசம் அவரிடம் வந்து போன கந்தசாமி "வாருங்கோ மாமா எங்க ளோட வந்திருங்கோ" என்று கேட்டானே, மறுத்து விட்டேன்! என்றெண்ணி மனம் நொந்தவராய் திரும்பி நடந்தார்.

"என்றாலும் தம்பித்துரையைக் கேட்டுத்தான் தீர்மானிக்க வேணும்" என்றெண்ணினார்.

தம்பித்துரை எண்பதகளில் வந்து காணி எடுத்து வீடு கட்டி விவசாயம் செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்.

"2005ல் தென்மராட்சி ஆக்கிரமிக்கப்பட்ட வேளை கிளிநொச்சிக்கு வந்த எங்களை ஆதரித்து தனது காணியில் ஒரு புறம் நெடி துயர்ந்து கிளை பரப்பி நாவல் மரத்தில் கீழ் கொட்டில் கட்டி இரக்க உதவியவரல்லவா அவர். இனியும் என்னைக் கைவிட மாட்டார்" என்ற நம்பிக்கை ஆனந்தசாமிக்கு.

"எங்க தாத்தா போயிற்று வாறீங்க?..."

தம்பித்துரையின் பிள்ளைகள் எதிர் நின்று கேட்டனர்.

"தெருவுக்குப் போயிட்டு வாறன் குஞ்சுகளா. மக்களெல்லாம் கொட்டில் குடிசைகளைப் புடுங்கிக் கட்டி ஏற்றிக் கொண்டு விசுவமடுப் பக்கம் போகிறார்களாம் ராசா..."

"ஓம் தாத்தா, நாங்களும் புதுக்குடியிருப்புக்குப் போறம்... அப்பா உங்களைக் கூட்டிக் கொண்ட வரச் சொன்னார்."

"அப்படியா?"

குழந்தைகளுடன் விரைந்து நடந்த ஆனந்த சாமியைப் பார்த்து தம்பித்துரை சொன்னர்.

"அய்யா சாமான்களைக் கட்டி வையுங்கோ, புதுக்குடியிருப்புக்குப் போகலாம்..."

"ஓம் தம்பி போவம்..."

தன்னுடைய கொட்டிலுக்குப் போன ஆனந்த சாமி, தோசை சுட்டுக்கொண்டிருந்த வள்ளிக் கொடியை விழித்து சொன்னார் "புறப்படு" புதுக்குடியிருப்புக்குப் போகலாம்...

"சாமான்களை எடுத்து வெளியில் வை பொதி கட்ட... நான் குளிச்சிட்டு வாறன்..."

"ஓ... எனக்கு தம்பியும் அந்தப் புள்ளயும் சொன்னவை... நீங்கள் குளிச்சிட்டு வந்து சாப்பிடுங்கோ..."

கிணற்றடிக்குப் போன ஆனந்தசாமி " இனி இந்தக் கிணத்துத் தண்ணி போலக் கிடைக் குமோ?" என முணுமுணுத்தவாறு வழமை யிலும் பார்க்க அதிக வாளி நீரை மொண்டு தலையில் ஊற்றினார்.

"போதும் வாங்கோ அய்யா ரக்ரர் வந்திருக்கு" என்ற தம்பித்துரையின் குரல் எழுந்தது.

"இதோ வந்திட்டேன் தம்பி" என்றவர் நாலு முழ வேட்டியைக் கட்டிக் கொண்டு, தலையை நனைந்த துவாய்த் துண்டைப்பிழிந்து உலர்த் தியபடி வந்தார்.

வள்ளிக்கொடி கொடுத்த தோசையை நின்ற நிலையில் சாப்பிட்டார். தம்பித்துரையின் வீட்டு வாசலில் நின்ற ரக்ரரில் அவர் வீட்டு தளபாடங் கள் ஏற்றப்படுவதை அவதானித்தார்.

"வள்ளி நான் சாப்பிட்டாயிற்று நீயும் சாப்பிட்டுக் கொண்டு குசினி சாமான்களை எடுத்து வெளி யில் வை என்றவாறு துணி காயப்போடக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து மூன்று துண்டுகளாக அறுத்தார் சமையல் பாத்திரங் களை ஒரு உரச்சாக்கில் அடுக்கிக் கட்டினார் "வள்ளி உன்னுடைய உடுப்புகளோட என்னு டைய வேட்டி சட்டை சாறம் துவாய் எடுத்து வை... சரியா?"

"ஓமோம்... நீங்கள் சொல்லுமுன்னேயே வைச்சாயிற்று... தலையனை இரண்டையும் பாயில் வைத்து சுருட்டிக் கட்டுங்கோ. வழியில் அவிழ்ந்து கொட்டுப்படாமல்..."

"வள்ளி சொன்னால் மறுப்பேது... அப்படியே ஆகட்டும்,.." மூன்று பொதிகளும் ரக்ரரில் ஏற்றியாயிற்று.

வள்ளி கையில் ஒரு பொலித்தீன் பை வைத்தி ருந்தாள். பெறுமதி மிக்க பொருள் அதில் இருக்கலாம்.

"புறப்படுவமா? என்று கேட்டுக் கொண்டே ஓட்டுனர் ரக்ரர் அருகே வந்து நின்றார்.

தம்பித்துரை சொன்னார் "அய்யா மேலே ஏறி இருப்பம். தலயில துவாயை கட்டுங்கோ... நல்ல வெய்யில்ல போகப் போறம்... பக்கத்து வீட்டார் ஒரு வேனில் போகினம்... அவை யோட எங்கட வீட்டாரும் வள்ளி அம்மாவும் வருவினம் சரி... இந்தாங்க இந்தப் பையில் பாண், பணிஸ் பழம் இருக்கு... தண்ணீர்ப் போத்தலும் இரண்டு இருக்கு... ஏறுங்கோ கவனமாய்..." ஆனந்தசாமி ஏறிக்கொள்ள உதவிய தம்பித்துரை ஒரு சிறு சூட்கேசை கையில் எடுத்துக் கொண்டு ஏறி அவர் அருகில் அமர்ந்தார்.

ரக்ரர் அந்த மணல் ஒழுங்கையில் சில நிமிடம் நகர்ந்து தெருவில் மிதந்து ஊர்ந்து கொண்டி ருந்தது. விலகி ஓட இடைவெளி இல்லை. சமாந்தரமாக இரு வாகனங்களும் ஊடு பார்த்து சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் நடை பயணிகளும். அப்படியிருந்தும் தருணம் பார்த்து ஊடறுத்து நுழைந்து ரக்ரரை முந்திப் போய்க்கொண்டிருந்தது வேன்.

அதனைச் சுட்டிக்காட்டி "அய்யா அந்த வேனில் தான் போகினம்" என்றார் தம்பித்துரை.

"அச்சா... பார் என்னை முந்திக்கொண்டு போறா வள்ளிக்கொடி, எப்படியும் எங்களை எதிர்பார்த்து ஓரிடத்தில் நிறகத்தானே வேணும்..." என்ற ஆனந்தசாமி புதுக்குடியி ருப்பில் உங்களுக்குத் தெரிந்தவை அறிஞ் சவை இருக்கினமா?... எப்பிடியான இடம்?" என விசாரித்தார்.

"ஓம் அய்யா, தெரிஞ்சவர் இருக்கிறார். இரண்டு ஏக்கர் காணி நிறைய தென்னை மா வாழை விசாலமான வீடு கிணறு... எல்லா வச தியும்... அமைதியான ஊர்..."

"என்ன தம்பி நாங்கள் இன்னும் பரந்தன் சந்திக்கு வரேல்லைப் போல?"

"கிழக்காலை திரும்பியா போறது?"...

"ஓம் அய்யா... அங்கால றோட்டும் கொஞ்சம் பழுது குண்டும் குழியும்... மெல்ல மெல்லத் தான் போகவேணும்"

"இப்ப என்ன நேரம் தம்பி?"

"இப்ப... பதினொரு மணி... தண்ணீர்ப் போத்தலை ஒருக்கால் எடுக்கிறீங்களா... தொண்டை வரளுது..."

ஆனந்தசாமி கையிலிருந்த பையைத் திறந் தார். தம்பித்துரை போத்தலை எடுத்து ஒரு வாய் குடித்தார். ஒரு பணிசும் வாழைப்பழமும் எடுத்தார். "அய்யா நீங்களும் சாப்பிடுங்கோ, றைவருக்கும்..." என்றவர் ஒரு பணிஸ்ம் பழமும் எடுத்துக்கொண்டு எழுந்து நின்று முன்னால் சரிந்து "இந்தாரும் சாப்பிடும்" என்று ஓட்டுனரிடம் கொடுத்தார். அவற்றை வாங்கி அருகில் தொங்கிய துணிப்பையில் வைத்து விட்டு வலப்பக்கத்தில் தறையப்பட்டிருந்த வளையத்திலிருந்து தண்ணீர்ப் போத்தலை வலது கையால் எடுத்துக் குடித்துவிட்டு வைத் தார் பிறகு இடது கையால் பணிஸ் பழம் எடுத் துச் சாப்பிட்டார். காலைச் சாப்பாடு ஆயிற்று.

"அய்யா இந்த வெயிலுக்கு இதமாயிருக்கும் ஒரு பாட்டுப் பாடுங்கோ..."

"மரநிழலிலிருந்து பாடிய என்னை வெயிலில் இருந்து பாடக் கேட்கிறீரா... ம்ம்ம்..."

"காக்கை குருவியெல்லாம் பாடும். அங்கே
கிளியும் அணிலும் விளையாடும்...
வேப்பமர உச்சியிலிருந்து
குயில் ஒன்று கூவுது
கூடி விளையாடப் போலும்
இணை ஒன்றை அழைக்குது
கிளுவைமர தளையில் ஒரு
பச்சைப் பாம்பு ஊருது
அழகான ஓணான் ஒன்று
அதைப் பார்த்து பதுங்குது

பாலைமரம் பூத்திருக்கு
நாவல்மரம் காய்த்திருக்கு
ஆலமரம் பழுத்திருக்கு
பறவைகளே பறவைகளே
கொண்டாட்டம் தான் உங்களுக்கு..."

"தம்பி, திரும்பிப் பாரும் பார லொறி ஒண்டு சரிந்து கிடக்குது. என்ன பாவம் செய் ததுகளோ... இனி எப்படித்தான் அதை தூக்கி நிறுத்தப் போகுதுகளோ?..."

தம்பித்துரை எழுந்து நின்று பார்த்துவிட்டுச் சொன்னார் "நிறைய சாமான்கள் ஏற்றியி ருக்கு, இனி எல்லாம் வெளியில் இறக்கித்தான் லொறியை எடுக்க வேண்டியிருக்கும்..."

"நாங்களும் கவனமாய் போக வேணும் அவசரப்படாமல் ஓட்டுனருக்கு கேட்கும்படி பலத்து சொன்னார் ஆனந்தசாமி. ரக்ரர் நடுத்தெருவில் போய்க்கொண்டிருந்தது.

# என் கண்களே சாட்சி
# முட்கம்பி வேலிக்குள்ளே

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)

தருமபுரம். எல்லைப் பெயர்க் கல் தெரிந்தது.

"அடுத்தது விசுவமடுபுரம்" என்றார் தம்பித்துரை.

"விசுவமடு பழைய குடியேற்றமல்லவா?..."

"ஓம் அய்யா... இப்ப நல்ல முன்னேற்றம்..."

"அடுத்து?..."

"வள்ளிபுனம்... அதுக்கப்பால் கைவேலி... அடுத்து வரும் புதுக்குடியிருப்பு... அங்கே கோம்பாவில் என்ற சிற்றூர்... மணல்தரை, தென்னை அதிகம்... மழைக்காலமெண்டால் கால் புதையும் வாய்க்கால்கள்... செழிப்பான மண்..."

ஆனந்தசாமியின் முகத்தில் மலர்ச்சி. "நல்ல ஊருக்குத்தான் வந்திருக்கிறோம்..."

"இன்னும் வரேல்ல இனி வாறது கைவேலி..."

"ஆனால் தம்பி ஒன்று கேட்கிறேன்..."

"சொல்லுங்கோ..."

"இங்கேயும் அவன்கள் வரமாட்டான்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

மண் தொட்டு நின்ற மாமரக் கிளைகளை தலை தொடாதவரை வெட்டி அகற்றிவிட்டு பதிவான இரண்டு கொட்டில்களை அமைத்தார்கள். ஒன்றினுள்ளே மீதி தடி தகரம் தட்டுமுட்டுச் சாமான்களை வைத்தார்கள். ஆனந்தசாமி விரும்பியபடி அவருக்கு ஒரு பக்கம் அறைபோல் வெற்றிடம் மணல் தரையில் பாயை விரித்துப் படுத்திருப்பார். அதே அறையில் வள்ளிக்கொடி சமையல் செய்வாள். இருவரும் சாப்பிட்டபின் பானை சட்டியை ஒரு மூலையில் வைத்து பாயினால் மூடிவிடுவாள். மழை ஆரம்பித்தது.



ஒரு நாள் இரவு சுழன்றடித்த காற்று மழை நீரை வாசல் மறைப்பு இல்லாத ஆனந்தசாமியின் "அறை" யினுள் வீசிற்று. அவருடைய படுக்கை நனைந்தது. அவர் எழுந்து உடனேயே தடுப்புக்கட்டினார். ஒரு பாய் எடுத்து இரு தலைப்பிலும் தடிகள் வைத்துக் கட்டி வாசலில் தொங்கவிட்டார். மணல் ஒதுக்கி உள்ளே வெள்ளம் புகாமல் வரம்பு செய்தார். மழை கொட்டும் வேளையில் தான் அணிலுக்ும் பறவைகளுக்கும் கொண்டாட்டம். அவை கொறித்துண்ணும் முற்றிய மாங்காய்கள் நெட்டு டைந்து டொம் டொம் என தகரக் கூரையில் விழும். பெரிய மாங்காய்கள் விழும் சத்தம் அவரைத் துயிலெழுப்பும். "என்ன தம்பி செல் விழுகிறதோ?" என்று முணுமுணுத்தபடி போர்வையை இறுகப் பற்றியபடி மறுபக்கம் திரும்பிப் படுப்பார். கனகாம்பிகைக் குளத்தில் இருந்த போது கூரைமீது நாவல் பழமும் பறவைகள் சுவைத்துத் துப்பும் கொட்டைகளும் தொப் தொப்பென்று விழும். அது கிடுகுக் கூரை என்பதால் நித்திரைக் குழப்பம் பெரிதாகத் தோன்றவில்லை அவருக்கு. ஆனால், எலி சிலவேளை அவர்மீது விழுந்து ஓடும். திடுக்கிட்டு எழுந்திருப்பார்.

ஆனால், இங்கே...

அவர்கள் இடம் பெயர்ந்து வந்து சில நாளே சென்ற நிலையில், செல் எனும் எறிகணைகள் அருகில் அல்லவா விழுந்து வெடிக்கின்றன. நித்திரை இல்லை. புரண்டு புரண்டு படுப்பார். கிழக்கு வெளிக்கும் நேரம் பாயைச் சுருட்டி வைத்துவிட்டு வெளியே வருவார். பல் துலக்கிக் கொண்டு தம்பித்துரை வீட்டாருடன் படுத்துறங்கும் வள்ளியைக் கூப்பிடுவார், தேனீர் குடிக்க.

ஆனந்தசாமிக்கு இரத்த அழுத்த நோய் இருந்தது. அதற்கு காலை மாலை ஒரு குறிசை வீதம் உட்கொண்டு வந்தார். நீரிழிவு நோயும் எட்டிப் பார்த்தது. கட்டுப்பாட்டில் இருக்க டொக்ரரின் ஆலோசனைப்படி இனிப்புப் பண்டங்கள் உண்பதை கூடியவரை தவிர்த்து வந்தார். ஆனால், இன்றோ நித்திரைக் குழப்பம், தலைச் சுற்றல் உடல் வெப்பம்.

தனது நோயின் நிலை பற்றி மனைவியுடன் கதைத்து "ஒருக்கால் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு போய்வரலாம்" என்று தீர்மானித்தார். தம்பித்துரையிடம் சொல்லிக் கொண்டு இருவரும் காலையில் ஒரு முச்சக்கர வண்டியில் புறப்பட்டனர்.

பகல் பதினொரு மணிக்குத் திரும்பியவர்களிடம், " எப்பிடியிருக்கு பிறசர்? நல்ல மருந்து கொடுத்தார்களா?" என்று கேட்ட தம்பித்துரைக்குப் பதிலளித்தார் ஆனந்தசாமி. "பிறசர் கொஞ்சம் கூடித்தான் இருக்கு. வழமையாக விழுங்கும் நிபடிபின் குளிகையும் கொஞ்சம் விற்றமின் குளிகையும் கொடுத்தார்கள். வேற நல்ல மருந்து இங்கே வாறதில்லை என்றும் அமைதியான இடத்தில் ஓய்வெடுத்தால் நல்லது என்றும் டொக்ரர் சொன்னார்."

"அய்யா நீங்கள் வவுனியா போய் இருங்கோ, அதுக்கு வழியிருக்கு இரண்டு நாள் பொறுத்திருந்து புதுக்குடியிருப்பு ஆசுபத்திரிக்குப் போங்கோ... வருத்தம் கூடியிருக்கு என்றும் அமைதியான சூழல் இங்கே இல்லை என்றும் வவுனியா ஆசுபத்திரிக்குப் போய் சிகிச்சை பெற அனுமதிக்கடிதம் தருவிங்களா என்றும் டொக்ரரிடம் கேளுங்கோ. அவர் சிபார்சுக் கடிதம் தருவார். உதவிக்கு மனைவியைக் கூட்டிப் போகவும் ஒரு பத்திரம் எழுதித் தருவார். அம்புலன்ஸ் வாகனத்தில் உங்களைக் கூட்டிப் போய் வவுனியா ஆசுப்பத்திரியில சேர்ப்பார்கள், அங்கே போனபிறகு மகனுடன் போனில கதைக்கலாம். எங்களுக்கும் அப்படி ஒரு எண்ணம் இருக்கு. நிலைமை மோசமானால் நாங்ளும் வவுனியாவுக்கு வருவோம். அரசாங்க பஸ்கள் ஓடினால்"

"டொக்ரர் அப்படி ஒரு சிபார்சுக் கடிதம் கட்டாயம் கொடுப்பாரா தம்பி?"

"தருவார், நல்ல மருந்துகள் இல்லாத நிலையில் கடும் வருத்தக்காரரை வவுனியா ஆசுப்பத்திரிக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்."

ஆனந்தசாமியின் முயற்சி பலனளித்தது.

அந்த வார கடைசி நாளன்று பயணம். காலை ஏழுரை மனிக்கு ஆனந்தசாமி தம்பதி புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு வந்து இறங்கினர். வழி அனுப்ப தம்பித்துஜர வந்திருந்தார். பயணம் செய்ய நூறுக்கு மேற்பட்ட நோயாளிகளும் உதவியாளர்களும் வந்திருந்தனர்.

நான்கு பேருந்துகள் சிவப்பு சிலுவைச் சின்னத்துடன் நின்றன. அனுமதி ஆவணம். அடையாள அட்டை பரிசீலிக்கப் பட்டன. பொதிகள் ஏற்றப்பட்டன. பயணிகள் ஏறி அமர்ந்தனர். புறப்பட் பத்து மணியாயிற்று. அம்புலன்ஸ் பேருந்துகள் புதுக்குடியிருப்பு சந்தியில் திரும்பி ஒட்டிசுட்டான் வீதியில் வேகமெடுத்தன. அப்பகுதியிலிருந்து வந்து புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் எறிகணைகள் விழுந்து வெடிப்பதும், நோளாயர் வண்டிகள் போவதற்காக அன்று மட்டும் தற்காலிகமாக மோதல் நிறத்தப்பட்டிருப்பதும் மறந்து போயின.

விடுதலை உணர்வு மட்டுமே நெஞ்சை நிறைந்தது.

இரண்டு மணிநேரம் ஓடிய அம்புலன்ஸ் வண்டிகள் எதிரே தெரிந்த சீருடையினரின் தடை நிலையத்தில் போய் நின்றன. சீருடையினர் வந்த நோயாளரில் ஆண்கள் எத்தனை பெண்கள் எத்தனை சிறுவர் எத்தனை என்று எண்ணிச் சொல்லும்படி கேட்டனர்.

முன் இருக்கையிலிருந்த ஒருவர் எழுந்து திரும்பி தலைகளை எண்ணி ஒப்புவித்தார். பின்னர் பயணிகளை இறங்கும்படி பணித்தனர். எல்லாரும் இறங்கி தெருவோரம் நின்றனர். அவர்களை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டிகள் திரும்பிப் போய்க்கொண்டிருந்தன. காலை உணவு கொள்ளாத பலரது முகங்கள் வாடியிருந்தன, "தேனீர் குடிக்க இங்கே ஒரு கடை கூட இல்லையே" என்று முணுமுணுத்தனர்.

"இனி என்ன நடக்கப் போகிறது? வவுனியா ஆசுபத்திரிக்கு எங்களைக் கூட்டிப் போவது யார்? அம்புலன்ஸ் ஏன் திரும்பிப் போயிற்று?" விடை தெரியாக் கேள்விகளாக மனங்கள் தவித்தன.

"அந்தா சி.ரி.பி. பஸ்கள் வருகின்றன. அதிலே தான் எங்களைக் கூட்டிப் போய் ஆசுப்பத்திரியில் இறக்குவார்கள்" என்றார் ஒருவர்.

அந்த சிவப்பு நிற பேருந்துகள் வந்து எங்கள் அருகில் நின்றன. அவற்றில் ஓட்டுனர் தவிர இரண்டு சீருடையினரும் இருந்தனர், அவர்கள் இறங்கி "அய்யா ஏறுங்க, அம்மா ஏறுங்க தமிழ் வார்த்தைகள், சீருடையினரின் "அன்பான" வார்த்தைகள். அவர்கள் கையில் ஆயுதமில்லை.

பேருந்துகள் நான்கு ஒன்றின்பின் ஒன்றாக ஓடிக்கொண்டிருந்தன. இரண்டு மணிநேரம் வரை விரைந்தோடிய பேருந்துகளின் வேகம் குறைந்தது. ஒரே சீரான ஆமை வேகம்.

இருள் படர்கிறது.

வவுனியா நகரம் தெரிகிறதா? அகன்ற சாலைகள், உயர்ந்த கட்டடங்கள் தெரிகிறதா? சிலர் யன்னல் கண்ணாடியை தள்ளிவிட்டு பார்வையை வெளியே செலுத்தி ஆராய்கின்றனர்.

ஓட்டுனரின் இடம்புறம் உயரத்தில் இருந்த தொலைக்காட்சிக் கருவியில் தமிழத் திரரைப் படப்பாடல் காட்சிகள் ஓடிக் கொண்டிருந்தன. பயணிகளின் நோயையும் பசியையும் அவை ஓரளவு தணித்தன.

பிரகாசமான மின் விளக்குகள் பல ஒளிர்ந்த ஒரு கட்டடத்தின் எதிரே போய் நின்றன பேருந்துகள்.

"இதுதான் வவுனியா ஆசுப்பத்திரியா?" என ஒருவர் கேட்டதும் எவரும் பதில் சொல்லாதிருந்ததும்...

ஆண், பெண் சீருடையினர் கையுறையுடன் நான்கு பேர் பேருந்துக்குள் ஏறியதும் ஒவ்வொரு நோயாளியிடமும் நோய் விபரம் கேட்டதும்.

பலமான காயப்பட்டு, விரல் முதல் தோள் பட்டைவரை கட்டுப்போட்டிருந்த ஒருவரை கனநேரம் விசாரித்ததும் அவர் இறக்கப்பட்டு மற்றொரு வண்டியில் ஏற்றப்பட்டதும் ஏனைய நோயாளிரின் சிகிச்சை பற்றி அவர்கள் எதுவும் சொல்லாமல் இறங்கிப்போனதும் பார்த்து எல்லாரும் வியப்பில் ஆழ்ந்திருக்க, பேருந்துகள் முன்னால் தெரிந்த மற்றொரு கட்டடத்தின் எதிரே போய் நின்றன.

"எல்லாரும் பொதிகளையும் எடுத்துக் கொண்டு இறங்கி வரிசையாய் இருங்கோ"

சீருடை தரித்த பெண் ஒருத்தி தமிழில் சொன்னாள். அடுத்து ஒரு நீளமான கிடுகுக் கொட்டகையினுள் ஒவ்வொருவராக பொதிகளுடன் போகப் பணித்தாள்.

ஆண்கள் ஒரு புறம், பெண்கள் மறுபுறம். தனி அறையில், கையுறையுடன் நின்ற ஒருவன் பயணியின் தோளிலிருந்து கால் வரை உருவிப் பார்த்தான் (எதிர் அறையில் பெண் சீருடை...) சூட்கேஸ்கள், பொதிகள், பெட்டிகள், கைப்பைகள், ஆள் அடையாள அட்டை எல்லாம் சோதனையிடப்பட்டன. நகைகள் என்ன வகை, எத்தனை, பணம் காசு எவ்வளவு இருக்கு? எண்ணிச் சொல்ல எழுதிக் கொண்டனர்.

"சரி எல்லாரும் போய் பஸ்ல ஏறுங்க"

சீருடைப் பெண்ணின் பணிப்பு,

பேருந்துகள் புறப்பட்டன.

"இனி ஆசுப்பத்திரிக்குத்தான் போகும்" அருகில் இருக்கும் வள்ளியிடம் ஆனந்தசாமி சொல்லிக் கொண்டார். மின் வெளிச்சம் பல ஒளிர்ந்த ஒரு கட்டடத்தின் எதிரே பேருந்துகள் வேகம் தணித்தன. "அதுதான் ஆசுப்பத்திரி" என எண்ணினார் ஆனந்தசாமி ஆனால் பேருந்துகள் ஒரு சுருள் முட்கம்பி வேலியருகில் போய் நின்றன.

"என்ன இதுவா ஆசுப்பத்திரி?"

ஒவ்வொருவர் மனதிலும் அதிர்ச்சி,

"இறங்கி எல்லாரும் உள்ளே போங்க..."

சீருடையினரின் கட்டளை.

ஒரு நீள சதுர மண்டபம்.

அங்கே சுவரோம் அமர்த்தப்பட்டனர்.

காலை, மதியம், மாலை இரவு வயிற்றுக்கு எதுவும் ஈயப்படவில்லை வெளியில் அருகில் இருந்த பைப்பிலிருந்து தண்ணீர் மட்டும் குடிக்கக் கிடைத்தது.

பாய்கள் வந்தன. படுத்துக் கொண்டனர். சிலர் உறங்கிப் போயினர். பலருக்குத் தூக்கம் வரவில்லை. ஆனந்தசாமிக்கு பாட்டு வந்தது.

"எல்லா உலகமும் ஆனாய் நீயே..." என்று தொடங்கினார்.

"நல்ல தேவாரம் பாடுங்கோ" என்றார் அருகில் படுத்திருந்தவர்.

என்ன நினைத்தாரோ?

"வேண்டாம் இங்கே மௌனம் காப்பது நல்லது" எனச் சொல்லிக் கொண்டு கண்களை மூடித் தூங்க முயன்றார்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது.

தேனீர் வந்தது.

பின்னர் சீருடையினர் வந்தனர். பெயர் விபரம் கேட்டு எழுதினர்.

ஒரு தமிழன் வந்து "எல்லாரும் என்னுடன் வாருங்கோ" என்றார். நடை பவனி வரிசையாய் நகர்ந்தது.

அது ஒரு தமிழ் மாகவித்தியாலயம். அதன் வகுப்பறைகளை மேவி வளர்ந்திருந்த மரங்கள் நிழலும் குளிர்மையும் வழங்கின. ஒவ்வொரு வகுப்பறையிலும் பதினைந்து பேர் வரை பெட்டி பொதிகளை சுவரோரம் வைத்துக் கொண்டு பாயை வரித்து அமர்ந்தனர்.

"தொட்டிலில் தண்ணீர் இருக்கு சாப்பாடு வரும்" என்றார் கூட்டி வந்தவர். போய் விட்டார்.

எட்டரை மணிக்கு பாணும் பொலித்தீன் பையில் சாம்பாரும் வந்தன.

"சமையலறைக்குப் போய் தேனீர் ஒரு பாத்திரத்தில் வாங்கி வந்து எல்லாரும் குடிக்கலாம்" என ஒருவர் வந்து சொன்னார், ஒருவர் போய் அங்கிருந்த பிளாஸ்ரிக் வாளியில் தேனீர் வாங்கி வந்தார். கூடவே நான்கு பிளாஸ்ரிக் பேணியும் கொண்டு வந்தார்.

ஆயிற்று? பாணும் தேனீரும் காலை உணவாக.

# என் கண்களே சாட்சி
# முட்கம்பி வேலிக்குள்ளே

எஸ். பி. கிருஷ்ணன் (பேராதெனியன்)



ஆனந்தசாமிக்கு அந்த நெருக்கத்தில் இருக்கப் பிடிக்கவில்லை அமை தேடி வந்த மனிதர் அவர்.

எழுந்து வெளியே போனார். பாரிய மரம் ஒன்றைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்தார் மேலே கிளைகளிலிருந்து குருவிகள் எச்சமிட்டன.

அவர் மனதில் கனகாம்பிகைக் குளமும் கிடுகுக் கொட்டிலும் நாவல் மரமும் பறவைகளும் நிழலாடின. புதுக்குடியிருப்பு மாமரமும் தகரக் கூரையும் டொம் டொம் சத்தமும் நினைவில் வந்தன.

அவருக்குப் பாட்டு வந்தது. மேலே பார்த்துக் கொண்டு பாடினார்.

"குருவிகளே! குருவிகளே!
எங்கே வந்தீங்க
ஏதிலியாய் போறேனென்றா
இங்கே வந்தீங்க.
புதுக்குடியூருக்கு ஒருக்கால்
போய் வருவீங்களா? அங்கே
தம்பியிடம் என் நிலையை
சொல்லி வருவீங்களா?

மருத்துவ மனைக்கு வந்தேன்
நோய் சுகமாக்க, ஆனா
முட்கம்பி வேலிக்குள்ளே
மடக்கி வைச்சாங்க...
குருவிகளே! குருவிகளே!..."

ஆனந்தசாமி அன்று மதியத்திலிருந்து உணவு மறுத்தார். பகலும் இரவும் அந்த மேடையிலேயே இருந்தார். படுத்திருந்தார்.

எல்லாம் "செக் பண்ணி மருத்துவம் செய்விக்க... என்னை வவுனியா ஆசுப்பத்திரிக்கு அனுப்பட்டும்..."

"இங்கே டொக்டர் வாறபடியால் உங்களை அங்கே அனுப்ப மாட்டினம்... சீரியஸ் எண்டால் தான் தனுப்புவினம்..."

வெளியில்செல்ல அனுமதிப்பது பற்றி யோசிக்கிறோம். அவரை சாப்பிடச் சொல்லுங்கள்... கெதியில் விடுவோம்..."

நால்வரும் திரும்பிச் சென்று அதிகாரி சொன்னதை ஆனந்தசாமியிடம் சொன்னார்கள்.

மதிக்கப்படுவார்கள். வவுனியாவில் இருக்கும் சொந்தக்காரர் அல்லது தெரிந்தவர்கள் அல்லது நண்பர்கள் வந்து பொறுப்பேற்று அழைத்துப் போகமுடியும் தகுதியுடையோர் அலுவலகத்துக்கு வந்து பெயர் பதிவு செய்து கொள்ளவும்"

அச்செய்தி ஆனந்தசாமியின் காதில் வழி



"நோய்க்கு மருந்தெடுக்க வந்த என்னை இங்கே அடைத்து வைத்திருக்கிறாயே! என்னை வெளியில் விடும்வரை நான் உணவு உட்கொள்ளமாட்டேன்!" ஆவேசமாக சத்தமிடுவார். இது கேட்டு அந்த அறையில் இருந்தவர்கள் வந்து "அய்யா சாப்பாடு வந்திருக்கு வந்து சாப்பிடுங்கோ" என்று அன்பாக அழைப்பார்கள்.

"அய்யா நீங்கள் முன்பக்கம் போய் மருந்து எடுக்கலாம் டொக்டர் இரண்டு பேர் வந்து வருத்தக்காரரைச் சோதித்து குளிசைகள் கொடுக்கிறார்கள்" என்று ஒருவர் வந்து சொன்னார்.

எனக்கு குளிசை சரிவராது... நான் வந்தது

ஆனந்தசாமி உணவு மறுத்து நான்கு நாள்களாயின. அவருடைய உடல் வலுவிழந்தது குரல் தழுதழுத்தது நிலைமை ஆபத்தானால் என்ன செய்வது? என்றெண்ணிய ஒருவர் மற்றவர்களுடன் கலந்து பேசி முகாம் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கத் தீர்மானித்தனர்.

அவ்வாறே, நான்கு பேர் அதிகாரியைப் பார்த்து "சேர் ஆனந்தசாமி என்பவர் உண்ணாவிரம் இருக்கிறார் நான்கு நாளாயிற்று. தன்னை வெளியில் விட்டால் தான் சாப்பிடுவேன் என்கிறார்" என்று கவலையுடன் சொன்னார்கள்.

"அவருக்கு எத்தனை வயசு?"

"அறுபத்தைந்திருக்கும்..."

"ஓ... அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களை

அந்த நேரம் வள்ளிக்கொடியும் அமுதபடி அருகில் இருந்தாள்.

"ஓ... சாப்பிடுங்கோ விட்டிடுவார்களாம்" என்று கண்ணீர் கொட்டினாள். ஆனந்தசாமி மறுத்தார்.

"என்ன செய்யலாம்?" எனப் பலரும் கவலைப்பட்டனர்.

அந்த நாளும் கடந்தது.

ஐந்தாம் நாள் விடிந்தது.

ஆனந்தசாமி உணர்வற்றுப் படுத்திருந்தார்.

பகல் ஒன்பது மணியளவில் ஒலிபெருக்கியில் ஒரு தகவல் வந்தது "அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் வெளியில் போயிருக்க அனு

வில்லை அருகில் இருந்த இளைஞர்கள் அதனை அவருக்கு உரத்துச் சொல்லிப் புரிய வைக்க முயன்றனர்.

இரண்டு பேர் ஓடிப் போய் முட்கம்பி வேலிக்கு மேலாய். இளநீர்க் குரும்பை வியாபாரியைக் கூப்பிட்டு இரண்டு இளநீர் வாங்கிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

"அய்யா இளநீர் குடியுங்கோ"

பருக்கிய இளநீர் கடைவாயால் வழிந்தது.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே
-பாரதிதாசன்-


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


ar
21
ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS SALES REPRESENTATIVE
C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai
Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4


Call For Free Advice
On Buying or Selling a Home
வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்.
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
3-1286 Kennedy Rd Toronto ON. M1P 2L5
Tel: 416.270.1111 Fax: 416.270.7000
ARUL AMIRTHALINGAM
Sales Representative
Dir: 647.450.2479
Email: arultoprealtor5@gmail.com
www.remaxace.com


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

# அன்னைபூபதியும் காணாமல் ஆக்கப்பட்டோருக்காகப் போராடும் அம்மாக்களும்

மார்ச் 30, 2022

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரதமர் மகிந்தவை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அன்னையர்கள் எதிர்த்திருக்கிறார்கள். அவர்களை போலீசார் முரட்டுத்தன மாகக் கையாண்டிருக்கிறார்கள். நவீன தமிழ் அரசியலில் அம்முதிய அம்மாக்களுக்கு முன்னோடியாகக் கருத்தத்தக்கவர் அன்னை பூபதியாகும்.

முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதே காலப்பகுதியில் அதாவது மார்ச் மாதம் 19ஆம் திகதி 1988ஆம் ஆண்டு அன்னை பூபதி சாகும் வரையிலுமான உண்ணாவிரதத்தை தொடங்கினார். ஈழப்போர் வரலாற்றில் அவருக்கென்று தனித் துவமான ஓர் இடம் உண்டு. அவர் ஒரு ஆயுதப் போராளி இல்லை. எனினும் தன் உயிரைத் துறக்கத் தயாராகி சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்த முதல் ஈழத்தமிழ் பெண் என்ற முக்கியத்துவம் அவருக்கு உண்டு. அவர் ஓர் அரசியற் செயற்பாட்டாளர். போராட்டத்தின் பாதிப்பை தெரிந்தவர். இரண்டு ஆண் பிள்ளைகளைப் பறி கொடுத்தவர். அவர் அங்கம் வகித்த மட்டு அம்பாறை அன்னையர் முன்னணி இந்திய அமைதி காக்கும் படையிடம் நீதிகேட்டு ஆரம்பித்த சாகும் வரை யிலுமான உண்ணாவிரதப் போராட்டம் இடையில் குழப்பப் பட்டது. எனினும் தானாக முன்வந்து அன்னை பூபதி போராட ்டத்தை உயிர் துறக்கும் வரை தொடர்ந்தார்.

திலீபனின் உண்ணாவிரதத்தோடு ஒப்பிடுகையில் அவருடையது வித்தியாசமானது. திலீபன் ஒரு ஆயுதப் போராளி. எனவே சாகத் தயாரான ஒரு வாழ்க்கைமுறையை கொண்டி ருந்தவர். அவருடைய போராட்ட முறை அகிம்சை


பூபதி அம்மா

அல்ல. ஆனால் அகிம்சைப் போராட்டத்தில் அவர் உயிரை தியாகம் செய்தார்.

அன்னை பூபதி ஒரு ஆயுதப் போராளி அல்ல. ஆனால் ஒரு குடும்பப் பெண் அரசியலில் எப்படிப்பட்ட துணிச்சலான முடிவை எடுக்கலாம் என்பதற்கு நவீன அரசியலில் அவர் ஒரு நிகரற்ற முன்னுதாரணம். திலீபன் உணவருந்தாமல் நீர் அருந்தாமல் 12 நாட்கள் போராடினார். பூபதி உணவை நீக்கி, நீரை மட்டும் அருந்தி முப்பத்தொரு நாட்கள் போராடினார்.

தமிழ் அரசியலில் ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய மிதவாத அரசியலிலும் மிகச்சில பெண்களே மேலெழுந்தார்கள். ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியலிலும் கடந்த 12 ஆண்டுகளாக மிகச் சில பெண்கள்தான் மேடைகளில் தோன்று கிறார்கள். போராட்டங்களில் முன்னே நிற்கிறார்கள். இடைப் பட்ட ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் அனேக பெண் ஆளு மைகள் மேலெழுந்தன. போராளிகளாக, தளபதிகளாக, பொறுப் பாளர்களாக, பேச்சாளர்களாக, பேச்சுவார்த்தைக் குழுவில் முக்கியஸ்தர்களாக, அனேக பெண்கள் மேலெழுந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் இயக்கங்களில் போராளிகளாக இருந்தவர்கள்.


தமிழீழ ஈகச்சுடர் அன்னை பூபதி நினைவிடம்

பூபதிக்கு பின் கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் அரசியலில் அதிக மாக போராடுவது அன்னையர்கள்தான். போராளிகளைத் தவிர இன்னொரு தொகுதி பெண் ஆளுமைகள் அமைதியாக போராட்டத்தை அடைகாத்தார்கள். அவர்கள் தான் அடைக்கலம் தந்த வீடுகளின் இல்லத்தரசிகள் ஆவர். இந்த அடைக்கலம் தந்த வீடுகள் இல்லை என்றால் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டமே வளர்ந்திருக்காது. இவ்வாறு அடைக்கலம் தந்த வீடுகளில் தலைவிகளாக இருந்தவர்களை வரலாற்றுக் குறிப்புகளிலும் கண்டுபிடிப்பது கடினம். ரஞ்சகுமார் போன்றோரின் தாய் குறித்த சிறுகதை களில் ஓரளவுக்கு இந்த அன்னையர்களின் தியாகமும் விரத மும் இலக்கியமாகின. தமது பிள்ளைகளுக்காக ஒருவேளை உணவை அல்லது இருவேளை உணவைத் துறந்து உண் ணாவிரதம் இருந்த பெண்களை நாம் பார்த்திருக்கிறோம். காணாமல் போன தனது பிள்ளை திரும்பி வரும் என்ற நம்பிக்கையோடு இன்றுவரையிலும் பாண் மட்டும் சாப்பிடு கின்ற தாய்மாரை நாங்கள் பார்க்கிறோம். காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காக கடந்த 12 ஆண்டுகளாக வீதியோரங் களில் போராடிக் கொண்டிருக்கும் அன்னையரை நாங்கள் பார்க்கிறோம்.

ஈழத்தமிழர்களின் அரசியல் எனப்படுவது வெளித்தெரியாத அன்னை யர்களின் விரதம் உண்ணாநோன்பு அர்ப்பணிப்பு போன்றவற்றினால் கட்டி எழுப்பப்பட்ட ஒன்றுதான். இவ் வாறான ஒரு போராட்ட பாரம்பரியத்தின் பின்னணியில்தான் அன்னை பூபதியும் சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடங் கினார். அவரும் அடைக்கலம் தந்த ஒரு வீட்டின் அன்னை தான்.

ஒரு போராளி அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருப் பது வேறு. ஒரு குடும்பப்பெண் அவ்வாறு சாகும்வரை உண்ணா விரதம் இருப்பது வேறு. இரண்டுக்குமிடையில் இருக்கக்கூடிய அர்ப்பணிப்பு திடசித்தம் போன்றவற்றை வித்தியாசப்படுத்தி பார்க்க வேண்டும். இந்த இடத்தில்தான் அன்னை பூபதியின் முக்கியத்துவம் அதிகமாகிறது. தவிர அவர் கிழக்கு மையத்தில் இருந்து வருகிறார். தனது பசியினாலும் தாக்கத்தினாலும் வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர்.

தமிழ் மக்களின் நவீன அரசியலில் அவருக்கு முன்னும் பின்னும் அவரைப்போல சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்த ஒரு பெண்ணை இன்று வரையிலும் காட்ட முடியாது.





கேப்பாபுலவிலும் இரணைதீவிலும் தமது காணிகளை மீட்க முன்சென்றது அம்மாக்கள் தான். கடந்த 12 ஆண்டுகளாக நடந்துவரும் பெரும்பாலான எல்லா போராட்டங்களும், காணாமல் ஆக்கப் பட்ட தமது உறவுகளைத் தேடிப்போராடும் தமிழ் அம்மாக்களின் கண்ணீரால் நனைந்திருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததும் அம்மாக்கள்தான். அவமதிக்கப்பட்டதும் தாக்கப்பட்டதும் அம்மாக்கள்தான். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக வீதியோரங்களில் போராடிக்கொண்டிருக்கும் அம்மாக்கள் தான். அவர்களில் கிட்டத்தட்ட 80க்கும் அதிகமானவர்கள் இந்த உலகம் நீதியற்றது என்ற ஏமாற்றத்தோடு இறந்து போய்விட்டார்கள். மிஞ்சி இருப்பவர்கள் விடாது தொடர்ந்து போராடுகிறார்கள். கடந்த 12 ஆண்டு கால தமிழர் அரசியலில் அவர்கள் தான் ரெடிமேட் போராளிகள். கட்சிகளுக்கும் அவர்கள்தான் முன்னரங்க போராளிகள்.ஐ.என்.ஜியோக்களுக்கும் அவர்கள் தான் முன்னரங்க போராளிகள். சில தூதரகங்களுக்கும் அவர்கள்தான் முன்னரங்கப் போராளிகள். புலம்பெயர்ந்த தமிழ் தரப்புகளில் இருப்பவர்கள் தாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கும் பொழுது அவர்களுடைய பார்வையில் முதலில்படுவது மேற்படி முதிய அம்மாக்கள்தான். எல்லாப் போராட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவரின் ஒளிப்படங்களோடும் கண்ணீரோடும் முன்னே வருவது அவர்கள்தான். எல்லாப் போராட்டங்களிலும் தரையில் விழுந்து அழுது ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பது அவர்கள்தான். கட்சிகளாலும் நிதி வழங்கும் புலம்பெயர் தரப்புக்களினாலும் பிரிக்கப்பட்டு இருந்தாலும் கூட, தொடர்ச்சியாக விடாது போராடிக்கொண்டிருப்பது மேற்படி அம்மாக்கள்தான்.

கடந்த 12 ஆண்டுகளாக ஒரு நாள் எழுக தமிழ்கள், ஒருநாள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பிரகடனங்கள் இவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் அம்மாக்கள்தான். புதுடில்லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக போராடிய விவசாயிகளை போன்று அவர்கள் தொடர்ச்சியாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு தீர்வு கிடைத்து விட்டது. ஆனால் இந்த அம்மாக்களுக்கு கிடைத்திருப்பது ஒரு லட்சம் ரூபாய். அதாவது காணாமல் ஆக்கப்பட்ட உயிர் ஒன்றின் பெறுமதி ஒரு லட்சம் ரூபா.

அண்மையில் ஊடகவியலாளரும் ஒரு இலத்திரனியல் ஊடகத்தின் உரிமையாளருமான நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார், இந்த அம்மாக்களின் போராட்டத்தை ஏன் மக்கள் மயப்படுத்த முடியவில்லை? என்று. நான் அவருக்குச் சொன்னேன் இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது அவர்களுடைய போராட்டம் பாதிக்கப்பட்டவர்களின் மையத்திலிருந்து உருவெடுத்தது. பாதிக்கப்பட்டவர்கள் எல்லாருமே அரசியல் தெளிவோடு தலைமை தாங்கலாம் என்றில்லை. இப்பொழுது சில தலைவிகள் அங்கே வந்துவிட்டார்கள். ஆனாலும் இந்த அம்மாக்களை ஒன்றுதிரட்டி ஒரு தொடரான போராட்டத்தை முன்னெடுக்கத்தக்க குடிமக்கள் சமூகங்களோ அல்லது கட்சிகளோ அமைப்புக்களோ தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் இந்த அம்மாக்களின் போராட்டத்தை பின்னிருந்து ஊக்குவிக்கும் புலம்பெயர் தரப்புக்களும் கட்சிகளும் தமது நிதி உதவிகளால் இவர்களை பிரித்து வைத்திருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இந்த அம்மாக்களின் போராட்டம் மட்டுமல்ல, காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான போராட்டம், போன்ற எல்லா போராட்டங்களும் ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட வேண்டும். ஒரு தெளிவான வழி வரைபடத்தோடு ஒரு மையத்திலிருந்து முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு ஒரு மையமாக செய்யப்படும் மக்கள் அமைப்பும் இல்லை, தெளிவான வழிவரை படமும் இல்லை. இதுதான் பிரச்சினை.

இவ்வாறான தோல்விகரமான ஓர் அரசியல் சூழலில், அன்னை பூபதியை நினைவு கூர்வது என்பது ஒரு சடங்கு போலாகி விட்டது. ஆனால் மெய்யான பொருளில் பூபதியை நினைவு கூர்வது என்பது, கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கும் அம்மாக்களின் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதுதான். ஒரு மையத்தில் ஒருங்கிணைப்பதுதான். தமிழ்க் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் சிந்திப்பார்களா?

நன்றி: நிலாந்தன்

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral
Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral
Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost a today's prices
• Convenient time payment
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community







# பூபதியே! நீ புதைக்கப்படவில்லை



ஆயிரத்து தொழாயிரத்து
எண்பத் தெட்டு
பங்குனித் திங்கள்
தென் தமிழீழத்து
மட்டுமா நகரத்து
மாமாங்க வீதியில்
ஆரம்பமான தொரு
சாத்வீக யுத்தம்,
அதை எண்ணுகையில்
கொதிக்கிறது
எங்களது ரத்தம்.

காந்தியம் போதித்த
காந்தியின் பேரன்
ராஜீவ் காந்தியிடம்
இரண்டு அம்சத்து
கோரிக்கை முன் வைத்து
அகிம்சை வழியினிலே
உயிரைத் துச்சமாக்கி
பிச்சை இரந்து நின்றாள்
மதுரையில் நீதிகேட்ட
பெண்மை
கண்ணகிபோல்.

அரூந்தும்
நீர் வெறுத்து
உண்ணும்
உணவொறுத்து
மாமாங்க சந்நிதியிலே
மயக்க முற்றிருந்தாள்
அன்னை பூபதியாள்.
நாட்கள் வாரமாகின
வாரங்கள் மாதமானது
அமைதிப் புறாவுக்கு
அறிவுக் கண்
திறக்கவில்லை.
அன்னையின் நிலைகண்டு
அணுவளவும்
இரங்கவில்லை.

நர வேட்டை ஆட வந்த
அரக்கர் கூட்டத்தின்
அநீதியைக் கண்டித்து
அறவழிப் போர் புரிந்த
அகிம்சைப் புறாவொன்று,
அமைதியாய் சரிந்தது
சித்திரை மாதத்து
பத்தொன்பதாம் நாளன்று
அந்தோ...!
தென் தமிழீழம் மட்டுமா?
என்
ஈழ தேசத்தின்
தேகமே
கண்ணீரால் கரைந்தது
வெள்ளைப் புறாவென்று
தன்னை
தம்பட்டம் அடித்த
ஒரு கருநிறக் காகத்தின்
முகத்திரை கிழிந்தது.

ஓ...
இந்திய ஜவான்களே!
நீங்கள் நாட்டுக்கு
அமைதி காக்க வந்த
அமைதிப் படைகளா?
இல்லை
ஈழ தேசத்தில்
வாழும் உயிர் குடித்து
ஏப்பம் விட வந்த
எம தூதர்கள்
இல்லையென்றால்
அன்னை பூபதியாள்
மரணத்தில் தன்னை
அரவணைக்கும் வேளை
மார் தட்டி
கை கொட்டி
உளம் களித்திருப்பீர்களா;

அன்னை பூமிக்காய்
தன்னையே அர்ப்பணித்த
அன்னை பூபதியே!
புதைக்கப்பட்டது
உன்
பூதவுடல் மட்டுமா?
இல்லை காந்தியம் பேசும்
காந்தி தேசத்தின்
சாத்வீக
தத்துவமும் தான்.

சாத்வீகப் போரை
உலகுக்கு காட்டிய
அண்ணல் காந்தியே!
உன் அகிம்சைத் தத்துவம்
உன் பேரனால்
சிலுவையில் அறையப்பட்டு
ஆண்டுகள்
முப்பத்து நான்காகிப் போனதை
இன்னும் அறியவில்லையா?
அல்லையென்றால்
தியாகி திலீபனிடமும்
தாய் பூபதியிடமும்
கேட்டுத் தெரிந்து கொள்!

அகிம்சையின்
பிறப்பிடமாம்
பாரத நாட்டிற்கே
பாடம் புகட்டிய
பூபதியே!
சாத்வீகப் போரில்
தான் படைத்த சாதனையை
உன்னால்
பாரதம் இழந்தது.
அதனால்
உன் பெயர்
கின்னஸ் புத்தகத்தில்
எழுதப்படா விட்டாலும்
எங்கள் மனங்களில்
அழுத்தப் பதிந்து விட்டது!
அன்னை பூபதியே!

தேன் பாய்ந்து ஓடி
மீன் பாடும் நாட்டில்
பாடும்
மீன்கள் எல்லாம்
இன்றும்,
என் பெயரையல்லாவா
உச்சரிக்கின்றன
மீன் இனங்களே
உன்னை அர்ச்சிக்கும்போது
நாங்களென்ன
மரக் கட்டைகளா?

ஆம்
புத்த பகவானின்
புதல்வர்களாம்
அவர்களுக்கெல்லாம்
அகிம்சையின்
அர்த்தம் விளங்குமா?
அதனால் தான்;
ஆயுதம் ஏந்திய
யுத்தத்தில்
தோயும் பகைவனின்
ரத்தத்தில்
தாயக விடுதலை
காணவே
பாயும் புலியெனப்
புறப்பட்டோம்
பூபதித் தாயின்
கனவை நனவாக்க!

-மட்டுநகர் ஜதார்த்தனன் - 1992 –

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், 74 வருட ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படல் தமிழ் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்டு சமஸ்ட்டி [கூட்டாட்சி] முறைமை – இதுவே இன்றைய நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக மீண்டெழ ஒரே வழி!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

ஏப்பிரல் 06, 2022



இலங்கையின் நெருக்கடி நிலை தொடர்பில் பாராளு மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய உரை.

இன்று சிறீலங்கா அரசு எதிர் கொண்டுள்ள நெருக்கடி குறித்து விவாதிப்பதற்காக இங்கு கூடியிருக்கின்றோம். இன்றிருக்கிற நெருக்கடியானது, ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் (புழளநசஅநவெ) மீதுள்ள நெருக்கடிபோன்று தோன்றினாலும், உண்மையில் சிறீலங்கா அரசே (ளுவயவந) நெருக் கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

ஏனெனில், எதிர்வரும் நாட்களில் இந்த அரசாங்கம் எதிர் கொள்ளும் நிர்ப்பந்தங்களால், பதவியிலிருந்து விலகுவதாக முடிவெடுத்தாலும் கூட, புதிதாக ஆட்சிக்கு வருபவரகள், அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், துண்டம் துண்டமாக சிதைந்து போயிருக்கும் இந்த சிறீலங்கா அரசின் சிதிலங்களை பொறுக்குவதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருக்கும். ஆகவேதான், இது வெறுமனே அரசாங்கத்தின் நெருக்கடி என விவரிக்காது, இதனை சிறீலங்கா அரசகட்டமைப்பின் நெருக்கடி என்று விவரிக் கின்றேன்.

இன்று நாடாளுமன்றத்துக்கு வெளியில், சாதாரண கிராமங்களிலும், பெரும் நகரங்களிலும், பெரும்பாலும் தெற்கிலும், ஏன் வடக்கு கிழக்கிலும் கூட மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஆட்சி செய்யும் இந்த அரசாங்கம் அதன் கடமையினை ஆற்ற முடியாது தோல்வியடைந்திருப்பதனாலேயே இந்த நிலைமை உருவாகியிருக்கிறது.

ஆட்சி செய்வதற்கான திறமையில்லாதமையாலேயே இந்த அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது.

அரசாங்கம் தவறுகளைச் செய்கிறபோது, அதுவும் அத் தவறுகள் வெளிப்படையாகத் தெரிகிறபோது, என்ன விதமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதனை எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால் இந்த அரசாங்கம் அவற்றை கவனத்தில் எடுப்பதேயில்லை எனவும் முடிவெடுத்திருந்தது. இச்சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதனாலும், ஜனாதிபதி 1.3 மில்லியன் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றிபெற்றமையினாலும் தாங்கள் எதனையும் செய்யலாம், அவற்றைச் செய்து விட்டு தப்பிவிடலாம் என அவர்கள் எண்ணினார்கள். இந்த வாக்குப் பலத்தை வைத்து எதனையும் செய்ய முடியும் என அவர்கள் எண்ணியதால், சிறீலங்கா அரச கட்டமைப்பானது வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது.

இத்தோல்வியை மக்கள் பட்டவர்த்தனமாக விளங்கிக் கொண்டுள்ளார்கள். ஆதலால்தான் கோத்தபாய ராஜபக்சவுக்கு பெருமளவு வாக்குகளை வழங்கி, வெற்றிபெறச் செய்த மக்களே, இந்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொடுத்த அவர்களே, இன்று வேறு வழிவகை தெரியாமல் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளார்கள். அதன் மூலம் இந்த அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள். அதனை இந்த அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனநாயக முறையில், ஒவ்வொரு நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஆணை வழங்குகிறார்கள். இலங்கையில் இது ஐந்து வருடங்கள். குறித்த காலத்திற்கு முன்னர் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெறுவதாக அறிவிக்குமுகமாக, தெருவுக்கு இறங்கிப் போராடுவது தான் அவர்களுக்கிருக்கின்ற ஒரே வழிமுறை.

ஆகவே பொறுப்புக்கூறல் எந்த வடிவத்திலாவது நிலைநாட்டப்பட வேண்டுமாயின், ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இந்த அராசங்கம் பதவி விலக வேண்டும்.

இவை கேள்விக்கிடமில்லாதவை.

மக்களின் போராட்டங்களை தணித்து, எதிர்காலத்தில் இவ்வாறு போராட்டங்கள் நடைபெறுவதனைத் தவிர்க்க வேண்டுமாயின், இந்த அரசாங்கம் இச்செய்தியை உடனடியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பதவி விலக வேண்டியது மிகவும் அவசியமானது.

அதுபோன்று இந்த அரசாங்கமும் விலக வேண்டியது அவசியமானது.

ஆனால் ஒரு இடைவெளியிருக்கிறது. துரதிஸ்டவசமாக நாங்கள் இதில் போதாமையை உணர்கிறோம். இப்போதுள்ள நெருக்கடிக்கு அரசியல்யாப்பு என்று நாங்கள் அறிகிற விதிகளில் இதற்குத் தீர்வு எதுவுமில்லை.

இந்த அவையில் இருக்கும் விடயங்கள், அவைக்கு வெளியிலுள்ள நிலவரத்தை பிரதிபலிக்கவில்லை. இந்த அவையில் உள்ள விடயங்களை வெளியிலுள்ளவை பிரதிபலிக்கவில்லை. ஏனெனில் இரண்டு வருடகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த அவை (அரசாங்கம்) காலத்திற்கு பிந்தியதாக மாறிவிட்டது. இந்த அவையிலுள்ளவர்களுக்கு வாக்களித்த மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள்.

ஜனாதிபதி பதவி விலகுவாரேயாயின், இந்தப் பாராளுமன்றத்திலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியதுபோன்று, இந்த அவை காலவதியாகிவிட்டது. நாளைக்குத் தேர்தல் நடைபெறுமாயின், இன்றைக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட இந்த அரசாங்கம் வெற்றிபெறுமென கனவுகூடக் காணமுடியாது.

ஆகவே, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பதவி விலகினால் அவருக்குப் பதிலாக இந்த அவையிலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கவேண்டும் என யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஆகவே சில இடைக்கால நகர்வுகளைச் செய்ய வேண்டும். முதலில், இன்றைக்கு ஆட்சி செய்ய முடியாத நிலைக்கு

இட்டுச் சென்றுள்ள, மக்களால் சுட்டிக்காட்டப்படும் உடனடிப்பிரச்சினைகளுக்கு ஏதாவது வகையில் பரிகாரம் காணவேண்டும். ஜனாதிபதி தான் உடனடியாகப் பதவி விலகுவார் என்பதனை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அறிவிப்பினை மேற்காள்ளவேண்டும்.

இரண்டாவதாக, இந்த அரசாங்கமும் பதவி விலகுவதாக உறுதியளிக்க வேண்டும்.

மூன்றாவதாக, அடுத்த மூன்று மாதத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இம்மூன்று உத்தரவாதங்களும் வழங்கப்படுமாயின், அடுத்த மூன்று மாதங்களில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவது என்பதனை நாங்கள் அமர்ந்திருந்து சிந்திக்கலாம்.

உண்மை என்னவென்றால், இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள்கூட விரும்பவில்லை. அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான எண்ணிக்கையான உறுப்பினர்கள் அவர்களிடமிருப்பதாக அவர்கள் உணரவில்லை. அதுபோன்று உங்களிடமிருந்து நாற்பது வரையிலான உறுப்பினர்கள் விலகியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அவர்கள் எழுந்து நின்று தாங்கள் சுயாதீனமாக இயங்கப்போவதாக அறிவித்திருந்தனர். ஆனால் அவர்கள் கடந்த காலங்களில் எல்லாவிடயங்களிலும் ஜனாதிபதியையும், இந்த அரசாங்கத்தையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தவர்கள். இன்றைக்கு மக்கள் வீதிக்கிறங்கிப் போராடுகிற நிலையில், தங்களை சுயாதீனமானவர்களாகக் காட்டுவதற்கு அவர்கள் முனைகிறார்கள். இதனைக் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை.

ஆகவே எதிர்கட்சியிலிருக்கும் சரியாகச் சிந்திக்கக் கூடிய யாரும் இவர்களுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முடியும் என நம்ப மாட்டார்கள்.

இறுதியாக, இன்றைக்கு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பொதுமக்களிடம் இந்தவேண்டுகோளை விடுக்கிறேன்.

இந்த நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக, பொருண்மியப பிரச்சனைகளுக்காக மட்டுமன்றி, இந்த அரசாங்கமும், அரச கட்டமைப்பும் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பவற்றுக்கு எதிராகவும் போராடுகிறார்கள்.

முதற்தடவையாக, இராணுவ பலமும், இந்த அரச கட்டமைப்பின் பெரும் பலமும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இது எவ்வளவு ஆபத்தானது என்பதனையும், அவர்கள் குரலற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

ஆட்சிக் கட்டமைப்பில் உள்ள அரசியல்வாதிகள் தங்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள், இவ்வரசியல்வாதிகள் உண்மைக்குப் புறம்பான விடயங்களை தெரிவித்து வருகிறார்கள். இது கடந்த ஒரு சில வருடங்களாக அல்ல. பல தசாப்தங்களாக நடைபெறுகிறது எனவே, மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதனை உணர்ந்து கொள்வார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக 74 வருடங்களாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள், அவர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் நாட்டின் சொத்துக்கள் கொள்ளையடிகக்கப்பட்டுள்ன என்பதனை உணர்நதே அவர்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள்.

இது இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொன்னான சந்தர்ப்பம். இலங்கை நாடானாது இந்தத்தீவிலுள்ள எல்லா மக்கள் குழுமைங்களையும் பிரதிதித்துப்படுத்துவதான் ஒரு புதிய ஆரம்பத்திற்கான நல்ல சந்தர்ப்பமிது. சிங்களம் பேசும் தேசமாக, தமிழ் பேசும் தேசமாக இலங்கையில் மாறுப்பட்ட அடையாளங்களைக் கொண்டாடுவதற்கான நல்ல சந்தர்ப்பம். இந்த உண்மை நிலமையை கவனத்திலெடுக்கத் தவறக்கூடாது. வரலாற்றில் முதற்தடைவையாக இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்மக்கள் ஆதரவளிக்கத் தயாராகவிருக்கிறார்கள். அதற்காக நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை அகற்றுவதற்கு மட்டுமல்ல, கூட்டாட்சி முறையில் தமிழ்த் தேசம், சிங்களத் தேசமும் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்ட்டி முறைமையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் இணங்க வேண்டும். ஒற்றையாட்சி முறைமை என்பது காலத்திற்குப்பிந்தியது. நீங்கள் அதனை 74 ஆண்டுகளாக வைத்திருக்கிறீர்கள்.

விடுதலைப்புலிகளை நீங்கள் அழித்தற்கு பின்னரும், கடந்த பன்னிரண்டு வருடங்களாக, அதே அரசகட்டமைப்பைத் தொடர்கிறீர்கள். கடவுளின்பேரால் கேட்கிறேன் விழித்தெழுங்கள். உங்கள் தலைவர் கூட்டாட்சி முறைமை என்பது பிரிவினைவாதம் என்று பொய் கூறி உங்களை ஏமாற்றியே வந்துள்ளார்கள்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தை மேம்படுத்துவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிக்கு வரவேண்டியுள்ளது. இது போன்று நாட்டின் இதர பகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டாமா? நாட்டின் எல்லாவிடங்களும் மேப்படுத்தப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சி முறைமை என்ற கருதுகோளை நீங்கள் கைவிட வேண்டும். தமிழ்த் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் அங்கீகரிக்கும் கூட்டாட்சி முறைமைதான் இதற்கு ஒரே வழி என்பதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதுவே நாட்டை முன்னேற்ற ஒரே வழி.



# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



| | |
|---|---|
| **Amman Women & Child Development Center** | |
| Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai | 4 67 490 4955 |
| **Hermans Girls Home** | |
| Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai | 97 76 058 5344 |
| **Jesus Lives Girls Home** | |
| Main St., Kalmuanai - Amparai | 01 94 67 492 1161 |
| **Methodist Girls Home** | |
| Wesly School Rd, Kalmuanai - Amparai | 94 67 222 9182 |
| **RKM Sharatha Girls Home** | |
| Girls Vidyalaya Rd, Karaithivu Amparai | 05 94 67 222 3600 |
| **Seephe Divi Child Delelopment Centre** | |
| Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai | 94 67 226 1144 |
| **Sri Indasara Child Development Centre** | |
| DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai | 94 27 562 2919 |
| **St. Maryís Boys Home** | |
| Yard Rd, Kalmunai - Amparai | 01 94 71 354 5782 |
| **Swami Vipuilanantha Boys Children Development Centre** | |
| Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai | 94 67 227 7514 |
| **Canaan Harvest Childrenís Home** | |
| No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla | 94 77 229 2022 |

| | |
|---|---|
| **Up Country Children Home** | |
| 19/6, Badulupitiya Rd - Badulla | 94 55 222 3335 |
| **Arutpani Girls Home** | |
| Beach Rd, Navakkuda - Batticaloa | 94 77 6849 |
| **Assisi Boys Home** | |
| Main Rd, Kurukulmadam - Batticaloa | 94 65 225 0313 |
| **Benthel Boys Children Home** | |
| Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa | 94 77 632 8577 |
| **Benthel Girlís Children Home** | |
| Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa | 94 77 632 8577 |
| **Bethel Girls Children Home** | |
| Vipulanada Rd, Valichenai - Batticaloa | 94 77 515 3078 |
| **Eravur Children Care Home** | |
| Meerakerny Rd, Eravur - Batticaloa | 94 77 996 6345 |
| **Good Shepherd Children Home** | |
| Post Office Rd, Valaichenai - Batticaloa | 94 65 225 7400 |
| **Hari Boys Home** | |
| New Kalmuani Rd - Batticaloa | 94 65 222 3653 |
| **Jeevananthan Girls Home** | |
| Main Rd, Pudukuduirippu - Batticaloa | 94 65 365 0438 |
| **Kattankudy Boys Home** | |
| Kattankudy 01 - Batticaloa | 94 65 224 5308 |
| **London Sivan Kovil Girls Home** | |
| Main Rd, Settipalayam - Batticaloa | 94 65 205 6336 |
| **Managayarkarasi Girls Home** | |
| Maruthadi Rd - Batticaloa | 94 65 205 7310 |
| **Manikkavasagar Boys Home** | |
| Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa | 94 77 191 3037 |
| **Methodist Girls Home** | |
| Bar Rd, Kotamunai - Batticaloa | 94 65 222 5402 |
| **Miyani Boys Home** | |
| Miyani nagar, Thannamunai - Batticaloa | 94 77 459 0298 |
| **Miyani Girls Home** | |
| Miyani nagar, Thannamunai - Batticaloa | 94 77 792 6410 |
| **Pariyowan Boys Home** | |
| Trinco Rd, Santhurukondan - Batticaloa | 94 05 222 2524 |
| **Ramakrishana Boys Home** | |
| New Kalmunai Rd, Kalladi - Batticaloa | 94 65 222 2752 |
| **Ramakrirushana Girls Home** | |
| New Kalmunai Rd, Kalladi - Batticaloa | 94 65 222 2752 |
| **Sakthi Girls Home** | |
| Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa | 94 65 225 0745 |
| **Shakthi Girls Home** | |
| Arasadi Thervu, Kokaticholai - Batticaloa | 94 65 364 2290 |
| **Shanthi Bawan Girls Home** | |
| Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa | 94 65 222 2524 |
| **Spaks Girls Home** | |
| Main Rd, Periya Kallaru - Batticaloa | 94 67 222 1875 |
| **Thilahawathiyar Girls.Children Home** | |
| Main St., Kathiraveli, Vaharai - Batticaloa | 94 77 629 8461 |
| **Thilahawathiyar Girls Home** | |
| Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa | 94 65 225 1166 |
| **Thiruniyanasampathar Gurukulam** | |
| Main Rd, Kaluthavalai - Batticaloa | 94 65 225 0277 |
| **Trust Village Womens Development Center** | |
| Savukady Rd, Mayilampavelhi - Batticaloa | 94 76 789 7573 |
| **Vidhyajothi Boys Home** | |
| Central Rd - Batticaloa | 94 77 481 6576 |
| **Vipulanantha Children Home** | |

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# கொந்தளிக்கும் சிங்கள மக்கள். தமிழ்மக்களின் நிலைப்பாடு என்ன?

ஏப்பிரல் 09, 2022

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் எல்லா இனங்களையும் பாதிக்கின்றன. எனவே அரசுக்கு எதிரான போராட்டத்தில் சிங்களவர் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இன மக்களும் ஒன்று சேரவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எந்த அரசியல் இலக்கை முன்வைத்து அவ்வாறு ஒன்று சேர்ந்து போராடுவது என்பதில் தமிழ் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.




சிங்கள மக்கள் போராடுவது ஒரு ஆட்சி மாற்றத்திற்காக. ஆட்சியை மாற்றினால் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கும்? 2015 இல் நடந்ததுதான் திரும்பவும் நடக்கும். ஏனென்றால் ஆட்சி மாற்றம் எனப்படுவது, இலங்கைத் தீவை பொறுத்தவரையிலும் அரசாங்கத்தைத்தான் மாற்றும். மாறாக அரசுக் கட்டமைப்பை மாற்றாது. தமிழ் மக்கள் கேட்பது அரசுக் கட்டமைப்பை மாற்ற வேண்டுமென்று. ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு சமஸ்டி கட்டமைப்பைத்தான் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் ஆட்சி மாற்றத்துக்கு உரியவை அல்ல. அவை அரசுக் கட்டமைப்பில் மாற்றத்தை கேட்பவை.

ஏற்கனவே 2015இல் ஒரு ஆட்சி மாற்றத்தால் ஏமாற்றப்பட்டவர்கள் தமிழ்மக்கள். அந்த ஆட்சிமாற்றத்தின் எதிர்மறை விளைவுதான் மூன்றிலிரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையை நோக்கி ராஜபக்சக்கள் உழைக்கக் காரணம். தமிழ் மக்கள் மீண்டுமொரு தடவை ஆட்சி மாற்றத்தின் அப்பாவிப் பங்காளிகளாக மாறி ஏமாற்றம் அடைய முடியாது. எனவே சிங்களமக்கள் இப்பொழுது தென்னிலங்கையில் நடத்தும் போராட்டங்கள் தொடர்பில் தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் நடக்கும் போராட்டங்கள் ஒரு பகுதி தன்னியல்பானவை. இன்னொரு பகுதி எதிர்க்கட்சிகளால் ஒழுங்கமைக்கப்படுவன. தென்னிலங்கையில் உள்ள நகர்ப்புற நடுத்தர வர்க்கம் வீதியில் இறங்கியிருக்கிறது. ஏனென்றால் மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை, அத்தியாவசிய பொருட்கள் இல்லை. மின்சாரம் இல்லையென்றால் விசிறி இல்லை, குளிரூட்டி இல்லை. காலமோ கோடை. அடுக்குமாடிக் குடியிருப்பில் எப்படியிருப்பது? கிராமத்தில் கல்லை வைத்து விறகில் சமைக்கலாம். ஆனால் அடுக்குமாடியில் என்ன செய்வது? பிரச்சினை நடுத்தர வர்க்கத்தை தாக்கிவிட்டது. அவர்கள் தெருவில் இறங்கினார்கள். கோட்டா வீட்டுக்கு போ என்ற கோஷத்தை உருவாக்கினார்கள். அந்த கோஷத்துக்கு உயிர் கொடுத்தார்கள். ஜனாதிபதியின் மாளிகையை முற்றுகையிட்டார்கள்.

சிங்கள மக்கள் முன்வைக்கும் கோஷங்களில் பெரும்பாலானவை ஆளும் அரசாங்கத்துக்கு எதிரானவைதான். சிங்களபவுத்த அரசுக் கட்டமைப்புக் எதிரானவை அல்ல என்பதனை தமிழ்மக்கள் கவனிக்கவேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்களில் மிகச்சிலரைத்தவிர பெரும்பாலானவர்கள் ஆட்சிமாற்றத்தைத்தான் கேட்கிறார்கள். மிகச்சிலர்தான் தமிழ்மக்களுக்கு நீதி வேண்டும், போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் பெரும்பான்மைக்குள் சிறுபான்மையினர். அவர்களால் பெரும்பான்மை அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆனால் தமிழ்மக்களின் உண்மையான நண்பர்கள் அவர்கள்தான். அவர்களை எப்பொழுதும் தமிழ் மக்கள் மதித்து நடக்க வேண்டும்.

அதேசமயம் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை பொறுத்தவரை தமிழ்மக்கள் தமது கோரிக்கைகளில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு, இனப்படுகொலைக்கு நீதி போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால் தமிழ்மக்கள் அவர்களோடு இணைந்து போராடலாம். 12 ஆண்டுகளுக்கு முன் யுத்த வெற்றியை பால்சோறு பொங்கி கொண்டாடிய ஒரு மக்கள் இப்பொழுது அதே யுத்த வெற்றி நாயகரை கீழ்தரமான வார்த்தைகளால் நிந்தித்து வீட்டுக்குப் போ என்று கேட்கிறார்கள். இது தமிழ் மக்களுக்கு பழி வாங்கியவருக்கு உண்டாகும் திருப்தியை கொடுக்கலாம். ஆனால் பிரச்சினை அதைவிட ஆழமானது.

கோட்டாபய ஒரு கருவிதான். மஹிந்தவும் ஒரு கருவிதான். சிங்கள பௌத்த பெருந் தேசியவாத அரசின் கருவிகளே அவர்கள். இன ஒடுக்குமுறையை அவர்கள் உச்சத்துக்குக் கொண்டு போனார்கள் என்று வேண்டுமானால் கூறலாம். இன ஒடுக்குமுறையானது மகிந்தவுக்கும் முன்னரும் இருந்தது. தமிழ்மக்கள் போராட வேண்டியது இன ஒடுக்குமுறைக்கு எதிராகத்தான். இனஒடுக்குமுறையை நிறுவனமயப்படுத்தி வைத்திருக்கும் அரசுக் கட்டமைப்பு எதிராகத்தான். ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான போராட்டம் என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான பெரும் போராட்டத்தின் ஒரு பகுதிதான். அதுவே முழுப் போராட்டம் ஆக முடியாது. ஒரு குடும்பத்தை மட்டும் எதிராக பார்த்து அந்தக் குடும்பத்தை அகற்றினால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்புவது ஆட்சி மாற்றத்தில் தான் முடியும். இதுதான் 2015 ஆம் ஆண்டு நடந்தது.

எனவே தமிழ் மக்கள் இப்பொழுது மிகத் தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும். ஒரு குடும்ப ஆட்சிக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டம் முற்போக்கானதே. அதே சமயம் சிங்கள மக்களோடு இணைந்து போராட வேண்டும் என்றால் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளில் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். கோட்டாவை ஆட்சியில் இருந்து அகற்றத் துடிக்கும் எந்த ஒரு எதிர்க்கட்சியும் சமஸ்டியை ஏற்றுக்கொள்ளவில்லை. 13ஆவது திருத்தத்தை தாண்டிப் போகத் தயாராகவும் இல்லை. இப்படிப்பட்ட எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை கேட்கவும் முடியாது, ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்கவும் முடியாது. ஏனென்றால் எனது கடந்த வாரத்துக்கு முதல் வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, தேசிய அரசாங்கம் என்பது சிங்கள பௌத்த தேசிய அரசாங்கமாக அமையுமாக இருந்தால் அதில் தமிழ்மக்கள் இணைவதில் எந்த பயனும் கிடையாது. அது ஒரு பல்லித்தன்மை மிக்க தேசிய அரசாங்கமாக அமையுமாக இருந்தால், தமிழ் பிரதிநிதிகள் அதைக்குறித்து தீவிரமாக யோசிக்கலாம்.

எனவே தென்னிலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பைக் கண்டு தமிழ் மக்கள் உணர்ச்சிவசப்படத் தேவையில்லை. கிருணிகாவுக்கு ரசிகர் மன்றத்தை கட்டியெழுப்பவும் தேவையில்லை. இப்பொழுது சஜித் பிரேமதாச கூறுகிறார் ஜனாதிபதி முறையை அகற்ற வேண்டும் என்று. ஆனால் அவரும் இதற்கு முன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர். மட்டுமல்ல சந்திரிகாவும் அவ்வாறு போட்டியிட்டவர்தான். போட்டியிடுவதற்கு முன்பு ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்பார்கள். ஆனால் தேர்தலில் வென்றதும் அதை மறந்து விடுவார்கள். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை என்பது இலங்கைத் தீவின் ஜனநாயக இதயத்தை பலவீனப்படுத்தும் பல அம்சங்களில் ஒன்றுதான். ஆனால் அதைவிட ஆழமான அம்சங்கள் உண்டு. சிங்கள-பௌத்த ஒற்றையாட்சி கட்டமைப்புதான் இலங்கைத் தீவின் ஜனநாயக இதயத்தை தொடக்கத்திலிருந்தே பலவீனப்படுத்தியது. இச்சிறிய தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளாமைதான் எல்லாவற்றுக்கும்

# கொந்தளிக்கும் சிங்கள மக்கள். தமிழ்மக்களின் நிலைப்பாடு என்ன?




மூல காரணம். எனவே இங்கு தேவையாக இருப்பது யாப்பு மாற்றம். அந்த யாப்பு மாற்றத் துக்குள் ஜனாதிபதி முறைமையும் அடங்கும். இந்த அடிப்படையில் கோரிக் கைகளை முன்வைக் குமாறு தமிழ் தரப்பு எதிர்க்கட் சிகளை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு ஊக்குவித்து இது விட யத்தில் எதிர்க்கட்சிகளுடன் ஓர் அரசியல் உடன் படிக்கையை உருவாக்க வேண்டும். இது எரிகிற வீட்டில் லாபம் பிடுங்கும் அரசியல்தான். ஆனால் அது தவிர்க்க முடியாதது. கடந்த சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக தமிழ் வீடுகளை எரித்த அரசியல் அது. எனவே அப்படியோர் உடன்படிக் கையைச் செய்ய முடிந்தால் அடுத்த கட்டமாக சிங்கள மக்க ளோடு இணைந்து தெருவில் இறங்கலாம்.

தென்னிலங்கையில் நடப் பவைகளோடு ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் அந்த அளவுக்கு கடந்த 12 ஆண்டுகளில் போராட வில்லை என்பது உண்மைதான். பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் தம்மை நோக்கி வீசப்பட்ட கண்ணீர் புகைக் குண்டைத் திரும்பவும் போலீ சாரை நோக்கி வீசுகிறார்கள். போலீசாரின் தற்காலிகத் தடுப் புகள் உருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள். ஆர்ப்பாட்டக் காரர்கள். அதிரடிப் படையோடு நெற்றிக்கு நேரே வாக்குவாதப் படுகிறார்கள். எல்லாம் சரிதான், ஆனால் அவர்கள் அவ் வாறு எதிர்த்துப் போராடுவதால் அவர்களை யாரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் போவ தில்லை. இதையே தமிழ் மக்கள் செய்தால் நிலைமை என்னவாகும்? பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உள்ளே தூக்கிப் போட்டுவிடுவார்கள். கடந்த 12 ஆண்டு களாக தமிழ் மக்கள் மத்தியில் சட்டமறுப்பு போராட்டங்கள் பெருமெடுப்பில் தொடர்ச்சியாக நடக்காமைக்கு அதுவும் ஒரு காரணம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலிமையாக கேட்பதற்கு இது ஒரு பொருத்தமான சந்தர்ப்பம். கோட் டாவை வீட்டுக்கு அனுப்பத்துடிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்தக் கோரிக்கையை முன்வைப்பார்களா? பயங்கரவாத தடைச்சட்டம் இல்லையென்றால் தமிழ் மக்கள் சிங்கள மக்களை விட ஆக்ரோஷமாக போராட முன் வருவார்கள். ஏற்கனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்தான் தமிழ் அம்மாக்கள் காணாமல் போன தமது உறவுகளுக் காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கத்தக்கதாகவே கேப்பாபிலவில் பெண் கள் காணிக்காகப் போராடினார்கள். இரணைதீவுப் பெண் கள் தமது வீடுகளை மீட்டார்கள். காணாமல் ஆக்கப்பட் டவர்களுக்காகப் போராடும் அம்மாக்கள் அதிரடிப்படை யின் துப்பாக்கி வாய்க்கு நேரே நின்று நியாயம் கேட்கிறார் கள். ஆனால் இவையாவும் சிறிய மற்றும் தெட்டம் தெட்ட மான போராட்டங்கள்தான். தென்னிலங்கையில் இப் பொழுது நடப்பது போன்று பெருமெடுப்பிலான தொடர்ச் சியான போராட்டங்கள் அல்ல. பயங்கரவாத தடைச்சட்டம் இல்லை என்று சொன்னால் தமிழ் அம்மாக்கள் இதைவிட ஆக்ரோஷமாக போராடுவார்கள். அதை அரசாங்கம் தாங்காது.

கடந்த வாரம் கிருனிக்கா யாழ் பேருந்து நிலையத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். அந்த ஆர்ப்பாட்டத்தில் நடந்த சம்பவங்களின் விளைவாக யாழ்ப்பாணத்தில் அவருக்கு ஒரு சிறு ஆதரவு அலை ஏற்பட்டது. ஆனால் இதே கிருனிக்கா கடந்த 12 ஆண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்காகப் போராடும் அம்மாக்களோடு சேர்ந்து போராடினவரா? கேப்பாபிலவில், இரணைதீவில் தமிழ்ப் பெண்களோடு சேர்ந்து போராடினவரா? இல்லையே. இதுதான் தமிழ்மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண் டிய இடம்.

எனவே தென்னிலங்கையில் நடப்பவை ஒரு குடும்ப ஆட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சி என்ற அடிப்படையில் அதன் முற்போக்கான அம்சத்தை தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேசமயம் அந்த போராட்டங்களை கண்டு உணர்ச்சிவசப்பட்டு மெய்மறந்து நிபந்தனை யின்றி ஆதரிக்கவும் தேவையில்லை. இதை இந்த கட்டுரை சொல்லித்தான் தமிழ்மக்கள் செய்ய வேண்டும் என்றும் இல்லை. ஏனென்றால், ஏற்கனவே தமிழ்மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சிங்கள மக்க ளோடு பெருமெடுப்பில் இணையவில்லை. தென்னிலங் கையிலும் சரி வடக்கு கிழக்கிலும் சரி நிலமை அப்படித் தான் இருக்கிறது. கிளிநொச்சி வளாகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் போராடியபோது தமிழ் மாணவர்கள் அதில் பெரிய அளவில் இணையவில்லை. அப்படித்தான் யாழ் பல்கலைக்கழகத்திலும் சிங்கள மாணவர்கள் போராடிய பொழுது ஒப்பீட்டளவில் குறைந்தளவு எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள்தான் அதில் இணைந்தார்கள். இவ் வாறாக கடந்த வாரம் முழுவதும் நாடுபூராகவும் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கும் யதார்த்தம் எதுவென்றால் நாடு இவ்வாறான போராட் டங்களின் போதும் பெருமளவுக்கு இனரீதியாக பிளவுபட்டு நிற்கிறது என்பதே.

நன்றி: நிலாந்தன்

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான் ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள் சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



# இலங்கை வீழ்ச்சி உணர்த்தும் உண்மை!

**கோதை ஜோதிலட்சுமி – தினமணி**

ஏப்பிரல் 06, 2022

**ஓர் இனம் அழிய மற்றோர் இனம் வேடிக்கை பார்க்கு மானால் தனக்கும் அத்தகைய நிலை நாளை ஏற்படக் கூடும் என்ற புரிதல் இல்லாமல் போகுமானால் அந்த தேசத்தின் வீழ்ச்சியை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இலங்கையின் வீழ்ச்சி கற்றுக்கொடுக்கும் பாடம் இதுதான்.**

இதிகாசங்கள் தொடங்கி வரலாறு வரை இலங்கை தேசம் இடம் பெற்றிருக்கிறது. கம்பராமாயணத்தில் குபேரனின் வாசஸ்தலம் என்றும் ஐஸ்வரிய லட்சுமி குடிகொண்ட தேசம் என்றும் இலங்கை சொல்லப்பட்டிருக்கிறது.

“ஈழ நாட்டுக் குறம்” என்ற நூல், கனிபெற என்றொரு குறத்தி காதணியை வீச கடுவனதைக் கைபிடித்து காதலிதன் காதில் நனிஅழுத்த.. என்று கூறுகிறது.

அதாவது மரத்தில் இருக்கும் கனியை விரும்பிய பெண் அதனை வீழச் செய்வதற்காக தன்னுடைய காதணியைக் கழற்றி எறிகிறாளாம்.

மரத்திலிருந்த ஆண்குரங்கு காதணியைப் பிடித்து தன்னுடைய காதலி குரங்குக்கு அணிவிக்கிறதாம். இப்படி வளமான நாடு என்று இலங்கையை வர்ணிக்கிறது அந்நூல்.

அத்தகைய இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைகுலைவால் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. உலகமே இலங்கையை பரிதாபத் தோடு பார்க்கிறது. பஞ்சம் பீடித்திருக்கும் இந்த தேசத்திலிருந்து வெளியேறினால்தான் வாழ்வென்பதே சாத்தியம் என இலங்கையின் இளைஞர்கள் தங்கள் நாட்டைத் துறந்து வெளிநாடுகளில் தஞ்சமடைய பலநாட்டுத் தூதரகங்களின் வாயிலில் வரிசையில் காத்திருக்கின்றனர். உயிரைப் பணயம் வைத்து கடல் மார்க்கமாக தமிழ் நாட்டில் படகில் வந்திறங்கியவர்கள் அங்கே நிலவும் பஞ்சத்திற்கு சாட்சியாக நிற்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காத நிலைஇ உணவுப் பொருள்களின் விலை உயர்வு என்று சென்ற ஆண்டு முதலே இலங்கையில் பிரச்னைகள் தலைதூக்கின. கடந்த இரண்டு ஆண்டுகளில் கரோனா நோய்த் தொற்றினால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் ஒருபுறம். அதே நேரத்தில் அரசின் தவறான கொள்கை முடிவுகளால் தோன்றியிருக்கும் சிக்கல்கள் மறுபுறம். அரசு கையறு நிலையில் இருக்கிறது.

நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா போன்ற நாடுகளில் அதிக அளவில் கடன் வாங்கியும் வருகிறது. சர்வதேச செலாவணி நிதியத்திடம் கடன் பெறவும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்வதாக சொல்லப்படுகிறது.

இலங்கையில் பெரும்பாலும் மின் உற்பத்தி நிலையங்கள் டீசலை நம்பியிருப்பவை. டீசல் இறக்குமதிக்கான வசதி இன்மையால் அவையும் உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன. சில உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் பல மணி நேர மின்வெட்டு நீடிக்கிறது.

பெரும்பாலான இடங்களில் 13 மணி நேரம் வரை மின்வெட்டு இருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை அத்தியாவசியப் பொருள்களான பால் மாவு சர்க்கரை முட்டை பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு என அனைத்தும் இறக்குமதியை நம்பியிருப்பதால் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தட்டுப்பாடு விலைஉயர்வுக்குக் காரணமாகியிருக்கிறது.

ஒரு கிலோ பால் பவுடர் இரண்டாயிரம் ரூபாய் ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நான்காயிரத்திற்கும் மேல் ஒரு லிட்டர் பெட்ரோல் 254 ரூபாய் டீசல் ஒரு லிட்டர் விலை 176 ரூபாய். அதற்கும் கூட்டம் தள்ளுமுள்ளு.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ராணுவப் பாதுகாப்பு. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் பணத்திற்கு அலைந்தால் மற்றவர் பொருள்கள் வாங்குவதற்கான வரிசையில் காத்திருப்பது என்று இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கை நகர்கிறது.

இதனால் பொறுமை இழந்த மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொருளாதார நெருக்கடியைத் தடுக்கத் தவறியதால் அதிபர் பதவி விலகக்கோரி அதிபர் மாளிகை முன் பொதுமக்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர். காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும்இ தடியடி நடத்தியும் மக்களைக் கலைந்து போகச் செய்தனர்.

இந்தப் போராட்டத்தில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறையில் காவல்துறை தரப்பில் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் காவல்துறை வாகனங்கள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு வடக்கு கொழும்பு தெற்கு மத்திய கொழும்பு நுகேகொடை ஆகிய பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

போராட்டங்கள் தீவிரமடைந்த நிலையில் இலங்கையில் அவசரநிலை பிறப்பித்துள்ளார் அதிபர் கோத்தபய ராஜபட்ச. இது குறித்த அவரின் அறிவிப்பில்இ “பத்து நாள் இந்த அவசரநிலை நீடிக்கும் அதன்பின் நிலைமைக்கேற்ப முடிவு செய்யப்படும்”என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டங்கள் இந்த அவசரநிலையினால் செயலிழக்கும். அவசரநிலை காலங்களில் கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான உரிமை இல்லாமல் போகும்.

பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கும் நபர் என்று கருதும் ஒருவரை மூன்று மாத காலத்திற்கு எவ்வித விசாரணையும் இல்லாமல் சிறைபடுத்த முடியும். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவார் எனக் கருதும் எந்தவொரு நபரையும் கைது செய்யும் அதிகாரம் பாதுகாப்புப் பிரிவுக்கு இந்த சட்டத்தினால் கிடைக்கும். இதனால் சுதந்திரமில்லாத சூழல் ஏற்படலாம்.

அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் பொருள்களைப் பெறமுடியாத நிலையில் மக்களின் ஏமாற்றம் இவை அவர்கள் மனதில் அமைதியின்மையை ஏற்படுத்தியதால்தான் போராட்டங்கள் வெடித்தன.

அவசர நிலை அறிவிக்கப்பட்டதால் பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை சரியான முறையில் மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். பொது சொத்துகள் பாதுகாக்கப்படும்.

அவசர நிலையின் சாதக பாதகங்கள் ஒருபுறமிருக்க ஒரு தேசம் இத்தகைய நெருக்கடிக்கு உள்ளாவதற்கான காரணங்களை நோக்க வேண்டியது அவசியம். உலக நாடுகளின் தலைவர்களுக்கு இலங்கை பாடம் கற்றுக் கொடுக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் தேயிலை உற்பத்திஇ சுற்றுலா இவற்றைப் பொறுத்தே இருக்கிறது. உலகம் முழுவதும் நிலவும் கொள்ளை நோய்த்தொற்று குறித்த அச்சத்தால் சுற்றுலா சார்ந்த வருமானம் முற்றிலும் இல்லாமல் போயிருக்கிறது.

தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் நாட்டையே வாழ வைத்து வந்த நிலையில் நூறுசதம் இயற்கை முறை விவசாயத்தை முன்னெடுப்பதாகக் கூறி சென்ற ஆண்டு அரசு செயற்கை உரங்களுக்குத் தடை விதித்தது. இதனால் தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் பெருமளவில் குறைந்து விட்டன.

முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தால் படிப்படியாக செய்து வெற்றி கண்டிருக்க வேண்டிய திட்டம் நாட்டின் சரிவுக்கே காரணமாகி விட்டது.

அரசின் தவறான முடிவுகளும் ஊழலும் நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளன. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிக்குறைப்பு செய்வோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சியைப் பிடித்த கோத்தபய ராஜபட்ச ஆட்சிக்கு வந்ததும் அரசின் வரிகளை ஏறத்தாழ பாதி அளவுக்குக் குறைத்து விட்டார். இதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பினை சரிசெய்ய அவரிடம் திட்டம் ஏதுமில்லை. வரிவருவாய் குறைந்த பின்னர் மேம்பாட்டுத் திட்டங்கள் சாத்தியமற்றுப் போய்விட்டன.

அந்நிய செலாவணி இருப்பு குறைந்ததால் பண மதிப்பு குறைந்துள்ளதும் அதனால் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வும் மோசமான நிதி நிர்வாகத்தின் சான்றுகள். அத்தியாவசியப் பொருள்களுக்கு பிற நாடுகளை எதிர் பார்க்காமல் தங்கள் நாட்டில் அதற்கான உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லாமையும் ஒரு காரணம்.

இலங்கை மக்களின் இன்றைய நிலைக்கு ஆட்சியாளர்கள் மட்டுமல்ல மக்களும் ஒருவகையில் பொறுப்பேற்க வேண்டும். ஜனநாயக நாட்டில் சிறந்த நிர்வாகத்தை வழங்கும் கட்சிகளை மக்கள் ஆதரித்து ஆட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும். அப்படி இல்லாமல் இனவாதம் பேசும் கட்சிகளின் பக்கம் நிற்பது எந்நாளும் வளர்ச்சிக்கு வழிவகுக்காது.

இலங்கை அரசியல் எப்போதும் இனவாதத்தையே கையில் எடுத்து செயல்படுகிறது. சிங்களர்கள் தமிழர்கள் இஸ்லாமியர்கள் என்று தேசம் பிளவுபட்டு நிற்கிறது. ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவது அங்கே சாதாரணமாக இருக்கிறது. ஒரு தேசத்தின் வளர்ச்சி அந்த மக்கள் ஒன்று கூடி உழைக்கும் பொழுதுதான் சாத்தியமாகும்.

அரசியல்வாதிகள் தங்களின் சுயலாபத்திற்காகவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் இனவாத சிந்தனையை மக்கள் மனங்களில் விதைக்கிறார்கள். அரசியல்வாதிகளின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு சரியான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியது ஜனநாயகத்தில் குடிமக்களின் கடமை.

ஓர் இனம் அழிய மற்றோர் இனம் வேடிக்கை பார்க்குமானால் தனக்கும் அத்தகைய நிலை நாளை ஏற்படக்கூடும் என்ற புரிதல் இல்லாமல் போகுமானால் அந்த தேசத்தின் வீழ்ச்சியை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இலங்கையின் வீழ்ச்சி கற்றுக்கொடுக்கும் பாடம் இதுதான்.

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# வன்னிச் சங்கம் - கனடா.

# VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
8-3500 McNicoll Ave, Scarborough (ONT), M1V4C7.
Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.



**President:**
Mr. Ganeshalingam Veluppillai.

**Vice President:**
Mr. Sivaruban Mahalingam.

**Secretaty:**
Mr. Sivasuthan Ponnaiah.

**Vice Secretaty:**
Mr. Niththiyanantham Balasingam

**Treasurer:**
Mr. Vijayakumar Kumarasingam.

**Board Members:**
Mr. Kanagaradanam. R.
Mr. Nevethanan. G.
Mr. Vijikaran. S.
Mr. Sabesan K.
Mr. William. K.
Mr. Mahenthirarajah. S.
Mr. Kalanathan. C.
Mr. Nirojan. N.
Mr. Tamilcelvan. K.
Mr. Ashokkumar. V.
Mr. Karunainathan. M.
Mr. Gunabalasingam. B.
Mr. Sivakumaran. R.
Mr. Punniasingam. S.
Mr. Rajeswaran. S.
Mr. Uthayakumar.K.

**Internal Auditors:**
Mr. T. Sivapalu.
Mr. K. Ampalavanar.


12 April 2022.

அனைத்து வன்னிச்சங்க பொதுச்சபை உறுப்பினர்களுக்கும். அன்புடையீர்!

## வன்னிச் சங்கம் - கனடா. (V United Care for Kids Inc).
## பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்.

மேற்படி சங்கத்தினது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 21 வைகாசி 2022ம் திகதி நடாத்துவதற்கு நடைமுறை நிர்வாகசபையானது தீர்மானித்துள்ளது.
எனவே ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய வருடாந்தச் சந்தாப்பணம் செலுத்தவேண்டிய உறுப்பினர்கள் 2022ம் சித்திரை மாதம் 25ம் திகதிக்கு முன்னராக பொருளாளரிடம் நேரடியாகவோ அல்லது e transfer மூலமாகவோ அல்லது பொருளாளருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு வங்கி இலக்கத்தினைப் பெற்று வைப்புச் செய்யவேண்டும். சந்தாப்பணத்தினை வங்கியில் வைப்புச் செய்பவர்கள் வைப்புப் பற்றுச்சீட்டினைப் பொருளாளருக்கு Text or WhatsApp or Viber or email மூலமாக அனுப்பிவைப்பதோடு அதனைப் பொருளாளருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும். e transfer மூலமாக அங்கத்துவ பணம் செலுத்துபவர்கள் தங்களது பெயரினை உறுதிப்படுத்துவதோடு அதற்குரிய கடவுச் சொல்லையும் (Password) அனுப்பி வைத்தல் வேண்டும்.

புதிதாக ஆயுட்காலச் சந்தாப்பணம் செலுத்தவிரும்புபவர்கள் 200 டொலர்களையும், வருடாந்த சந்தாப்பணம் செலுத்துபவர்கள் ஆண்டொன்றுக்கு 20 டொலர்களையும் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறித்த தவணைக்குள் அங்கத்துவப் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்கள் மாத்திரமே இப் பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

பொதுக் கூட்டம்: காலம்: 21 வைகாசி 2022. பிற்பகல் 1.00 மணிதொடக்கம் 6 மணிவரை. *கோவிட் 19 கட்டுப்பாடுகள் தேவையேற்படின் கடைப்பிடிக்கப்படும்.*

இடம்: 635 **Middlefield Road, Scarborough (ONT)** ஐயப்பன் ஆலய மண்டபம்.

குறிப்பு: கோவிட் - 19 தொற்று காரணமாக கூட்டம் மண்டபத்தில் நடாத்தமுடியா நிலை ஏற்படுமாயின் **Zoom** மூலமாக நடாத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**பொ.சிவசுதன்.**
**செயலாளர்.**
V United Care for Kids Inc.
Secretary@vcarekids.org

குறிப்பு:- வன்னிச் சங்கத்தில் புதிய உறுப்பினராகச் சேர விரும்புபவர்கள் செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை 13 வைகாசி 2022க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

| | |
|---|---|
| மேலதிக தொடர்புகளுக்கு: | 416-644-1113, **Ex 201** |
| செயலாளர்: | 416-558-1917, |
| பொருளாளர்: | 647-**202**-8286. **Email:** vunitedcare4kids@gmail.com |


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com


R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
GRAPHIC DESIGN CONSULTANT
தங்களது அனைத்துவிதமான
அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
437 345 4203

## தொல்லியல் சுவடுகள்...



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்

# ஈழத்தமிழர் வரலாறு -06

பாளி இலக்கியங்கள் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவில் இருந்து புலம் பெயர்வதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்களை நாகரிக மற்ற இயக்கர், நாகர் எனக் கூறுகின்றன. வரலாற்றாசிரியர்கள் சிலர் நாகர்களைத் தமிழர்களாகவும், இயக்கர்களைச் சிங்களவர்களாகவும் அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் நாகர்களை குறிப்பிட்ட ஒரு மொழி பேசிய இனமாகவோ, குறிப்பிட்ட ஒரு சமூகமாகவோ இலங்கையில் இனங்காணபதற்கு வரலாற்றுத் தொடக்க காலத்தில் தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. நாகர்களைப் பற்றி குறிப்புக்கள், இலங்கையில் மட்டுமன்றி ஆசியாவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. இந்திய இலக்கியங்களில் இப்பெயர் அரசர்களைப் புலவர்களை சாதாரண மக்களைச் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் வரலாற்றுக் கால நகரங்கள், இராசதானிகள் நாக இனமக்கள் வாழ்ந்ததை நினைவுபடுத்தும் வகையில் பெயரிடப்பட்டுள்ளதை இன்னும் காணமுடிகிறது. இலங்கையில் நாகர்களைப் பற்றிய குறிப்புகள் பாளி இலக்கியங்களில் மட்டுமன்றி பிராமிக்கல்வெட்டுகளிலும் செறிவாக காணப்படுகிறது. இப்பெயர் அரசர்களையும் சிற்றரசர்களை மட்டுமன்றி சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நாக எனத் தொடங்கும் பெயர் தமிழ் சிங்கள மக்களிடையே பொது வழக்கில் இருந்தமை காரணம் எனலாம்.

இலங்கையில் பௌத்தமதம் செல்வாக்குப் பெறமுன்னர் நிலவிய இந்து மத்தில் நாகவழிபாடு முக்கிய அம்சமாக இருந்தது. ஆனால் பௌத்தம் பரவிய பின்னர் இவ்வழிபாடு இந்து மதத்தில் மட்டுமன்றி பௌத்த மத்திலும் செல்வாக்கு செலுத்தியது. இதனால் பௌத்த வழிபாட்டுச் சின்னங்களுடன் நாக உருவங்களும் முக்கிய தெய்வ உருவமாக வைத்து வழிபடப்பட்டது. இவ்வாறு நாக தெய்வம் பௌத்த, இந்து மதங்களுக்குரிய பொது வழிபாடாக ஆதியில் இருந்ததினால் இம்மதங்களுக்குரிய தமிழ், சிங்கள மக்கள் தமது வழிபாட்டுக் குரிய தெய்வத்தை முதன்மைப்படுத்தும் நோக்கில் தமது பெயர்களுடன் நாக என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். ஆயினும் காலப்போக்கில் நாகவழிபாடு தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதினால் நாக என்ற பெயர் தமிழ் மக்களின் பெயர்களிலும் கூடுதலான செல்வாக்குப் பெற்றதை வரலாற்று ரீதியாக காணமுடிகிறது.

பாளி இலக்கியங்கள் அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த தமிழர் பிராந்தியத்தை நாகதீபம் எனவும்  10 ஆம் நூற்றாண்டின் பின்னர் உத்தரதேசம் எனவும் கூறுகின்றன. மகாவம்சம் புத்தர் தனது இரண்டாவது விஜயத்தின் போது நாகதீபத்தை ஆட்சி செய்த இரு மன்னர்களிடையே ஏற்பட்ட போராட்டத்தை சமாதானமாக தீர்த்து வைத்ததாகக்கூறுகிறது. புத்தர் வருகை பற்றிய கதை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி.பி. 06ஆம் நூற்றாண்டில் தமிழர் செறிந்து வாழ்ந்த பிராந்தியம் நாகதீபம் என அழைக்கப்பட்டதையும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல இங்கும் அரசமரமொன்று தோன்றி வளர்ந்ததையும் இதன் மூலம் உணரமுடிகிறது. இதற்கு மேலும் சான்றாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனத்தில் இப்பிராந்தியம் நாகதீபம் எனவும், கி.பி. 02ஆம் நூற்றாண்டுக்குரிய தொலமியின் குறிப்பில் நாகதீபோய் எனவும், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் நாகநாடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடலாம். இத்தகைய ஒரு பெயர் இப்பிராந்தியத்திற்கு ஏற்பட்டமைக்கு இங்கு வாழ்ந்த மக்களிடையே நாகவழிபாட்டு மரபு ஆதியில் இருந்தமை காரணம் எனலாம். இன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு இடம் நாச்சியமார் மலை என அழைக்கப்படுகிறது. இப்பெயர் பிற்காலத்திலோ அல்லது தற்செயலாகவோ ஏற்பட்ட ஒன்றல்ல. இப்பெயருக்கு 2000 ஆண்டு கால வரலாறு உண்டு. இப்பெயரின் மூலம் 2100 வருடங்களுக்கு முன் இங்கு வாழந்த நாகர் என்ற மக்கள் குடியிருப்புகளை அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்ட தென்பதை பிராமிக் கல்வெட்டில் வரும் இடம்பெயரை அடிப்படையாக கொண்டு போராசிரியர் பரணவித்தானா நிறுவியுள்ளார். இன்று தமிழர்கள் பிராந்தியத்தில் நாகமுனை, நாகபடுவான், நாகர்கோயில் போன்ற இடப்பெயர்கள் பல உள்ளது. இப்பெயர்கள் நாகவழிபாட்டு நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய புராதன இடப்பெயர்களாக இருக்காலாம் என்பதை இவ்விடங்களில் கிடைத்துள்ள தொன்மையான தொல்லியற்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பாளி இலங்கியங்களிலும், பிராமிக்கல்வெட்டுகளிலும், அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சிலருக்கும், அக்கால மக்களுக்கும் உரிய பெயராக துல்லத்தநாக, கல்லத்தநாக, மகாநாக, ஈழநாக, மகல்லகநாக, குஜ்ஜநாக, குஞ்சநாக, ஸ்ரீநாக, கபதிநாக, பருமகநாக, பரதநாக, நாக, நாகுலி, கமணிநாக, நாகசேன, நாகலி, நாகராகி முதலான பெயர்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இப்பெயர்கள் தமிழ், சிங்கள மக்களுக்கு பொதுவானதாக இருந்திருப்பினும் பிற்காலத்தில் இப்பெயர்கள் சிங்கள மக்களிற்கிடையே செல்வாக்கிழந்து போக தமிழ் மக்களிடையே செல்வாக்குடன் விளங்குவதை இன்னும் நடைமுறையில் பயன்படுத்தப்படும் நாகன், நாகி, நாகம்மாள், நாகமணி, நாகமுத்து, நாகலிங்கம், நாகநாதன் ஆகிய ஆட்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. இவை 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று மரபு இலங்கைத் தமிழருக்கு இருந்தற்குச் சான்றாகும்.

சங்க காலத்தில் தமிழகத்தில் வடுகர் என்றொரு சமூகம் வாழ்ந்தது பற்றி பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய ஒரு சமூகம் இலங்கையில் வாழ்ந்ததற்குப் பிராமிக் கல்வெட்டுகளில் இது வரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் மசாவம்சம் வடுகன் என்ற தமிழன் கி,மு. 01ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகிறது. தலை நகரில் தச்சுவேலையில் ஈடுபட்ட இத்தமிழ்வடுகன் அப்போது சிவன் மன்னனின் ஆரசியாக இருந்த அனுலாதேவியை



திருமணம் செய்து ஒரு வருடம் இரண்டு மாதகாலத்திற்கு ஆட்சி செய்தான் என இந்நூல் கூறுகிறது. பெயரடிப் படையில் சங்ககால வடுகர் சமூகப் பெயரை இம்மன்னனின் பெயர் ஒத்திருப்பதால் இப்பெயர் குறிப்பிட்ட ஒரு சமூகத்ததைக் குறித்தா? அல்லது தனிநபருக்குரிய பெயரா? என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

சங்ககாலச் சமூக அமைப்பில் பல்வேறு சமூகப் பரிவுகளுடன் தமிழகத்தில் ஆட்சி புரிந்த சேர, சோழ, பாண்டிய அரசவம் சங்களும், இவர்களிக்கு திறை செலுத்திய பல சிற்றரசர்களும் உள்ளடங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் சமகாலப் பிராமிக் கல்வெட்டுகளில் இவ்வம்சப் பெயர்கள், இவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் செறிந்து காணப்படுகின்றன. சமகாலத்தில் இதையொத்த பெயர்கள் இலங்கையிலும் இருந் ததைப் பாளி இலக்கியங்களில் ஆங்காங்கே காணமுடிகிறது. ஆனால் இவர்களை இந்நாட்டோடு தொடர்பு படுத்தாது அவ்வப் போது அயல் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஆக்கிரமிப் பாளர்கள் என இந்நூல்கள் கூறுகின்றன. ஆனால் இலங்கை யிற் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்தால் தமிழகத்தி ல் கிடைத்த கல்வெட்டுகளை விடக் கூடிய அளவிற்கு சங்ககால சேரமன்னர்களைக் குறிக்கும் உதி, பாண்டியரைக் குறிக்கும் மாறன், பழையா, பண்டு சோழரைக் குறிக்கும் சோடா போன்ற பெயர்கள் இருப்பதினைக் காணமுடிகிறது. அப்பெயர்களைக் குறிக்கும் கல்வெட்டு தனியொரு நபரை மட்டும் குறிப்பிடாது அந்நபருக்குரிய குறுகிய கால (இரண்டு மூன்று மலைமுறை) வம்ச வரலாற்றையும் கூறுகிறது. அவ்வாறு கூறப்பட்டுள்ள நபர்கள் சிற்றரசர்களாக நிலக்குழுத்தலைவர்களாக, பிரபுவாக சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கப்பட்டனர். இப்பெயர்கள் தமிழ் அரசவம்சங்களைச் சார்ந்ததென சானவியலாளர் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் இப்பெயர்களால் அறியப்படும் தமிழ் சமூகத்தின் தொன்மை தமிழரின் செறிவு, நாட்டுரிமை என்பன பற்றி பாளி இலக்கிய மனோபாவத்தில் இருந்து விலகி ஆராயமுற்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே கல்வெட்டுக்களால் அறியப்படும் தமிழ்ப் பெயர்களை நோக்கும் போது சங்காலத்தை ஒத்த சமூக அமைப்பொன்று இலங்கையிலும் இருந்தமை தெரிய வருகிறது. பெளதிக அடிப் படையில் இலங்கை தனிப்பட்ட நிலப்பரைப்பைக் கொண்டிருந் தாலும் பண்பாட்டால் அது தமிழகத்துடன் பண்டுதொட்டு நெருங் கிய தொடர்பு கொண்டு வளர்ந்து வந்துள்ளது. பெளத்த மத்தின் வருகை தமிழகத்துடன் ஒத்த இலங்கையின் பொதுப் பண்பாட் டில் மத அடிப்படையில் இருவேறுபட்ட பண்பாடு தோன்றி வளரக் காரணமாயின. இவ்விரு பண்பாட்டு வளர்ச்சியிலும்



வல்லிபுர பொற்சாசனத்தில் நாகதீபம்

தமிழகத்தின் செல்வாக்கு கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தின. இதில் இலங்கைத் தமிழரின் பண்பாடு தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்தது. அந்த தொடர்பின் விளைவே சங்க கால சமூக அமைப்பு இலங்கையிலும் தோன்றி வளரக் காரணமாயின. சங்க கால அமைப்பில் மருமகன், சகலன் போன்ற உறவுமுறைகள் இரந்ததை இலக்கி யங்கள், பிராமிக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இத்தகைய உறவுமுறை இலங்கையிலும் இருந்ததை திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம், குருநாகல், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகள் உறுதிப் படுத்துகின்றன. இந்த ஒற்றுமை பாளி இலக்கியங்கள் கூறுவது போல, அல்லது வரலாற்றாசிரியர்கள் விளக்கமளிப்பது போல் தமிழர்கள் அயல் நாட்டிலிருந்து வர்த்தகராக, ஆக்கிரமிப் பாளராக வந்து இலங்கையில் குடியேறியதைச் சுட்டி நிற்க வில்லை. மாறாக பரம்பரையாக இந்த நாட்டில் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றது. நாம் முன்னர் குறிப்பிட்டது போல் சேர, சோழ, பாண்டிய வம்சங்களைக் குறிக்கும் பல்வேறு கல்வெட்டுகள் இலங்கையின் பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உருகுணையில் கண்டுபிடிக்கப்பட்ட பத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த பலரின் பெயர்களைச் சுட்டி நிற்பதோடு அக்கல் வெட்டுக்களில் பாண்டியரின் இலட்சனையான மீன் பன்னி ரண்டு இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பற்றி ஆராய்ந்த மயிலை சீனிவேங்கடசாமி இக் கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்தின் தொடர்பு இங்கிருந்ததை உறுதிப்படுத்து வதாகக் குறிப்பிட்டார். இத்தொடர்பு பாண்டியர் தமிழ் நாட்டிலி ருந்து இங்கு புலம்பெயர்ந்ததைக் குறிக்கவில்லை. மாறாக இங்கு வாழ்ந்த தமிழர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பால் அங்கிருந்து அரசவம்சங்களுக்குரிய பெயர்களைத் தாமும் சூடிக்கொண்டனர் எனக் கூறுவதே பொருத்தமாகும். தென்னிந்தியாவில் கூட மூவேந்தரது ஆட்சி பரவிய இடங்களில் தோன்றிய புதிய வம்சங்கள் தம்மைச் சேர, சோழ, பாண்டிய வம்சத்தவர் என அழைத்துக்கொண்டதை இங்கு நினைவுபடுத்தலாம். எனவே இலங்கையில் கிடைத்த தமிழ் சமூகம், அரசவம்சங்கள் தொடர்பான கல்வெட்டுகள் இங்கு வாழ்ந்த தமிழர்களைக் குறித்ததெனலாம். இந்த அரசவம்சங்களுக்கும் இங்கு ஆட்சி புரிந்த தமிழ் மன்னர் களுக்கும் இடையிலான தொடர்பு ஆராயத்தக்கது.

நன்றி: வெளிச்சம் 06.1995

பயணம் தொடரும்...

# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே

# "மகாவம்சம்"

# இன்றும் எழுதப்படுகிறது

# சிறீலங்காவின் அதிகரித்த இராணுவச் செலவீனங்களே பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணி! தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும்!

### வி. உருத்திரகுமாரன் – நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஏப்பிரல் 06.2022

இன்று இலங்கைத்தீவு எதிர் கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு சிங்கள அரசின் தமிழ்மக்களுக்கு எதிரான இனவழிப்புப்போரும், பெருந்தொகை பணம் இராணுவச் செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தமையும் கூட முக்கிய காரணிகளாக அமைகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிறீலங்கா இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் அவர்கள் தெரிவிததுள்ளார்.




இலங்கைத்தீவின் இன்றைய பொருளாதார நெருக்கடி குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் பொருந்தொற்று, அதனால் ஏற்பட்ட சுற்றுலாத்துறை வீழ்ச்சி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் ஏற்பட்ட பாதிப்பு, சிறீலங்காவின் வரிக்குறைப்பு மற்றும் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட்ட உர மாற்றீடுகள் என இன்னோரன்ன காரணங்கள் கூறப்பட்டாலும், தமிழின அழிப்புப் போரும், பெரும் இராணுச் செவீனமும் இந் நெருக்கடி ஏற்படுவதற்கு முக்கிய பங்கு வகித்தமையின சிங்கள மக்களும், அனைத்துலக சமூகமும் கவனத்தில் எடுக்கவில்லை என்பதனை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக சிங்கள் அரசு நடத்திய கொடிய இனவழிப்பு யுத்தத்துக்கும் முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும், அதனைத் தொடர்ந்து தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து தமிழர்களை அடக்கி வைக்கவும், கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கு தமிழர் தேசத்தினை உள்ளாக்கவும் சிறீலங்கா அரசு பெரும் இராணுவச் செலவீனங்களைச் செய்து வந்தது. தொடந்தும் செய்து வருகிறது.

கிடைக்கப்பெறும் தரவுகளின்படி மூன்றாம் கட்டஈழப் போர்க் காலத்தில் (1995-2002) 1346 மில்லியன் டொலர்களும், சமாதான காலப்பகுதியில் (2002-2005) 1056 மில்லியன் டொலர்களும், நான்காம் கட்ட ஈழப் போரில் (2006-09) 1499 மில்லியன் டொலர்களும் தமிழ் மக்களுக்கு எதிரான போருக்காக தனது இராணுவச் செலவீனங்களாக சிறிலங்கா செலவு செய்துள்ளது.

2009 ஆம் ஆண்டு காலத்தின் பின்னரும் தனது இராணுவத்தினையும், விசேட அதிரடிப்படையினையும், காவல் துறையினையும் பெருமளவில் பேணிக் கொண்டு தனது செலவீட்டில் 11 வீதத்தினை பாதுகாப்புக்கு என ஒதுக்கி வருகிறது. (2009-17) இக் காலப்புகுதியிலும் போர்க்காலத்தினை விட அதிகமாவே 1716 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

உலக அளவில் தனது இராணுவத்தினை 99 வீதமான படையினரை இயங்கு நிலையில் வைத்திருக்கும் நாடாக சிறீலங்கா மாறியுள்ளதோடு, ஆண்டுக்கு 170 மில்லியன் டொலர்களை இராணுவத்தின் ஓய்வூதியத்துக்கு செலவிடுகின்றது.

போரின் ஓய்வுக்கு பின்னராக பாதுகாப்பு தரப்பினரின் சம்பளத்தினை 45வீதத்தினால் அதிகரித்துள்ள சிறீலங்கா அரசு, தனது இராணுவத்தின் பெரும்பகுதியினை தனது ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தாயகத்தில் நிலைநிறுத்தியுள்ளது.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, தமிழர்கள் ஆக்கிரமிக்கப்புக்கு உள்ளாகியுள்ள தமது தேசத்தினை விடுவிக்கவும், இனப்படுகொலைக்கு நீதி வேண்டியும், அரசியல் இறைமையை அடைந்து கொள்ளவும் அமைதிவழியில் போராடி வரும் இன்றைய நிலையில், சிறீலங்காவின் இந்த இராணுவம் செலவீனங்களின் அவசியம் குறித்து சிங்கள மக்களும், சர்வதேச சமூகமும் பாராமுகமாக இருப்பது எமக்கு கவலையளிக்கிறது.

“தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறன் சிறீலங்கா இராணுவத்துக்கு இருக்கிறது” என இலங்கைக்குள் இந்தியப் படையினர் நுழைந்ததாக சமீபத்தில் வெளியான செய்திகள் தொடர்பில் சிறீலங்காவின் பாதுகாப்புச் செயலாளரும் ஜெனரலுமான கமல் குணரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

உள்நாட்டில் அச்சுறுத்தல் இல்லையெனவும், எந்தவொரு வெளிநாட்டு அச்சுறுத்தலையும் தமது இராணுவம் எதிர்கொள்ளும் நிலையில் உள்ளதெனவும் சிறீலங்காவின் இராணுவ தரப்பு தொடர்சியாக வெளியிட்டு வருகின்ற கருத்தானது இந்தியாவை நோக்கியானதாவே கருதப்பட வேண்டியது. இது, இந்தியா இலங்கைத்தீவை நோக்கி படையெடுக்கும் என்ற சிங்கள தேசத்தின் மகாவம்ச மனோபாவத்தினை வெளிப்படுத்துகின்றது.

பொருளதார நெருக்கடியில் மக்கள் சந்தித்து வருகின்ற வாழ்வாதார நெருக்கடிகளுக்கு தோழமையுடன் உதவி செய்யும் நோக்கில் சிறீலங்காவுக்கு மனித நேய உதவிகளை வழங்கி வரும் இந்தியா, சிறீலங்காவின் இந்த கட்டு



கடங்கா இராணுவ செலவீனங்கள் எதற்காக என்ற கேள்வியினை எழுப்ப வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தேசத்தில் இருந்து இராணுவத்தினை முற்றாக விலக்குவதற்கான அழுத்த்தினை இந்தியா கொடுக்க வேண்டும் இக் கோரிக்கைகளுக்கான தூண்டுதலை தமிழக மக்கள் இந்திய அரசினை நோக்கி முன்வைக்க வேண்டும்.

சர்வதேச சமூகம், சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் பிரச்சினகளைக் கவனத்தில் எடுக்கும் போது, தமிழ்மக்களின் தனித்துவமான தேசிய இனப்பிரச்சனையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையில் இரு முக்கியகூறுகளாக நீதிக்கான பொறுப்புக்கூறல், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வு ஆகியன கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடி, வாழ்வாதார பிரச்சனை காரணாமாக வீதிக்கு இறங்கி போராடி வரும் சிங்கள உறவுகளை தோழமையோடு காண்கின்றோம். ஆனால் ஆட்சி மாற்றம் என்பது இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக அமையாது என்பதனை தெரிவிப்பதோடு நிலையான தீர்வு என்பது தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படும் போதே நிகழும் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.
ஆழ வேரோடிப்போயுள்ள சிங்கள பௌத்த இனவாத கட்டமைப்பில் உருப்பெற்றுள்ள சிங்கள அரச இயந்திரத்தில், தமிழ்மக்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான வெளியில்லை என்பதே யதார்த்தம்.

ஈழத் தமிழர் தேசத்தின் தாயகப்பிரதேசம் சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால், தமிழ் மக்களும் இந் நெருக்கடிக்குள் சிக்குண்டு போயுள்ளார்கள். சிங்கள அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படாதவகையில் தமிழர் தாயகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவிகளை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகள் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு

நூல்: **தமிழீழ உட்கட்டுமானம்**

**பொருளடக்கம்**


1. தமிழீழத்தின் பிரதான நகரங்கள்
2. தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான நிலையங்கள்
3. தமிழீழத்திற்கான மின்சாரம்
4. தமிழீழுத் தொலைத் தொடர்பு
5. நீர் வழுங்கலும் வடிகாலும், பகுதி 1
6. நீர் வழுங்கலும் வடிகாலும் பகுதி 2
7. நீர்ப்பாசனமும், நீர் முகாமையும்
8. தமிழீழ நிலப்பயன்பாடு
9. தமிழீழத்தின் கைத்தொழில்


### தமிழீழத்திற்கான பிரதான நகரங்கள்

**1. ஆரம்பநிலை – குழுநிலை**

1.1 தமிழீழத்துக்கான உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராய்வதற்கென 1993 ஜூலை 15-ம் நாள் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இறைமையும் தன்னாட்சியும் கொண்ட தமிழீழம் (இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசம்) தனக்கேற்றதான வகையில் எதிர்கால உட்கட்டுமான அமைப்பைத் தீர்மானிப்பது தொடர்பான பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

1.2 உட்கட்டுமான அமைப்புத் தொடர்பாக ஆக்கபூர்வமாகவும், முழுமையாகவும் ஆராய்வதற்கு ஏற்றதாக எட்டுக் (08) குழுக்கள் அக்கூட்டத்தில் தெரியப்பட்டன. அக்குழுக்கள் வருமாறு:-

1. நகரங்கள்
2. தெருக்கள், இரும்புப்பாதைகள், விமான நிலையங்கள்
3. கடற்போக்குவரத்தும், துறைமுகங்களும்
4. மின்சாரம்
5. தொலைத்தொடர்பு
6. நீர்ப்பாசனமும், நீர் முகாமையும்
7. கைத்தொழில்
8. நீர் வழுங்கலும், வடிகால் அமைப்பும்

1.3 ஒவ்வொரு செயற் குழுவும் அதற்கெனச் சிறப்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயம் தொடர்பாக முதலில் விரிவாக ஆராயவேண்டுமென்றும், அதன் பின் ஏனைய செயற் குழுக்களுடன் கலந்துரையாடி விடயங்களைத் தொடர்புபடுத்தி ஆராயவேண்டுமென்றும், அவற்றின் அடிப்படையிற் பெருந்திட்டம் (Master Plan) உருவாக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**2. நகரங்களுக்கான செயற்குழு**

2.1 தமிழீழத்தின் பிரதான நகரங்களைத் தெரிவு செய்வதற்கெனத் தெரியப்பட்ட செயற்குழு ஒன்பது (09) பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள்:

1. திரு. எஸ். பீ. ஜெயலிங்கம் - கட்டிடக்கலைஞர்
2. திரு.சே. இராஜேஸ்வரன் - குடிசார் பொறியியலாளர்
3. திரு.ந. செந்தில்குமரன் - கட்டிடக்கலைஞர்
4. திரு. ஐ. பாலசுப்பிரமணிம் - விரிவுரையாளர்
5. திரு. எம். சின்னத்தம்பி - விரிவுரையாளர்
6. திருமதி. மல்லிகா இராஜரட்ணம் - கட்டிடக்கலைஞர்
7. திரு. அ. சந்தியாப்பிள்ளை — நில அளவையாளர்
8. திரு. பெ. ஜீ. சதானந்தன் - பொறியியலாளர்
9. திரு. ரமேஷ் - இணைப்பாளர்

2.2 இக்குழு, நாடு, மாவட்டங்கள், நகரங்கள் என்ற தொடர் நோக்கு அடிப்படையிற் சிந்திப்பது அவசியமாயிருந்தது. நாட்டின் எல்லைகள் தெரிந்தனவாக இருப்பதால், மாவட்ட எல்லைகளை நிர்ணயித்தல் பற்றியே கவனம் செலுத்தவேண்டியதாய் இருந்தது.

**3. நிர்வாகப்பிரதேசங்களின் நிர்ணயம்**

3.1 நிர்வாகப் பிரதேசங்களாக அமையும் மாவட்டங்களின் பரப்பு, எல்லை தொடர்பாக ஆராய்ந்து அதனடிப்படையில் முன்மொழிவு செய்யவேண்டும் என இச் செயற்குழு கருதியது. தற்போதுள்ள மாவட்டங்கள் சிறீலங்கா அரசின் தேவைக்கேற்பவே உருவாக்கப்பட்டிருப்பதால் தமிழீழத்தின் வளர்ச்சிக்கும், எதிர்காலத் தேவைகளுக்கும், அபிவிருத்திக்கும் போதுமானவையாக அமையமாட்டா என்று எமது அபிவிருத்தி இலக்குகளுக்கும், நீர்வாக முறைமைகளுக்கும் ஏற்ற வகையில் புதியனவாகவும், கூடி எண்ணிக்கையிலும், (மாநிலங்கள்) நிர்வாகப் பிரதேசங்கள் தீர்மானிக்கப்படுத்தல் அவசியம் என்றும் இக்குழு கருதியது. நிர்வாகப் பிரதேசங்கள் மாநிலங்கள் என்றழைக்கப்படும்.

3.2 மாநிலங்களின் பரப்பளவு, எல்லைகள் பற்றி நிர்ணயம் செய்வதற்குப் பல அடிப்படையான தகுதி விதிகள் கவனத்திற்கு கொள்ளப்பட்டன அவையாவன:

3.2.1 புதிதாக வகுக்கப்படும் மாநிலங்கள் அனைத்தும் சமமானதும், சீரானதுமான வளர்ச்சியைப் பெறக்கூடியதாகவும், அதற்கேற்ப அப்பிரதேசங்களிடையிலான வேறுபாடுகளுக்கு இடமளிக்காத வகையிலும், இயன்றளவு எல்லா வகையான வளங்களையும் (கடல், விவசாயம், கைத்தொழில்) எல்லாப்பிரதேசங்களும் பெறக்கூடியதாகவும் அமையவேண்டும்.

3.2.2 மாநிலங்களை வகுக்கும் போதும், அவற்றின் எல்லைகளை நீர்ணயம் செய்யும் போதும் கூடியளவு புவியியல்சார் பௌதீக அம்சங்களுக்கு (ஆறுகள், ஏரிகள், கடனீரேரிகள்) முன்னுரிமை கொடுத்தல் அவசியம்.

3.2.3 புதிய மாநிலங்களை வகுக்கும் போது தமிழீழத்தின் எதிர்காலத்தேசியத் தேவைகளுக்கு முன்னுரிமை வழுங்குதல் வேண்டும்.

3.3 புதிய மாநிலங்களும், எல்லைகளும்:
தமிழீழத்தின் புதிய மாநிலங்கள் பல முன்மொழியப்படுவதுடன், தேவைக்கேற்ப தற்போதிருக்கும் மாவட்டப் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டும், ஒன்றிணைக்கப்பட்டும் உள்ளன. அவ்வாறான நிர்வாகப் பிரதேச எல்லைகள், பரப்பளவு நிர்ணயம் தொடர்பாகப் பின்வரும் அம்சங்கள் இக்குழுவினால் முன்மொழியப்படுகின்றன.

3.3.1 தமிழீழத்தில் மொத்தமாக இருபது (20) மாநிலங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்குமுரிய பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன.




3.3.2 மாநிலங்கள் (மாவட்டங்கள்) எனப்படும் இவ்ஆட்சிப் பிரதேசங்கள் தற்போதைய மாவட்டங்களை விடப் பரப்பளவிற் சிறியவை. எனினும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பார்க்கப் பெரியனவாகும்.

3.3.3 தமிழீழத் தேவைகள், இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டம் இரண்டாகவும், கிளிநொச்சி மாவட்டம் மூன்றாகவும், மன்னார் மாவட்டம் இரண்டாகவும், புத்தளம் மாவட்டம் மூன்றாகவும், திருகேணமலை மாவட்டம் மூன்றாகவும், மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாகவும், அம்பாறை மாவட்டம் இரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து மாங்குளம் மாநிலம் எனப் புதிய பிரதேசம் உருவாக்கப்பட்டுள்ளது.

3.3.4 யாழ்ப்பாணக் குடாநாடு இயற்கையாகவே தொண்டைமானாறு - நாவற்குழி நீரேரியினால் வலிகாமம் பிரதேசத்திலிருந்து தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்கள் பிரிக்கப்படுகின்றன. இதனடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாடு இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

3.3.4.1 நல்லூர் மாநிலம்: இப்பகுதியில் தற்போதைய வலிகாமமும், தீவகமும் அடங்கும், இங்கு சனத்தொகை அதிகாமாயிருப்பதோடு வளமான செம்மண்ணும் உண்டு.

3.3.4.2 வறணி மாநிலம்: இப்பகுதியில் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்கள்

# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM




அடங்கும். இங்கு சனத்தொகை குறைவாகவே காணப்படுகிறது.

தென்மராட்சியில் நெற்பயிற் செய்கை இடம் பெறுவதோடு, பளைப்பிரதேசத்தில் தென்னைப் பெருந்தோட்ட அபிவிருத்தயும் காணப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியில் கடல்வள அபிவிருத்திக்குப் போதிய வாய்ப்புண்டு. வடமராட்சிக் கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்குத் திட்டமிடல் அவசியம்.

வறணி நிர்வாகப் பிரதேசத்தில் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இங்கு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் அறிமுகப்படுத்தக் கூடியளவுக்கு நிலமும் ஏனைய வளங்களும் உள்ளன.

3.3.5 கரைச்சி மாநிலம்: இது கிளிநொச்சி, பரந்தன், வட்டக்கச்சிப் பகுதிகளை உள்ளடக்கியது. இதன் வடக்கு எல்லையாக யாழ். குடா நீரேரியுள்ளது. விவசாயம் இப்பிரதேசத்தின் பிரதான வளமாகும்.

3.3.6 பூநகரி மாநிலம்: இதன் மேற்கு எல்லை மன்னார் வளைகுடாவாகும். பூநகரி பெருநிலப்பகுதி ஆதிக்குடியிருப்புக்கள் காணப்பட்ட பிரதேசமாகும். இங்கு நெற்செய்கைகள் பிரதானமானதாகும்.

3.3.7 முல்லைத்தீவு மாநிலம்: இது முன்னைய முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் பகுதியைக் கொண்டதாகும். இதில் மனணலாறுப் பிரதேசமும் அடங்குகிறது. இதன் கிழக்குக்குக் கரையோரம் வங்காள வரிகுடாவாகும். கடல், வளம், விவசாய வளம் என்பன இப்பகுதியில் பிரதானமானவையாக உள்ளன.

3.3.8 மாங்குள மாநிலம்: இது தற்போதைய முல்லைத் தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். வடமாகாணத்தின் பிரதான நிர்வாக மையம் (மாநகரம்) மாங்குளத்தில் அமையும். இதனைக் கருத்திற் கொண்டு இப்பிரதேசம் பரப்பளவில் பெரிதான அமையுமாறு நிர்ணமிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக ஆராயுமிடத்து, மாங்குளத்தில் ஒரு மாநகரம் அமைப்பதற்கேற்றளவு நீர்வளம் இல்லையென்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டது. அத்துடன் வளமான காடு அழிக்கப்படும் அபாயமும் ஏற்படும் என்றும், இதனால் வட மாநிலத்தின் தலைநகர் முறிகண்டியில் அல்லது கொக்காவிலில் அமைக்கப்படலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.3.9 தற்போதைய மன்னார் மாவட்டம் மாந்தை, மடு என்ற இரண்டு நிர்வாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

3.3.9.1. மாந்தை மாநிலம்: இது மன்னார், தலைமன்னார், திருக்கேதீஸ்வரம், கட்டுக்கரைக் குளம் என்பவற்றை உள்ளடக்கும். இங்கு நெற்செய்கையும், கடல் வளம் அபிவிருத்தியடைவது இலகுவாக இருக்கும். தரமான களிமண் வளமும் உண்டு.

3.3.9.2 மடு மாநிலம்: இப்பகுதி பிரதானமாகக் காடுகளைப் பேணும் இடமாக அமையும். மடு தேவாலயம் இப்பகுதியிலிருப்பதால் இதற்கு முக்கியத்துவம் உண்டு.

3.3.10 வவுனியா மாநிலம்: இப்புதிய வவுனியாப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவதற்குக் கால் நடை அபிவிருத்திக்கு முதன்மையளிக்க வேண் டும். இங்கு ஏற்கனவே சனத்தொகை உண்டு.

3.3.11 (1) திருகோணமலை மாநிலம்: **தமிழீழத்தின் தலைநகர் இப்பிரதேசத்தில் அமையும்.** தலைநகரின் நிர்வாகப் பிரதேசமாக இதன் அயற்பகுதிகள் அபிவிருத்தியடையும். சீனன் குடா, தம்பலகாமம் என்பன இதில் அடங்கும்.

(2) குச்சவெளி மாநிலம்: தற்போதைய வட திரு கோணமலை மாவட்டம் இப்பகுதியில் அடங் கும். இதன் வடக்கு எல்லை தற்போதைய முல்லை - திருகோணமலை மாவட்ட எல்லை யாகும். தெற்கு எல்லை திருகோணமலை — ஹொரவுப்பத்தானை நெடுஞ்சாலையும் நிலா வெளியும் ஆக அமையும்.

(3) மூதூர் மாநிலம்: இதன் எல்லைகள் மகா வலிகங்கையாகவும் மற்ற எல்லை தற்போதைய திருகோணமலை - மட்டக்களப்பு எல்லையாகவும் உள்ளது. இப்பிரதேசத்தில் விவசாயம், கடல் என்பன பிரதான வளமாக அமைகின்றன.

3.3.12 மட்டக்களப்பு மாநிலம்:

வாகரை மாநிலம்: இது புதிய நிர்வாகப் பிரதேசம். பெரியளவு நீர்ப்பரப்புடையதாகும். தற் போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதி யாகு இது அமையும். இதன் தெற்கு எல்லை முகுந்தன் ஆறு ஆகும்.

3.3.13 அம்பாறை மாவட்டம் இரு மாநிலங்களாகச் சம நிலப்பரப்புடையதாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நெற்செய்கையும், விலங்கு வேளாண்மையும் இங்கு பிரதானமானவை.

(1) அக்கரைப்பற்று மாநிலம்
(2) பொத்துவில் மாநிலம்

வெல்லாவெளிப்பிரதேசம் தற்போதைய அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் பகுதிகளாக இருக்கும். மட்டக்களப்புப் பிரதேசத்தின் தெற்கு எல்லைப் பகுதியாகப் பட்டிருப்பு அமையும். இப்பிரதேசமும் சனத்தொகை கூடிய பகுதியாகக் காணப்படும்.

3.3.14 புத்தளம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

(1) அறுவாக்காடு மாநிலம்
(2) புத்தளம் மாநிலம்
(3) சிலாபம் மாநிலம்

தொடரும்...

# உலக வணிகம்
# ULAGA VANIKAM 2022

# வெளிவந்துவிட்டது




இப்பொழுது அனைத்து தமிழர் வியாபர நிலையங்கள்,
உணவகங்கள் மற்றும் அலுவலகங்களிலும்

**'உலக வணிகம் 2022'**

கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203**

# தமிழர் இதயமெங்கும் வேரோடி விட்ட விருட்சம்

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது.
ஒரு அக்கினி.

ஒப்பற்ற விடுதலைத் தீயென
பிரபஞ்சமெங்கும் தன்னையே
பிரகடனஞ் செய்தபடி...

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது
ஒரு
அக்கினி
அமைதிப்படையின்
அராஜகத்திற்கு
முற்றுப்புள்ளி வைக்க
முழங்கிய சங்கு
அந்த
பாரத அரசின்
கண்மூடித்தனத்தால்
கண்மூடிவிட்டது.

அகிலத்தின் செவிகளையே
அதிர வைத்த
இந்த
சங்கின் சப்தத்தால்...
நிச்சயம்
ஒரு சுதந்திர மண்டலம்
ஜனனமாகும்.

தமிழ் நெஞ்சங்களை
தட்டி எழுப்பிய
ஒப்பற்ற முழக்கத்தின்
உரிமைக் காரியாம்
இவளின்
கல்லறையை
கௌரவித்து வைப்போம்.

இவளின் கல்லறையில்
கற்களைப் பதிக்காதீர்கள்
உலகிலுள்ள
ஒலி அலைகள் அனைத்தையும்
ஒன்று சேர்த்து வாருங்கள்
விடுதலை முழக்கத்தால்
வீடு கட்டுவோம்.

விழிகாணாத் தொலைவிலுள்ள
விண் கோள்களும்
இவளின்
விடுதலை முழக்கத்தை
செவிமடுக்கட்டும்.

தாயே...
மனிதக் குழந்தையின் பிரசவிப்பில்
மரணம் உன்னை
மணக்க வந்து
மானபங்கப் பட்டதாம்.

சமாதானக் குழந்தையின்
பிரசவிப்பில்
உன்னைச்சந்திக்க
சாவுக்கேன்
சந்தர்ப்பமளித்தாய்?

உன்
ஆவி பிரிந்த
அந்த
அவல நொடிப் பொழுதில்
உலகத்தின் உயிரினமெல்லாம்
ஒன்றுகூடி அழுத
ஓர் அதிசயம் நடந்தது.

சமாதானத்திற்கான நோபல் பரிசா?
இவளுக்கா!
சீ... எடுத்தெறியுங்கள்
கண்டவற்றையெல்லாம் ஏன்
காவித் திரிகிறீர்கள்?
இப்போதுதான்
உண்மையான நோபல் பரிசு
உருவாகியிருக்கிறது.




உலக சமாதானத்தின்
உன்னத பரிசாக
இனிவரும் நாட்களில்
இவளையே வழங்குவோம்.

அலைகள்
அடித்துப் புரளுகின்றனவா?
சமுத்திரங்களில் இவளின்
சாம்பலைக் கரையுங்கள்!
மேகங்கள் ஒன்றோடொன்று
மோதிக் கொள்ளுகின்றனவா?
இவளின்
சமாதான முழக்கத்தை
வானத்திற்கு வழங்குங்கள்!

புயற் காற்றா?



அது இனி வரவே வராது
காற்று முழுவதிலும்
இவளின்
சமாதான மூச்சல்லவா
சங்கமித்திருக்கிறது.

அமைதி மண்டலத்தின்
அத்திவாரமாக
புதைகுழி சென்ற
பொக்கிசமே...!
நீ
ஆராய்ச்சியாளர்களுக்கு
அதிசயம்!

ஈழத்தமிழரின்
இதயமெங்கும்
வேரோடிவிட்ட
விருட்சம்

படுகொலைகளை நிறுத்தக் கோரி
உன்னையே
பலி கொடுத்தாய்
பசியோடு வயிற்றைப்
பற்றி எரிய விட்டாய்.

உன் மரணச் செய்தி கேட்டு
உலகின்
மனச்சாட்சியே
மனவருத்தப்பட்டது.

இங்கிதம் தெரியாத – அந்த
இந்தியப்படையோ
உன்...
சமாதியில் ஏறி நின்று
சண்டை போட்டது.

இந்திராவின் இளைய மகன்
இப்போது
இரண்டாம் கட்சியில்
இருக்கிறார்.

அவர்
வெளியே உலாவ விட்ட
வேட்டை நாய்களையெல்லாம்
வி.பி. சிங் இப்போ
வீட்டுக்கு அழைத்து விட்டார்.

கௌரவமாகத் திரும்பிப் போகிறோமாம்.
"கல்கட்" கூறியிருக்கிறார்
கௌரவத்திற்கும்
களங்கத்திற்கும்
வேறுபாடு விளங்காதவன்.

சூரியனிடம் சொல்லுங்கள்
வெப்பத்தை
வெளியிட வேண்டாமென்று
கங்கைகளை
காவிச் செல்லா வேண்டாமென்று
பூமிக்குச் சொல்லுங்கள்
உணவுப் பொருட்களை
உற்பத்தி செய்யும்படி.

நீரும் உணவும்
அவளின்
நினைவுச் சின்னமல்லவா?

காப்பாற்றி வைத்திருக்கும்படி
உலகின்
கடைசி உயிருக்கும்
கட்டளை பிறப்பியுங்கள்.

இவளின் மரணம்
மக்கள் யுத்தத்தின் ஜனனம்.

அதோ...
இவளின்
சுதந்திரப் பாதையில்
சுவடுகளைப் பதிக்க
கோடி மக்கள்
கொடி பிடித்து வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகள். மகளிர் முன்னணி
-1992 –

# தமிழீழ ஈகைச்சுடர்
# அன்னை பூபதி

## 34 ஆம் ஆண்டு நினைவு நாள்

**உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி**

**Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam**

நாட்டுப்பற்றாளர் நாள்

ஏப்ரல் 19

மண்ணில்: 03.11.1932

ஈகைச்சாவு: 19.04.1988



அன்னை

# பூபதி கணபதிப்பிள்ளை

**Annai Poopathy Kanapathipillai**

கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்

## அன்னை பூபதிக்கான மலர் வணக்க நிகழ்வு

இடம்: நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
அரச உறுப்பினர் பணிமனை
445 Milner Ave. Unit 11
Scarborough ON M1B 2K4
நேரம்: 6:00 PM - 8:00PM

தொடர்புகளுக்கு: மகாஜெயம் மகாலிங்கம் பாராளுமன்றம் உறுப்பினர், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

**647.262.5587**

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் – The Thirst of Tamil is the Homeland of Thamileelam" சங்கத்தமிழ்